பாரெலாம் பரந்து தமிழர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

பாரெலாம் பரந்த தமிழர்

Dr. S. JEAN LAWRENCE
~~Principal Investigator - U.G.C. Major Research Project~~
Professor, Faculty of Tamil Language & Lingustics
International Institute of Tamil Studies
C.I.T.Campus, T.T.T.I. Post, Chennai - 600 113

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சி.ஐ.டி. வளாகம், தரமணி (அஞ்சல்), சென்னை-600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Pārelām Paranta Tamiḻar
Publisher	:	International Institute of Tamil Studies, T. T. T. I. Post Taramani, Madras-600 113
Publication No.	:	194
Language	:	Tamil & English
Edition	:	First
Date of Publication	:	December, 1994
Paper used	:	Tamil Nadu Creamove 16 kg
Size of the Book	:	21X14 cms
Printing types used	:	10 point
No. of pages	:	vi+132+xviii=156
No. of Copies	:	1200
Price	:	Rs. 25/-
Printers	:	Kavinkalai Achagam 2/141 Kandhasami Nagar Palavakkam, Madras-600 041 Phone 4927721
Binding	:	Card Board
Artist	:	A.S. Natarajan & Raja
Subject	:	Tamils and Tamil Studies—World wide

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை-600 113.

டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்

29-12-1994

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1976-இல் முனைவர் பொன். கோதண்டராமன் எழுதிய 'உலகில் தமிழும் தமிழரும்' என்ற நூலையும் 1982-இல் முனைவர் ந. கடிகாசலம் எழுதிய 'தமிழும் தமிழரும்' என்ற நூலையும் வெளியிட்டது. இவ்விரு நூல்களின் விரிவாக்கத் திட்டமாக, 'பாரெலாம் பரந்த தமிழர்' என்ற திட்டப்பணியினை இந்நிறுவன முன்னாள் இயக்குநர் அ.நா. பெருமாள் அவர்கள் 1986-இல் ஏற்படுத்தினார்.

இத்திட்டப்பணியினைச் செயல்படுத்தும் பொறுப்பு காலம் சென்ற முனைவர் தே. ஆல்பர்ட் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. அவர் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களிடமிருந்து கட்டுரைகள் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அதன் விளைவாகக் கட்டுரைகள் பெறப்பட்டன. பின்னர் பணி யாற்றிய இயக்குநர் காலம் சென்ற முனைவர் க.த, திருநாவுக்கரசு அவர்களும் அதன் பின் முன்னாள் இயக்குநர் சு. செல்லப்பன் அவர் களும் இப்பணியினைத் தொடர்ந்தனர். தற்போது நிறைவு பெற்று 'பாரெல்லாம் பரந்த தமிழர்' என்ற இந்நூல் வெளியிடப் படுகிறது.

1989-இல் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'அயல் நாடுகளில் தமிழர்' என்ற நூலினை வெளியிட்டுள்ளது. இந்நூல் ஆசிரியர் பேராசிரியர் எஸ். நாகராசன் தாம் சேகரித்த செய்தி களின் அடிப்படையில் இந்நூலை எழுதியுள்ளார். தற்போது நிறுவனம் வெளியிட்டுள்ள 'பாரெலாம் பரந்த தமிழர்' என்ற இந்நூலிலுள்ள கட்டுரைகள் அனைத்தும் அயல்நாடுகளில் வாழ்ந்த,

வாழ்கின்ற தமிழர்கள் தம் நாட்டைப் பற்றித் தாமே எழுதிய கட்டுரைகளாகும். இங்குக் கட்டுரையாளர்களின் சொந்த அனுபவங்கள், நம் நாட்டில் வாழும் தமிழர்களைப் பற்றி அவர்கள் கொண்ட எண்ணங்கள், அவர்கள் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொள்ளத் துடிக்கும் பேரவா ஆகியன தெளிவாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

தஞ்சைத் தரணியில் நடக்கவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இந்நூல் வெளிவருவது உலகளாவிப் பரந்து நிற்கும் தமிழர்களுக்குப் பெருமகிழ்ச்சியளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவரும் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்துவதில் உதவிய ஆராய்ச்சி மாணவிகள் செல்வி. சு. லதா, கண்மணிப் பிரியா ஆகியோருக்கும், இந்நூலினைக் கவினுற அச்சிட்ட கவின்கலை அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா நாச்சியப்பன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

ச. சு. இராமர் இளங்கோ

இயக்குநர்

பொருளடக்கம்

1.	கயானா	ஈ. சா. விசுவநாதன்
2.	ஆங்காங்	அ. அய்யூப்
3.	பிஜி	எம். ஆர். பாலகணபதி
4.	இலங்கை	இளையதம்பி பாலசுந்தரம்
5.	யப்பான்	மனோன்மணி சண்முகதாஸ்
6.	ரீயூனியன்	வி. குமாரசாமி
7.	அந்தமான்-நிக்கோபார்	சுப. சுப்பிரமணியன்
8.	சீனா	ந. கடிகாசலம்
9.	ஆஸ்திரேலியா	கா. இந்திரபாலா
10.	Tamils in South Africa	C. Kuppusami

CONTRIBUTORS

1. Dr. E. Sa. Visswanathan
Associate Professor
Department of History
University of Guyana
South America

2. Mr. A. Ayoob
T. S. T. Post Box 95144
Kowloon
Hongkong

3. Mr. M. R. Balaganapathy
Shri Vivekananda High School
NADI
Fiji Islands

4. Dr. E. Balasundaram
Senior Lecturer
Department of Tamil
University of Jaffna
Tirunelvali, Sri Lanka

5. Ms. M. Shanmugadas
Faculty of Letters 661
Gakushuin University, 1-5-1 Mejiro, Toshima-Ku
Tokyo 171, Japan

6. Prof. Mr. V. Coumarasamy
23, Rue Claude Monet,
97490 Sainte Clotilde, LA Reunion
France

7. Suba. Subramanian
315, Aberdeen Bazar
Port Blair, Andamans-744 104

8. Dr. N. Ghadigachalam
Senior Research Fellow
International Insitute of Tamil Studies,
Taramani, Madras-113

9. Prof. Ka. Indirabala
2/65, Campsie Street
Campsie, NSW 2194
Australia

10. C. Kuppusami
South Africa

பாரெலாம் பரந்த தமிழர்

1. கயானா

ஈ. ச. விசுவநாதன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒப்பந்தக் கூலிகளாகத் தமிழர் பல மேற்கு நாடுகளுக்குச் சென்றனர். தென் அமெரிக்காவின் கயானாவிற்கு 1838-ஆம் ஆண்டு சென்னைத் தமிழர் இவ்வாறு செல்லத் தொடங்கியது 1917ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. 1921 ஆம் ஆண்டு இறுதிக்குள் பலர் இந்தியாவுக்குத் திரும்பிவிட்ட போதும் சுமார் 1500 குடும்பங்கள் அங்கேயே தங்கி விட்டதால் அவர் வழித்தோன்றல்களான தமிழர் இன்றும் அங்கு உள்ளனர். சிறந்த மருத்துவராக ஆசிரியராக, 'நர்சா'க, பொறியியல் வல்லுநராகத் தமிழர் பலர் 1960ஆம் ஆண்டு வரை கயானாவில் இருந்து பின்பு, அமெரிக்கா பிரிட்டன் கனாடா போன்றநாடுகளில் குடியேறினர், தற்போது கயானாவில் 60 ஊர்களில் தமிழர் உள்ளனர்.

கி. பி. முதலாம் நூற்றாண்டு முதல் தமிழர்கள் வியாபாரத்தின் பொருட்டும், சமயத்தையும் நுண்கலைகளையும் பரப்பவேண்டும் என்னும் நோக்கத்தோடும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதனை அந்நாடுகளில் உள்ள இலக்கியங் களின் வாயிலாகவும், கலைப்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள். கல்வெட்டுக்கள், கோயில்கள், அரசர்களின் பெயர்கள் போன்ற வற்றின் மூலமாகவும் அறியலாம். இந்திய இலக்கியங்களான ரிக்வேத சம்ஹிதா (Rg Veda Samhita), ஜாதகத்தவன்னான (Jātakatthavaṇṇana : a book of tales), சோம தேவரின் கதாசரித் சாகரம் (Kathāsaritsāgara : a collection of folk tales), மகாகர்ம விபங்கா (Mahākarmavibhaṅga : an earliest treatise on Buddhist Dhamma), காளிதாசரின் ரகுவம்சம் (Raghu-vamsa), அக்னி புராணம் (Agnipurāṇa), வாயு புராணம் (Vāyupurāṇā), ஆரிய சூரரின் ஜாதக மாலா (Jātakamālā), தரும பாலரின் பரமட்ட தீபானி (Paramatthadīpanī), குணாட்டியரின்

பிருகத்தகா (an anthology of tales written in the prakri language) போன்றவை தென்கிழக்கு ஆசிய மக்களோடு இந்தியர்கள் கொண்டிருந்த தொடர்பைத் தெற்றென விளக்கு கின்றன.[1]

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான கம்போடியாவில் சைவ வைணவ சமயங்களின் தாக்கத்தையும், தமிழக அரசியல், சிற்பக்கலை போன்றவற்றின் செல்வாக்கையும் தெளிவாக உணரலாம். கம்போடிய அரசர்களின் கல்வெட்டுக்களின் அமைப்புப் பல்லவப் பேரரசர்கள் காலத்துக் கல்வெட்டுக்களைப் போல உள்ளன என அறிஞர்கள் கருதுகிறார்கள்.[2] உதயாதித்ய வர்மன் என்னும் அரசன் பல்வேறு இந்து சமயச் சாத்திரங்களைப் பயின்றதோடு, சித்தாந்த சாத்திரத்தையும், சைவ ஆகமங் களையும் கசடறக் கற்றிருந்ததாக அறிகின்றோம்.[3] ஜயேந்திர பண்டிதர் என்னும் அறிஞர் சித்தாந்த சாத்திரத்தில் வல்லுநராக இருந்தார் என்றும் தெரிய வருகிறது.[4] பல்லவர் காலத்துச் சிற்பங்களின் சாயலைக் கம்போடியாவில் உள்ள மிகப் பழைய சிற்பங்களில் காண முடிகின்றதுதென்றும், அந்நாட்டுச் சிற்பங் களில் ஒன்றான ஹரிஹரனின் தலையில் உள்ள அணியும், காது களின் அமைப்பும் பல்லவர் காலத்துச் சிற்பங்களையே ஒத்திருக் கின்றன என்றும் மகேஷ்குமார் சரன் கூறுகின்றார்.[5] இன்றும் தாய்லாந்து மன்னர்கள் முடிசூட்டு விழாவின் போது திருப்பாவை, திருவெம்பாவை ஓதப்படுகின்றன எனப் பேராசிரியர்கள் தெ.பொ. மீனாட்சிசுந்தரன், ச. சிங்காரவேலு போன்றோர் கூறி யுள்ளனர். இராமாயண—மகாபாரதக் கதைகள் தாய்லாந்திலும், மலேசியாவிலும், இந்தோனேசியாவிலும் நடனத்திற்கும், நிழலாட் டத்திற்கும் உரிய கருப் பொருள்களாக இன்றும் விளங்கிவரு கின்றன.[6]

---

1. Kernial Singh Sandhu, *Indians in Malaya : Some Aspects of Their Immigration and Settlement 1786-1957*, Cambridge, 1973, pp. 1-11; G. Coedes, The *Indianised States of South East Asia*, Honalulu, 1968, pp. 1-64.
2. Mahesh Kumar Sharan. *Studies in Sanskrit Inscriptions of Ancient Cambodia*, New Delhi, 1974, p. 181.
3. Ibid. p. 186 4. Ibid. p. 242.
5. Ibid. pp. 291, 306, 314.
6. V. Raghavan, *The Ramayana Tradition in Asia*, New Delhi, 1980, pp. 103-154; 242-255; 456-474.

இத்தகைய வளமான பாரம்பரியத்தைப் பெற்ற தமிழர்கள் பத்தொன்தாவது நூற்றாண்டு முதல் ஒப்பந்தக் கூலிகளாக (indentured labourers) உலகத்தில் உள்ள பல நாடுகளுக்குச் சென்றார்கள். இந்தக் கட்டுரையில் தமிழர்கள் ஒப்பந்தக் கூலி களாகச் சென்ற நிகழ்ச்சியை வரலாற்றுப் போக்கில் விளக்கு வதோடு, தென் அமெரிக்காவில் உள்ள கயானாவில் அவர்கள் சென்று பரவிய விதத்தையும், இந்நாட்டுச் சமுதாயத்தில் அவர்கள் இன்று பெற்றுள்ள இடத்தையும், பொருளாதாரம், சமயம் போன்ற துறைகளில் அவர்கள் ஆற்றிவரும் தொண்டையும் கள ஆய்வு மூலம் பெற்ற விளக்கத்தின் துணை கொண்டு தெளிவாக்கி யுள்ளேன்.

பத்தொன்பதாவது நூற்றாண்டு முதல் ரப்பர், கரும்பு, தேயிலை, காப்பித் தோட்டங்களில் கூலிகளாக வேலை செய்யப் பல தமிழர்கள் மலேயா, சிங்கப்பூர், இலங்கை, பர்மா, மொரிசியஸ், ரீயூனியன், தென்ஆப்பிரிக்கா, குவாடிலோப், மார்டினிக் போன்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கும், தென் அமெரிக்காவில் உள்ள கயானா, சுரினாம், பிரெஞ்சு கயானா[7] போன்ற நாடுகளுக்கும் பெருவாரி யாகச் சென்றார்கள்.

அந்தக் காலத்தில் காப்பி, ரப்பர், தேயிலை, கரும்புத் தோட்டங்கள் யாவும் ஐரோப்பிய முதலாளிகள் வசம் இருந்தன. அத்தகைய தோட்டங்களில் வேலை செய்வதற்கு நிறைய ஆட்கள் தேவைப்பட்டனர். அதற்காகச் சென்னை மாநிலத்திலிருந்து பலரை வேலைக்கு எடுத்தார்கள். வெளி நாடுகளில் வேலை செய்வதற்கு அந்தக் காலத்தில் யாரும் மிக எளிதில் உடன்பட்ட தில்லை. ஆதலால் வெள்ளையர் தோட்டங்களில் அதிகாரிகளாக இருந்தவர்களும், கண்காணிப்பாளர்களும் சென்னைக்கு வந்து தங்கள் கிராமங்களில் உள்ள அதிகாரிகளின் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் வெளி நாடுகளில் வேலைக்கு ஆட்கள் எடுப்பதாக அறிவித்ததோடல்லாமல், நிறைய ஊதியமும், வசதியான வாழ்க்கையும், தரமான சூழ்நிலையும் உண்டு எனப் பொய்ப் பிரசாரம் செய்தார்கள். அதைக் கேட்டு உள்ளூரில் வாழ்க்கை வசதி இல்லாதவர்களும், நிலபுலன்கள் இல்லாத பஞ்சைகளும்,

---

7. Malaysia, Singapore, Sri Lanka, Burma, Mauritius, Reunion, South Africa, Martinique, Guadeloupe, Guyana, Surinam, French Guiana.

மலாயாவைத் தற்போது மலேசியா எனவும், இலங்கையை ஸ்ரீ லங்கா எனவும் அழைக்கின்றனர்.

சமுதாயத்தில் சாதி அடிப்படையில் பின் தள்ளப்பட்டவர்களும், புதிய நாடுகளைப் பார்க்க விரும்பிய துணிச்சல்காரர்களும் வெளி நாடுகளில் வேலை செய்ய இணங்கி ஒப்பந்தத்தில் கையெழுந் திட்டார்கள். வேலைக்கு ஒத்துக் கொண்டவர்களில் பெரும் பான்மையானோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். ஓரளவு கல்வியறிவுள்ளவர்களும் தங்கள் வறுமையை எண்ணியும், எதிர் கால வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளவேண்டும் என்னும் அவா வினாலும், ஒப்பந்தத்தை நன்றாகப் படிக்காமலும், ஆழ்ந்து யோசிக்காமலும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இத்தகைய ஒப்பந்தங்கள் சில சமயங்களில் அரசாங்க அதிகாரிகளின் முன்னிலையில் கையெழுத்தானதும் உண்டு. மற்றும் சில சமயங் களில் ஒரு காலனி அதிகாரிகள் மற்றொரு காலனி அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு ஆட்களைத் தேர்ந்தெடுத்ததும் உண்டு. எந்த முறையில் ஆட்களைத் தேர்ந் தெடுத்திருந்தாலும், ஒரு சில நிபந்தனைகளுக்கு ஒத்துக் கொண்டே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தியாவிற்கு அருகாமையில் உள்ள நாடுகளுக்குச் சென்ற வர்கள் பொதுவாக மூன்றாண்டுகள் வேலை செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்களுக்கு ஆகும் போக்குவரத்துச் செலவை எந்த நாட்டிற்குச் செல்கின்றார்களோ அந்த நாட்டு அரசாங்கமோ, வெள்ளையர் கம்பெனியோ, ஏற்றுக்கொள்ளும். வேலையாட்கள் தங்குவதற்கான வீட்டு வசதியையும், அடிப்படை வாழ்க்கைத் தேவைகளையும் அளிப்பது கம்பெனிகளையோ தனிப்பட்ட தோட்ட முதலாளிகளையோ சாரும். இந்தியாவிற்குத் தொலைவில் உள்ள நாடுகளுக்குச் சென்றவர்கள் பொதுவாக ஐந்தாண்டுகள் வேலை செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டவர்கள், இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் சென்ற வேலை யாட்களை ஒப்பந்தக் கூலிகள் என்று அழைத்தனர்.[8]

ஒப்பந்தக் கூலிகளாக உலகின் பல நாடுகளுக்கும் சென்றவர் களில் பெரும்பான்மையானவர் இந்தியர்களே. இது போலவே சீனர்களும் மெடாரா (Madeira) என்னும் தீவில் உள்ள

---

8. E.Sa., Visswanathan, "Migration and Settlement of Indians in Malaya" in *Indian Geographical Studies* No 8 Patna 1977, pp. 3-7, Also refer S. Arasaratnam, *Indians in Malaya and Singapore*, Kuala Lumpur, 1970pp. 25-26.

போர்த்துக்கீசியர்களும் ஒப்பந்தக் கூலிகளாகப் பல நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.[9]

ஒப்பந்தக் கூலிகளாகச் சென்ற இந்தியர்களில் பெரும்பான்மையானோர் சென்னை மாநிலத்தையும், கல்கத்தா மாநிலத்தையும் சேர்ந்தவர்கள். சென்னையைச் சார்ந்தவர்களில் ஏறக்குறைய எண்பது விழுக்காட்டினர் தமிழர்கள்; பதினெட்டு விழுக்காட்டினர் தெலுங்கர்கள்; இரண்டு விழுக்காட்டினர் மலையாளிகள் எனக் கூறலாம். கல்கத்தா மாநிலத்தைச் சேர்ந்தவர்களில் ஏறக்குறைய எண்பது விழுக்காட்டினர் பீகாரிகள்; பத்து விழுக்காட்டினர் உத்திரப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள்; மீதியுள்ள பத்து விழுக்காட்டினர் வங்காளிகளாகவும், வங்காளத்தில் உள்ள மலைப் பகுதியைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இவர்களைத் தவிர வேறு மாநிலத்தவரை ஒப்பந்தக் கூலிகளாகக் காண்பது மிகவும் அரிது.

சென்னையிலிருந்து சென்றவர்களைப் பொதுவாக "மதறாசிகள்" என்றும்,"தமிழர்கள்" என்றும் அழைக்கிறார்கள். கல்கத்தாவிலிருந்து வந்தவர்களை வங்காளிகள் என்றும், பீகாரிகள் என்றும் கூறுகிறார்கள். இந்தக் கட்டுரையில் தமிழர்கள் என்று குறிப்பிடும் போது தெலுங்கர்களையும், மலையாளிகளையும் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழர்கள் சென்ற நாடுகளை இந்தியாவிற்கு மிக அருகில் உள்ள நாடுகள் என்றும், சற்றுத் தொலைவில் உள்ள நாடுகள் என்றும், மிகத் தொலைவில் உள்ள நாடுகள் என்றும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். இலங்கை, சிங்கப்பூர், மலாயா, பர்மா ஆகிய நாடுகள் முதற் பிரிவிலும்; மொரிசியஸ், ரீயூனியன், தென் ஆப்பிரிக்கா இரண்டாவது வகையிலும்; பிஜித்தீவும், மேற்கிந்தியத் தீவுகளான மார்டினிக், குவாடிலோப், டிரினிடாட், ஜெமெய்கா[10] போன்றவையும், தென் அமெரிக்காவில் உள்ள கயானா, சுரினாம், பிரெஞ்சு கயானா போன்ற நாடுகளும், மூன்றாவது பிரிவிலும் அடங்கும்.

ரீயூனியன், மார்டினிக், குவாடிலோப் ஆகிய தீவுகளும், தென் அமெரிக்காவில் உள்ள பிரெஞ்சு கயானாவும், பிரான்சின்

---

9. Vere T. Daly, A *Short History of the Guyanese People*, London, 1980, p. 187.

10. Fiji, Trinidad, Jamaica.

ஆதிக்கத்திற்குட்பட்ட காலனிகள். சுரினாம் டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்கும் மற்றவை யாவும் ஆங்கிலேயரின் ஆளுகைக்கும் உட்பட்டவை. பிரெஞ்சுக் காலனிகளுக்குச் சென்றவர்களில் பெரும்பான்மையோர் பாண்டிச்சேரியிலிருந்தும் காரைக்காலி லிருந்தும் சென்ற தமிழர்கள் ஆவர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், வியாபாரத்தின் பொருட்டுப் பல தமிழர்கள் செய்கோனுக்கும், சுமத்திராவில் உள்ள மேடான் நகரத்திற்கும் சென்றனர்.[11]

கூலிகளாகச் சென்ற பீகாரிகளில் பலர் இன்று பீஜித்தீவிலும், மொரிசியஸ், தென் ஆப்பிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், கயானா, சுரினாம் போன்ற நாடுகளிலும் காணலாம். பெரும்பான்மையான தமிழர்கள் இந்தியாவிற்கு அருகில் உள்ள நாடுகளுக்குப், ஒரு கணிச மான தொகையினர் பிற இடங்களுக்கும் சென்றனர்.

கி. பி. 1530 முதல் போர்த்துகீசியர், மேற்கு ஆப்பிரிக்கா, காங்கோ, அங்கோவா போன்ற ஆப்பிரிக்க கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆப்பிரிக்க மக்களை விலங்குகளைப் பிடிப்பதைப் போலப் பிடித்து அடிமைகளாக விற்கும் வியாபாரத்தில் ஈடு பட்டனர். இந்த ஆப்பிரிக்க அடிமைகளின் உழைப்பால், வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய பகுதி களில் இருந்த புகையிலை, கரும்பு, காப்பி, ரப்பர் தோட்டங்கள் வளமானதோடல்லாமல், வெள்ளையரின் பொருளாதாரமும் செழிப்புற்றது.[12]

இத்தகைய ஆப்பிரிக்க அடிமைகள் தான் கி. பி. 1634 முதல் கயானாவில் உள்ள எசிக்யூபோ நதிக்கரையில் தங்கி டச்சுக்காரர் களுக்கு உதவி செய்ய ஆரம்பித்தனர். அன்று தொடங்கிய ஆப்பிரிக்கப் பெருங்குடி மக்களின் அடிமை வாழ்வு 1834ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதியோடு முடிவுற்றது.[13]

அடிமை வாழ்வை முடிவுக்கு கொண்டு வந்தவுடன் ஆப்பிரிக்கர் கள் கரும்புத் தோட்ட வாழ்வையே அடிமையின் சின்னமாகக்

---

11. செய்தோனைத் (Saigon) தற்போது ஹோ-சி-மின் (Ho-Chi-Minh City) நகரம் என அழைக்கின்றனர். மேடான் (Medan) இந்தோனேசியாவில் உள்ள சுமத்திரா தீவில் உள்ள நகரம்.
12. F.R. Augier, et al., *The Making of the West Indies* fifth impression, London, 1964, pp. 63-75; Daly, pp. 52-4
13. Ibid p. 157; Daly., p. 172.

முதன்முதலில் ஐரோப்பியர் குடியேறிய பகுதிகள்



Early European areas of settlement

படம் 1

மூலம். Vere T Daly. A Short History of the Guyanese People, P. 49.

கருதினர். ஆதலின் தாங்கள் பலதலைமுறைகளாக உழைத்து வளப் படுத்திய தோட்டங்களை விட்டு வெளியேறி நகர்ப்புறங்களில் குடி யேற ஆரம்பித்தனர். இந்த நிலை கயானாவிலும் ஏற்பட்டது. அதன்காரணமாகக் கரும்புத் தோட்டங்களில் குறைந்த கூலிக்கு நீண்டநேரம் உழைக்கக் கூடிய ஆட்களைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய ஆட்கள் மலிந்த நாடு இந்தியா என்ற கருத்து அந்தக் காலத்திலேயே வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகளின் மனத்தில் குடி கொண்டிருந்தது. அதற்கேற்ப இந்தியா அச்சமயத்தில் மொரிசியஸில் உள்ள கரும்புத் தோட்டங் களில் வேலை செய்ய ஒப்பந்தக் கூலிகளை அனுப்பிக் கொண்டி ருந்தது. இந்த இந்தியக்கூலிகள் போதிய அளவு நம்பிக்கையோடு வேலை செய்கின்றார்கள் என்ற கருத்தும் பரவியிருந்தது. ஆதலின் வீட்-என்-ஹூப் (Veed-en-Hoop), விடஸ்டீன் (Vreedestein) என்னும் இரண்டு பெரிய கரும்புத் தோட்டங்களின் முதலாளியான ஜான் கிளாட்ஸ்டோன் (John Gladstone) என்பவர், காலனி களின் செயலராகப் பணியாற்றி வந்த கிளினெல் பிரபுவின் (Lord Glenelg) உதவியோடு ஐந்தாண்டு ஒப்பந்தத்தின் பேரில் 396 இந்தியர்களைக் கயானாவில் உள்ள கரும்புத் தோட்டங்களில் கூலி

களாக வேலை செய்ய 1838 ஆம் ஆண்டு மே மாதம், கப்பலில் கொண்டு வந்து இறக்கினார். அவ்வாறு இறக்குமதியான இந்தியக் கூலிகளை டெமராரா நதிகரையிலுள்ள பெலி வியூ (Belle Vue) விட்-என்-லூப், வீடஸ்டீன் போன்ற தோட்டங்களுக்கும், எசிக்யூபோ நதிக்கரையில் உள்ள அன்னா ரிஜீனாவிற்கும் (Anna Regina), பெர்பீஸ் நதிக்கரையில் உள்ள ஹைபரி (Highbury), வாடரிலூ (Waterloo) போன்ற தோட்டங்களுக்கும் அனுப்பி வைத்தனர். இவ்வாறு 1838ஆம் ஆண்டில் தொடங்கிய இந்தியக் கூலிகளின் கயானா வருகை, பலவகையான இடையூறுகளுக் கிடையில், 1917ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. ஏறக்குறைய இந்த எண்பது ஆணடுகளில் இந்தியாவிலிருந்து வந்த கூலிகள் கயானா, சுரினாம், டிரினிடாட், ஜெமெய்கா, செயின்ட் லூசியா (St. Lucia) குவாடிலோப், மார்டினிக் போன்ற வெள்ளையர் காலனிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.[14]

சென்னையிலிருந்து இந்த நாட்டிற்கு வந்த தமிழர்களின் எண்ணிக்கையைத் தற்போது சரியாகக் கணக்கிட வழியில்லை. எனினும் 1845 ஆம் ஆண்டு தொடங்கி, 1862ஆம் ஆண்டு முடிய, வந்த தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் 1845—48 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் கயானாவிற்கு வந்த நாற்பத்தைந்து கப்பல்களில் இருபத்தோரு கப்பல்கள் சென்னைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டதாக அறிகின்றோம். மேலும், 1845 ஆம் ஆண்டு தொடங்கி, 1862ஆம் ஆண்டு வரை, கயானாவிற்கு வந்த இந்தியர்களில் ஏறக்குறைய ஐம்பது விழுக்காட்டினர், சென்னையிலிருந்து வந்ததாகக் கணக் கிட்டுள்ளனர். இந்த நிலை நீண்ட காலத்திற்கு நீட்டிக்கவில்லை. ஏனெனில் 1860 ஆம் ஆண்டு தொடங்கி சென்னையிலிருந்து வந்த தமிழர்களின் எண்ணிக்கை படிப்படியே குறைய ஆரம்பித்தது. இதற்குப் பலவகைக் காரணங்களைக் கூறலாம். இக்காரணங் களைப் பிறகு காண்போம். 1874ஆம் ஆண்டறிக்கையின்படி, கயானாவிலிருந்த இந்தியர்களில் நாற்பத்து நாலாயிரம் பேர் கல்கத்தாவிலிருந்தும், இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் சென்னையி லிருந்தும் வந்தவர்கள் என அறிகின்றோம். இதற்குப் பிறகு சென்னையிலிருந்து அதிகக் கூலிகள் வந்ததாகத் தெரிய வில்லை. எனினும், 1913ஆம் ஆண்டு தொடங்கி மறுபடியும்

14. Daly, pp. 172-83, Dennis Bassier, "Kali-Mai in Guyana : Its Spatial Distribution and Divisions", in *Release* vols, 3 & 4, Guyana, 1978, p. 61.

சென்னையிலிருந்து பலர் கூலிகளாக இந்த நாட்டிற்கு வர ஆரம்பித்தனர். ஆனால் அவ்வாறு வந்தவர்களின் தொகை மிகக் கணிசமாக இருந்திருக்க முடியாது எனத் தற்போது இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கையைக் கொண்டும் என் ஆய்வின் மூலம் பெற்ற தகவல்களைக் கொண்டும் உய்த்துணர முடிகின்றது. இந்தியாவிலிருந்து கூலிகளை இறக்குமதி செய்யும் வழக்கம் 1917 ஆம் ஆண்டோடு கைவிடப்பட்டது.[15]

இந்தியாவிற்கும் கயானாவிற்கும் இடையில் உள்ள தூரம் ஏறக்குறைய பன்னிரெண்டாயிரம் மைல்கள் ஆகும். இந்தத் தூரத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கப்பலில் கடந்து வர ஏறக்குறைய மூன்று மாதத்திற்குமேல் சென்றிருக்கும். அது மட்டுமல்ல அக்காலக் கப்பல்களில் நீண்ட தூரப் பிரயாணத்திற்கான வசதிகளும் குறைவு; கூலிகளுக்குக் கொடுக்கப்பட்ட உணவும் ஊட்டச் சத்தில்லாதவை. இக்காரணங்களால் கல்கத்தாவிலிருந்து வந்தவர்களில் சிலர் கப்பற் பயணத்திலேயே மாண்டதாக அறிய முடிகின்றது. ஆனால், பொதுவாகச் சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பல்களில் உயிர்ச் சேதம் மிகக்குறைவு. சென்னை வாசிகள் பொதுவாக உடல் வலிமை உடையவர்களாகவும், நீண்ட கடற் பயணத்தில் ஏற்படும் துன்பங்களைத் தாங்கும் வல்லமை உடையவர்களாகவும் இருந்த காரணத்தினால் சென்னையிலிருந்து கயானாவிற்கு ஒப்பந்தக் கூலிகளை ஏற்றிச் சென்ற "நெஸ்டர்" என்னும் கப்பலில் உயிர்ச் சேதம் இல்லை என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சில அறிஞர்கள் இதனை ஓர் வரலாற்றுச் சாதனை என்றும் புகழ்ந்துள்ளனர்.[16]

சென்னையிலிருந்து இந்த நாட்டிற்கு வந்த தமிழர்களில் பெரும்பான்மையானோர் நகர்ப்புறங்களிலிருந்து வந்த தொழிலாளர்களாகவும், ஓரளவு கல்வியறிவு பெற்றவர்களாகவும் இருந்திருக்க வேண்டும் என நம்ப இடமுண்டு. ஏனெனில், தமிழர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "திறமையாக வேலை செய்யக் கூடியவர்கள்" எனக் குடியேற்றத் தலைமைச் செயலரின் ஆண்டறிக்கை ஒன்று கூறுகிறது.[17]

---

15. Bassier, pp. 61, 63, 64.
16. Dwarka Nath, *A History of East indians ia Brttish Guiana*, London, 1950, p. 32.
17. Administration Report : Report of the *Immigrātion Agent General*, Guyana, 1916, p. 262.

அதே சமயத்தில் தமிழர்களைப் பற்றி மற்றோர் கருத்தும் இந்த நாட்டில் நிலவி வந்தது; இன்றும் நிலவி வருகிறது. மேற்கோளாகக் குடியேற்றத் தலைமைச் செயலரின் 1916 ஆம் ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்ட கருத்துக்களை எடுத்துக் காட்டலாம். ''சென்னையிலிருந்து வந்த ஒப்பந்தக் கூலிகள் கடுமையாக உழைக்கும் ஆற்றல் உடையவர்... ஆனால் கட்டுக் கடங்காதவர்கள். அளவிற்கு மீறிய குடிபோதையில் சண்டையிட்டு ரத்தக் களரியை உண்டாக்கக் கூடிய்வர்கள்.... ஆதலின் பெரும்பான்மையான கரும்புத் தோட்ட முதலாளிகள், கல்கத்தாவிலிருந்து வந்த கூலிகள் வேலைக்குக் கிடைக்காத போதே, சென்னைக் கூலிகளைவேலைக்கு அமர்த்த ஒத்துக்கொண்டனர்''[18] 1918ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதே போன்ற மற்றோர் அறிக்கையும், பிரிட்டிஷ் கயானாவின் வரலாற்றை எழுதிய டால்டன் (Henny G. Dalton) அவர்களும், ''தமிழ்க் கூலிகள் தங்களையும், தங்கள் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்வதில்லை. தாங்கள் வேலை செய்யும் தோட்டத்தை விட்டு நகர்ப்புறங்களுக்கு ஓடி, அங்கெல்லாம் பிச்சையெடுத்து வாழ்வதோடு, மிகக் குறைந்த கூலிக்குக் குற்றேவல் புரிந்தும் வாழ்கின்றனர்,'' எனக் கூறியுள்ளனர்.[19]

தமிழர்களைப் பற்றி இவ்வாறான மாறுபட்ட கருத்துகள் நிலவுவதற்கான காரணங்கள் யாவை? மேலே குறிப்பிட்டதைப் போலப் பெரும்பான்மையான தமிழர்கள் சென்னை மாநில நகர்ப்புறங்களிலிருந்து வந்த காரணத்தினால், அடக்குமுறை நிறைந்த தோட்ட வாழ்க்கையை விரும்பவில்லை என்றும்; ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஊதியம் கயானா வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை என்றும்; தோட்டத்திலிருந்த வாழ்க்கை வசதிகள் எதிர்பார்த்து வந்ததைவிட மிக மோசமான நிலையில் இருந்ததென்றும் ஊகிக்க இடமுள்ளது.[20] இக்காரணங்களினால்தாங்கள் வேலை செய்து வந்த தோட்டங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு வந்த தமிழர்களில் பலர் வேலை வாய்ப்புக் கிடைக்காத காரணத்தினால் பல எடுபிடி வேலைகளைச் செய்து வந்தனர். ஒரு சிலர் வெள்ளையரின் வீட்டு வேலைக்காரர்களாகப் பணி புரிந்தனர்.

---

18. Ibid. p 262,
19. Administration Report : *Report of the Immigration Agent General*, Guyana. 1918, H.G. Dalton *History of British Guiana*, 2 vols., London, 1955, p 472.
20. Nath, p. 66,; Bassier, p. 63.

இன்னும் சிலர் ஒட்டுக்கடைகள் (Kiosks) வைத்து வாழ்க்கை நடத்தினர். வேறு சிலர் நகரத் துப்புரவுத் துறையில் பணியாளர் களாகச் சேர்ந்து தம் நகர வாழ்வைத் தொடங்கினர். மற்றும் சிலர் எந்த வேலையும் கிடைக்காத காரணத்தினால் பிச்சை எடுத்தும் வாழ்ந்தனர். எனினும் தோட்டப் புறங்களை விட்டு வெளியேறிய தமிழர்கள் சுகாதார வசதிகள் நிறைந்த நகர்ப் பகுதி களில் வாழ இயலாமற் போய்விட்டது. மேலும் மிகக் குறைந்த ஊதியத்தில் வாழ்க்கை நடத்த வேண்டியநிலை ஏற்பட்ட காரணத் தினால் ஊட்ட உணவை உண்ண இயலாமற் போய்விட்டது. அதனால் நகரங்களுக்கு வாழ வந்தவர்களில் சிலர் காச நோயால் பீடிக்கப்பட்டு இறந்ததாக அறியமுடிகின்றது.

நகரங்களுக்கு வந்து ஒட்டுக் கடை வைத்தவர்களில் பலர் படிப்படியே தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டதோடு அல்லாமல் ஓரளவு பண வசதியையும் தேடிக் கொண்டனர். நகரத் துப்புரவுத் துறையில் பணியாற்றியவர்களும் வசதியோடு வாழ்ந்த தோடல்லாமல் தம் மக்களையும் படிக்க வைத்து வாழ்க்கையில் முன்னேறியதாக அறிகின்றோம்.[21] பணவசதி தேடிக்கொண்ட தமிழர்களில் பலர், குறிப்பாக இரண்டாவது மூன்றாவது தலை முறையினர் இந்தியாவிற்கே திரும்பி விட்டதாக ஆராய்ச்சி யாளர்கள் குறிப்பிடுகிறார்கள். லெஸ்லி பாட்டர் (Leslie Potter) என்பவர் தாம் நிகழ்த்திய டாக்டர் பட்ட ஆய்வுரையில், 1921ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவிற்குத் திரும்பிய 69,970 "கிழக் கிந்தியர்களில்" பெரும்பான்மையானோர் சென்னை மாநிலத்தவர் என்பதனைப் பெயர்ப்பட்டியலைக் கொண்டு அறிய முடிகின்றது எனக் கூறியுள்ளார்.[22]

தற்போதுள்ள தமிழ் வம்சாவளியினரை இரு வகையாகப் பிரிக்கலாம். முதற்பிரிவினர், 1921ஆம் ஆண்டிற்கு முன் இந்தியா விற்குத் திரும்பிய வரைத் தவிர, மீதியிருந்த ஏறக்குறைய 1500 தமிழர்—தெலுங்கர் குடும்பங்களின் வழித்தோன்றல்கள்; இரண்டாவது பிரிவினர் 1913—1917 ஆம் ஆண்டுகளுக்கிடையில்

21. திரு. சின்னபேன் ஜான் அவர்களோடு ட்ரையம்ப் என்னும் ஊரில் 15-12-1986 அன்று நடத்திய பேட்டியின் மூலம் அறிந்த செய்திகள்.

22. Leslie Potter, *Internal Migration and Settlement of East Indians in Guyana 1870-1920*, Unpublished Ph D. thesis, August, 1975, p. 39.



Modern Guyana

படம் 2

தற்காலக் கயானாவின் நாட்டுப்படம்

மூலம். Daly p. 309

வந்த சென்னை மாநிலத்தவரின் வழித் தோன்றல்கள்[23] இவர்கள் யாவரும் கயானாவில் உள்ள எசிக்யூபோ, டெமராரா, பெர்பீஸ், கொரன்டீன் என்னும் நான்கு பெரிய நதிகளை அடுத்துள்ள கரும்புத் தோட்டங்களிலும், நெல்வயல்களிலும், நகரங்களிலும் வேலை செய்கிறார்கள். இவர்கள் தங்கி வாழும் நகரங்களும், பேரூர், சிற்றூர்களும் இந்த நதிகளுக்கிடையிலேயே உள்ளன.

தமிழர்களின் இன்றைய நிலையைப் பார்ப்பதற்கு முன்பு கயானாவைப் பற்றிய சிலப் பொதுச் செய்திகளைப் பார்ப்போம். தென் அமெரிக்காவிலிருந்த ஒரே ஒரு பிரிட்டிஷ் காலனியான இந்த நாடு 1966ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் தேதி அரசியல் விடுதலை பெற்றது.

இந்த நாட்டின் பழங்குடி மக்களைஅமெரிக்க இந்தியர் அல்லது அமெர் இந்தியர் (Amerindians) எனச் சுருக்கமாக அழைக்கின்றனர். இவர்கள் பேசும் மொழியிலிருந்தே இந்த நாடு தன் பெயரைப் பெற்றது. அமெர் இந்திய மொழியில் "கயானா" என்றால் "நீர் நிறைந்த நாடு" என்று பொருள்.

பிரிட்டிஷ் காலனியாக இருந்த போது இந்த நாட்டின் பெயர் "க்யானா" (Guiana); நாடு விடுதலை பெற்ற பிறகு அமெரிந்தியர் சொல்லான "கயானா" என்பதனை நாட்டின் பெயராக்கினர்.

இந்த நாட்டில் எசிக்யூபோ, டெமராரா, பெர்பீஸ், கொரன்டீன் என்னும் நான்கு பெரியநதிகளும், பலகிளை நதிகளும், சிற்றாறுகளும் நிறைந்துள்ளன. அதனால் இது இயற்கை எழில் கொஞ்சும் நாடாக உள்ளது. கடலில் செல்லும் பெரிய கப்பல்களில் பல இந்நதிகளின் முகத்துவாரத்திலிருந்து நாற்பது முதல் நூறு மைல்கள் வரை உள்ளே செல்லக் கூடிய அளவில் ஆழமும் அகலமும் உடையனவாக இருக்கின்றன.

இந்நதிகளுள் மிகப்பெரிய நதி எசிக்யூபோ ஆகும். இந்த நதியின் நடுவில் மக்கள் வாழ்கின்ற சில பெரிய தீவுகளும் பல சிறிய தீவுகளும் உள்ளன. இந்நதி கடலோடு கலக்கும் இடத்தின் அகலம் இருபது மைல்கள் ஆகும். கயானாவின் நிலப்பரப்பில் (83,000 சதுர மைல்) பாதிக்கு மேல் எசிசயூபோவும், அதன் கிளை நதிகளான ரூபுறூனியும் (Rupuruni), பொடாரோவும் (Potaro),

23. 1987இல் இந்த நாட்டில் உள்ள மதறாசிகளின் எண்ணிக்கை 30,000 முதல 60,000 வரை இருக்கலாம என என் கள ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது.

மசரூனியும் (Mazaruni), குயூனியும் (Cuyuni) பாய்ந்து இயற்கை வளத்தைப் பெருக்கியுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்திற்கும் வியாபாரத்திற்கும் அடிப் படையாக அமைந்துள்ள நதி டெமராராவாகும். இந்த நதியின் முகத்துவாரத்தில்தான் கயானாவின் தலைநகரான ஜார்ஜ் டவுன் உள்ளது. இந்நதியின் இருபுறங்களிலும் கரும்புத் தோட்டங்களும் நெய் வயல்களும் நிறைந்து நாட்டிற்கு அந்நியச் செலாவணியை வழங்குகின்ற டெமராரா சர்க்கரையும் அச்சர்க்கரையிலிருந்து செய் யப்படும் ரம்(Rum) என்னும் மதுவகையும் உலகப் புகழ்பெற்றவை.

பெர்பீஸின் முகத்துவாரத்தில் இந்த நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான நியூ ஆம்ஸ்டர்டாம் உள்ளது. பெர்பீஸ்-கொரன்டீன் ஆகிய இரு நதிகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் நெல் வயல்களும், கரும்புத் தோட்டங்களும் நிறைந்துள்ளன. கயானாவின் நெற்களஞ்சியம் என இப்பகுதியை மாற்றிய பெருமை இந்திய வம்சாவளியினரைச் சாரும்; குறிப்பாகத் தமிழர்களைச் சாரும். இந்த நாட்டின் கணிசமான அந்நியச் செலாவணி அரிசி யையும், சர்க்கரையையும் ஏற்றுமதி செய்வதால் கிடைக்கின்றது. இவை தவிர அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் பிற பொருள்கள், பாக்சைட் (அலுமினியம்) தங்கம், மற்றும் பலவகை உயர்தர மரங்களாகும்.

இந்த நாட்டில் அமெரிந்தியர்களைத் தவிர அடிமைகளாக வந்த ஆப்பிரிக்க மக்களின் வம்சாவளியினரும், கூலிகளாக வந்த இந்தியர்களும், போர்த்துகீசியர்களும், சீனர்களும் உள்ளனர். அமெரிந்தியர்களிலிருந்து வேறுபடுத்த இந்தியர்களைக் "கிழக்கு இந்தியர்கள்" (East Indians) என அழைக்கின்றனர். அமெரிந்தி யர்கள் தற்போது மக்கள் மிக எளிதில் போக இயலாத காட்டுப் பகுதிகளிலும், மலைச்சாரல்களிலும் வாழ்கின்றனர்.

நாட்டு மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் கிழக்கிந்தியர்கள். இவர்களில் பெரும்பாலானவர் இன்னும் நெற் பண்ணைகளிலும், கரும்புத் தோட்டங்களிலும் வேலை செய்து வருகின்றனர். சிலர் தனியார் நிறுவனங்களிலும், பாங்குகளிலும் பணியாற்றுகின்றனர். கயானாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியர்கள் ஆற்றி வரும் பணி மிகச் சிறப்பானது.

ஆப்பிரிக்க வம்சாவளியினரில் பலர் தற்போது அரசாங்கத் திலும், அரசாங்க நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றனர்.

நாட்டின் அரசியல் தலைமையும், ஆட்சிப் பொறுப்பும் அவர்கள் கையில் உள்ளது. நாட்டின் பொருளாதாரத்திற்கு இன்று விவசாயம் மிக முக்கியமாக இருப்பதற்கு, ஆப்பிரிக்க மக்கள் பதினெட்டு பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் உழைத்த உழைப்பு முதற்காரணமாக இருந்தது என்பதனை இன்று யாவரும் நினைவில் கொள்ள வேண்டியுளளது.

கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய வந்த போர்த்து கீசியர்களும் சீனர்களும் தற்போது இந்த நாட்டில் மிகக் குறைவாக உள்ளனர். எனினும் போர்த்துகீசியர்களில் பலர் பெரும் வியாபாரிகளாக உள்ளனர். நாட்டில் உள்ள பல பெரிய தொடர் வியாபார நிலையங்கள் (Chain Stores), போக்குவரத்துக் கப்பல்கள், வணிக நிறுவனங்கள் யாவும் இவர்கள் கையில் உள்ளன. சீனர்கள் பல உணவு விடுதிகளை நடத்துவதோடு வியாபாரத் திலும் ஈடுபட்டுள்ளனர்.

கயானாவில் உள்ள தமிழர்களில் பெரும்பாலோர் தோட்டப் புறங்களிலும், சிற்றூர்களிலும் இருந்த போதிலும், குறிப்பிடத்தக்க சிலர் ஜார்ஜ்டவுன, நியூ ஆம்ஸ்டர்டாம் போன்ற பெரு நகரகளில் உள்ளனர். இவர்கள் சமுதாயத்தில் பெருஞ் செல்வாக்கோடு உள்ளனர். மருத்துவத் துறையில் புகழ் பெற்று விளங்கும் ஒரு சிலரில் திரு. லெஸ்லி முத்து என்னும் தமிழர் குறிப்பிடத்தக்கவர். இவர் ஜார்ஜ்டவுனில் மருத்துவராக உள்ளார். திரு. சாமி என்பவர் வியாபாரத்துறையில் மிகச் செல்வாக்குப் பெற்றிருப்ப தோடு, இந்த நாட்டில் உள்ள லட்சாதிபதிகளில் ஒருவராகத் திகழகின்றார். இவரும் ஜார்ஜ்டவுன் வாசியே. கல்வித் துறையில் நல்ல செல்வாக்கோடுளள டாக்டர் ஜே. ஆர். ராமசாமி கயானாப் பல்கலைக் கழகத்தில் உயிர்நூல் துறையில் பணியாற்றுகிறார். இவருடைய தம்பி டாக்டர் ஹெர்னன் ராமசாமி என்பவர் செல்வாக்குள்ள மருத்துவர்களில் ஒருவராகக் கொரன்டீன் பகுதியில் உள்ள ஆல்பியன் என்னும் ஊரில் உள்ளார். அரசாங்கத் தில் உயர் அதிகாரிகளாக இருக்கும் தமிழர்கள் மிகக் குறைவு. இதுவரை ஆய்வு நிகழ்த்தியதில் நான் அறிந்த ஒரே அரசாஙக அதிகாரி ஜேம்ஸ் நாயுடு ஆவார்கள். மேற்குறிப்பிட்டவர்கள் தவிர ஆசிரியர்களாகவும், நர்சுகளாகவும், பொறியியல் வினைஞர் களாகவும் பணிபுரிவோர் சிலர் அங்கொன்றும் இஙகொன்றுமாக உள்ளனர்.[24] இத்தகு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தமிழ்

24. திரு ராமசாமி ரெங்கநாத நாய்க்கேன் ஆவர்களோடு ஆல்பியன் நகரில் 9-6-1987 அன்று நடத்திய பேட்டியின் மூலம் அறிந்த செய்திகள்.

மக்களின் மொத்தத் தொகையில் ஐந்து முதல் பத்து விழுக்காட்டுக்கும் மேல் இருக்க மாட்டார்கள். ஏறக்குறைய எண்பத்தைந்து சதவிகிதத்தினர் நெற்பயிர் செய்யும் பண்ணைகளிலோ, கரும்புத் தோட்டங்களிலோ தொழிலாளிகளாகப் பணிபுரிகின்றனர்.

சிறந்த மருத்துவர்களாகவும், ஆசிரியர்களாகவும், நர்சுகளாகவும், பொறியியல் நிபுணர்களாகவும் இருந்த தமிழர்களில் பலர் 1960ஆம் ஆண்டு வரை கயானாவில் இருந்ததாகவும், தற்போது நாட்டில் நிலவும் அரசியல். பொருளாதாரச் சூழ்நிலைகளின் காரணமாக அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் சென்று விட்டதாக இங்குள்ள தமிழர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறும் கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் குறைந்தது ஒருவராகிலும் அமெரிக்காவிலோ, கனடாவிலோ பிரிட்டனிலோ வாழ்ந்து வருகின்றனர்.[25]

தமிழர்கள் தற்போது ஏறக்குறைய அறுபது ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். சில ஊர்களில் ஒரு சில குடும்பங்கள் உள்ளன. ஆனால் கங்காராம், ரோஸ்ஹால், ஆல்பியன் போன்ற பெர்பீஸ்-கொரன்டீன் பகுதிகளில் உள்ள ஊர்களிலும், மேற்கு டெமராராவில் உள்ள ஸ்டுவர்ட்வில்லிலும், கிழக்கு டெமராராவில் உள்ள ட்ரையம்ப்பிலும் (Triumph) அறுபது முதல் நூறு தமிழ்க் குடும்பங்கள் இருக்கலாம் என என் கள ஆராய்ச்சி மூலம் அறிய முடிகின்றது.[26]

இங்குள்ள தமிழ்க் குடும்பங்களில் பெரும்பான்மையானவை தனிக் குடும்பங்களாக இருக்கின்றனவே ஒழியக், கூட்டுக் குடும்பங்களாக இல்லை. சம்பாதிக்கும் திறமை ஏற்பட்டுத் திருமணம் செய்து கொண்டவுடன் தம்பதிகள் தம் தாய் தந்தையர் வீட்டை விட்டு வெளியேறித் தனிக் குடுமபமாக வாழ ஆரம்பித்து விடுகின்றனர். அதோடு, கணவன் மனைவி இருவரும் ஏதாகிலும் ஒரு தொழில் செயகின்றனர். இந்த நாட்டில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து சம்பாதிக்காமல் குடும்ப வாழ்க்கையைச்

25. திரு. சிவைபேன் ஜான், திரு பாஸ்கர் நாயுடு. திரு. ராம்சமி ரெங்கநாத நாப்கேன் அவர்களோடு முறையே 15-12-1986, 9-6-1987 அன்று நடத்திய பேட்டியின மூலம் அறிந்த செய்திகளின் சுருக்கம்.

26. 15-11-1986 முதல் 9-6-1987 வரை நடத்திய கள ஆய்வின் மூலம் அறிந்த செய்திகள், இந்தக் கள ஆய்வில் எனக்கு மிகவும் உதவியாக இருந்தவர் வேஙகடேஸ்வரன் ஜான் ஆகும்.

படம் 3: காளியின் உருவத்தோடு, ஒரு சிறிய சிவன் சிலையையும், சரஸ்வதி, இலட்சுமி படங்களையும் காண லாம். படத்தில் நிற்பவர் கோயில் காரியங்களைக் கவனிக்கும் ஓர் உதவியாளர்.

படம் 4 : வெள்ளைச்சிலை முனேஸ்வரன்; மற்றொரு சிறிய சிலை மாரியம்மனுடையது. ஒரு பலகையில் பூசைப் பொருள்களும், சங்கும் உள்ளன. பெருமாள் வழிபாடு நடைபெறும் கோயில்களில் பூசைசெய்யும்போது சங்கினை ஊதி ஆர்த்தி எடுப்பர். இந்தக் கோயில்டெமராரா பகுதியில் உள்ள ஹெர்ஸ்டெலிங் (Herstelling) என்னும் ஊரில் உள்ளது காளி வழிபாட்டோடு பெருமாள் வழிபாடும் இக் கோயிலில் நடைபெறுகின்றன.

படம் 5: எல்லாக் கடவுளரையும் உயரமான மேடையில் காணலாம். இடது கோடியில் உள்ள சிலை கண்ணனுடையது; நடுவில் வெள்ளை ஆடை அணிந்த சிலை முனேஸ்வரன்; வலது கோடியில் உள்ள சிலை திருமால். படத்தில் படையலைக் காணலாம். ஹெர்ஸ்டெரிங் கோயிலின் முக்கிய பூசை அறை இது.

படம் 6 : பக்தர் கூட்டம். மதறாசிகளின் கூட்டத்தில் ஓர் ஆப்பிரிக்கரும் நடுவில், முதல் வரிசையில், அமர்ந்திருப்பதைக் காணலாம்- பெண்கள் யாவரும் ஐரோப்பிய உடை அணிந்திருப்பதைக் காணலாம். இந்த உடையில்தான் மக்கள் யாவரும் எங்கும் செல்வார்கள்.

செம்மையாக நடத்த முடியாது. ஏனெனில் நாட்டின் வாழ்க்கைத் தரமும், வாழ்க்கை முறையும் மக்களின் வருவாய்க்கு ஏற்ப அமைந்திருக்கவில்லை.

இந்த நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு இல்லை; அதற்கான தேவையும் இன்னும் பல ஆண்டுகளுக்கு இருக்காது. பெரும்பான்மையான தமிழ்க் குடும்பங்களில் ஐந்து முதல் பத்துக் குழந்தைகள் வரை சாதாரணமாகக் காணலாம். நான் பேட்டி கண்ட ஒரு நடுத்தரக் குடும்பத் தலைவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், ஒன்பது பெண் குழந்தைகளும் பிறந்ததாகவும், அவர்களில் ஒரு மகன் இறந்து விட்டதாகவும், மற்ற மக்கள் உயிருடன் இருப்பதாகவும் கூறினார். அவர்களின் பெயர்களாவன :

1. ராம்சமி சின்னபேன் — ராமசாமி சின்னப்பன்
2. வெள்ளினீ — வள்ளி?
3. வெளைமா — வெள்ளையம்மா
4. சிரொமணி — சிரோண்மணி
5. லசுமி — லட்சுமி
6. சிந்தமணி — சிந்தாமணி
7. திரௌதி — திரௌபதி
8. அழகுயாலு — அழகுக்குயில்?
9. நயினி — நளினி?
10. மரியாய் — மாரியம்மா

என்பதன் சுருக்கம்.[27]

இங்குள்ள தமிழர்களின் பெயர்களைக் கேட்கும் போது சில சமயங்களில் இவைகள் தமிழ்ப் பெயர்கள்தானா என்னும் ஐயம் ஏற்படுவது இயல்பு. குறிப்பாகக் கீழ் வரும் இரு பெயர்களைக் காண்போம் :

களிச்சரன் — காளீஸ்வரன்
சோன்முக் — சண்முகம்

இவ்வாறு சில பெயர்கள் உருத்தெரியாமல் சிதைந்து போனதற்குக் காரணம், இந்தப் பெயர்களைப் பத்தொன்பதாவது நூற்றாண்டில் உச்சரிக்கத் தெரியாமல் திகைத்த டச்சுக்காரர்களும், பிரெஞ்சுக் காரர்களும், ஆங்கிலேயர்களும் தங்களுக்கு ஏற்ற முறையில்

27. திருவாட்டி மாரியாய் அவர்களோடு ஆல்பியன் நகரத்தில் 9-6-1987 அன்று நடத்திய பேட்டியின் மூலம் அறிந்த செய்திகள்.

உச்சரித்ததோடு அல்லாமல் அதேபோல் பதிவேடுகளிலும் பதித்து விட்டார்கள். ஆதலின் ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றவர்களின் சந்ததியர்க்கும் மேற்குறிப்பிட்டது போன்ற தவறான உச்சரிப்போடு கூடிய பெயர்களே நிலைத்து விட்டன. ஆனால் இந்தப் பொதுவிதிக்கு மாறான சில தமிழ்க் குடும்பங்களும் உள்ளன.

கயானாவில் தமிழ்ப் பண்பாட்டையும், கலைகளையும், சமயத்தையும் நிலை நாட்ட வேண்டும் என்னும் எண்ணத்துடன் சில குடும்பங்கள் இன்னும் வாழ்ந்து வருகின்றன. இவர்களில் இலர் தமிழில் கொச்சையாகப் பேசக் கூடியவர்களாக உள்ளனர். சிலர் எழுத்துக்கூட்டிச் சில சொற்களைப் படிக்கும் நிலையில் உள்ளனர். அத்தகைய குடும்பங்களில் ஒன்று மாண் ரிபோஸில் (Mon Repos) உள்ளது. அந்தக் குடும்பத் தலைவரின் பெயர் சின்னயேன் ஜான் ஆகும். இவர் தம் மக்களுக்கு வைத்திருக்கும் கீழ்க்காணும் பெயர்களின் மூலம் அவருடைய தமிழ்ப் பற்றையும் சமயப் பற்றையும் தெளிவாக அறியலாம்.

1. வேங்கடேஸ்வரன் ஜான்
2. விஜயலட்சுமி ஜான்
3. வேதவல்லி ஜான்
4. மாணிக்கவாசகர் ஜான்
5. கணேசன் ஜான்

ஜான் என்னும் பெயரைப் பார்த்ததும், இவர்கள் கிறித்துவர்களோ என்ற ஐயம் ஏற்படும். ஆனால் இவர்கள் கிறித்துவர் அல்லர்; இந்துக்களே யாவர்.[28]

தமிழ் நாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வந்தவர்களைப் பல்வேறு தோட்டங்களுக்குப் பிரித்து அனுப்பினார்கள் என்று கண்டோம். அந்தத் தோட்டங்களில் மாதா கோயில்கள் இருந்தன. அவைகளில் முறையாக நடைபெறும் பிரார்த்தனைக் கூட்டங்களைக் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்து மதம் மாறியவர்கள் சிலருண்டு. புதிதாக வந்த தமிழர்களைப் படிப்படியாகத் தங்கள் பிரசாரத்தின்மூலம் பாதிரியார்கள் திட்டமிட்டுக் கிறித்துவ சமயத்தைத் தழுவும்படிச் செய்தவர்களும் உண்டு. இந்துக்களுக்குள் இருக்கும் சாதிவேறுபாடு, பல கீழ்ச் சாதி எனச் சொல்லப்படுகின்ற தமிழர்களைக் கிறித்துவ சமயத்திற்கு விரட்டி விட்டது. அவ்வாறு மதம் மாறியவர்களில் சிலர், தம் சமயப் பாரம்பரியத்

28. திரு. சின்னயேன் ஜான் அவர்களோடு நடத்திய பேட்டி.

தையும் மேன்மையையும் அறிந்து மறுபடியும் இந்து சமயத்திற்கே திரும்பியவர்களும் உண்டு. அவ்வாறு இந்து சமயத்திற்குத் திரும்பிய பல தமிழ்க் குடும்பத்தினரின் இயற்கையான இந்து சமயப் பெயர்களோடு, ஜான், ஜோசப் போன்ற கிறித்துவப் பெயர்களும் இணைந்திருப்பதனைக் காணலாம். இந்தக் காரணத்தினால்தான் சின்னப்பனோடு ஜான் என்னும் பெயரும் இணைந்துள்ளது.[29]

இந்த நாட்டிற்கு வந்த மதறாசிகளில் ஏறக்குறைய முப்பத்தைந்து விழுக்காட்டினர் தற்போது கிறித்துவர்களாக உள்ளனர். மீதியுள்ளவர்கள் யாவரும் இந்துக்கள். கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவர்களில் சிலர் நன்றாகப் படித்து முன்னேறியுள்ளனர் என்பதனை இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது.[30]

இந்துக்களில் பெரும்பான்மையோர் இன்றும் தெய்வ நம்பிக்கையும், தெய்வ வழிபாட்டில் உறுதியும் உடையவர்களாக உள்ளனர். கடவுள் வழிபாடு இல்லத்தில் நடைபெறுவதோடு அல்லாமல், கோயில்களிலும் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது.

இந்தக் கோயில்களைக் கிறித்துவ வழக்கப்படி "சர்ச்" என்றே அழைக்கின்றனர். அதோடு சில சமயங்களில் "இந்து சர்ச்" என்று கூறுவதும் உண்டு. இந்தக் கோயில்களைத் தமிழ் நாட்டில் உள்ள கோயில்களோடு எந்த வகையிலும் ஒப்பிட முடியாது. உயர்ந்த கோபுரங்களோ, பெரிய சுற்று மதில்களோ, கற்களாலும் உலோகத்தாலும் செய்யப்பட்ட சிலைகளோ, பழமங்களோ இக்கோயில்களில் இல்லை. பெரும்பான்மையான கோயில்கள் நம் வீட்டுப் பூசை அறைபோல் பெரிய அளவில் உள்ளன. தெய்வச் சிலைகளுக்குப் பதிலாகப் படங்களை வைத்து வழிபடுகின்றனர். பெரும்பான்மையான கோயில்களில் லட்சுமி படங்களும், கணேசர் படங்களும், கிருஷ்ணன், ராமர் படங்களையும் காணலாம். சில கோயில்களில் படங்களோடு களிமண்ணால் சிலைகளைச் செய்து, அழகிய வண்ணங்கள் தீட்டி வழிபாட்டிற்குப் பிரதிஷ்டை செய்து வைத்துள்ளனர்.

---

29. மேலது; திரு, பாஸ்கர் நாயுடு அவர்களோடு ஆல்பியன் நகரத்தில் 9-6-1987 அன்று நடத்திய பேட்டி மூலம் அறிந்த செய்திகளின் சுருக்கம்.

30. என் கள ஆய்வினால் அறிந்த உண்மை.

இத்தகைய கோயில்களில் பல பெரிய வீடுகள் போல் ஏறக்குறைய நாற்பதுக்கு மேற்பட்ட ஊர்களில் உள்ளன. கொரன்டீன்-பெர்பீஸ் பகுதிகளில் பதினாறு ஊர்களிலும், கிழக்கு டெமராராவில் இருபதுக்கு மேற்பட்ட ஊர்களிலும், மேற்கு டெமராராவில் இரண்டு ஊர்களிலும், எசிக்யூபோவில் மூன்று ஊர்களிலும் உள்ளன.

இக்கோயில்கள் யாவற்றிலும் முதற்கடவுளாக இடம்பெறுவது காளியம்மன் அல்லது மாரியம்மனாகும். அதோடு மட்ரைவீரன் (மதுரை வீரன்), முனேஸ்வரன் (முனீஸ்வரன்), மாயன் பெருமாள் (திருமால் அல்லது விஷ்ணு) போன்ற கடவுளர்கள் இடம்பெறுகின்றனர். பல கோயில்களில் கிராம தேவதைகளும் உற்சவ மூர்த்திகள்போல் முக்கியஇடம்பெறுகின்றன.(பார்க்க படங்கள்3,4)

காளியம்மன் அல்லது மாரியம்மன் கோயில்களை இருவகையாகப் பிரிக்கலாம். கோழி, ஆடுபோன்ற உயிர்களைப் பலி கொடுத்துத் தமிழ்நாட்டுக் கிராம தேவதைகளை வழிபடுவது போல், பூசைசெய்யும் வழக்கம் பல கோயில்களில்உண்டு. உயிர்ப்பலி கொடுக்கும் பழக்கம் சில கோயில்களில் இல்லை. பல கோயில்களில் உயிர்ப்பலி கொடுத்துப் பூசை செய்யும் வழக்கம் இருப்பதால், பிற இந்தியர்கள் மதறாசிகளை இந்து சமயத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்பவர்கள் என்றும், தூய்மையற்றவர் என்றும், இழித்துக் கூறும் வழக்கம் இன்னும் நடைமுறையில் உள்ளது. சிலகோயில்களில் தாழ்ந்த சாதி எனக் கருதப்படுவோரைக் கோயிலுக்குள் அனுமதிப்பதில்லை. எனினும், இந்தியாவில் உள்ளது போன்ற சாதிப் பிளவு இங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஆல்பியன் காளியம்மன் கோயிலில் கடந்த முப்பது ஆண்டுகளாகக் கோயில் பூசாரியாக இருக்கும் பாஸ்கர் நாயுடு என்பவரைச் சாதிப்பிரிவு பற்றிக் கேட்டபோது அவரால் யார் உயர்ந்த சாதியினர் என்றும், யார் தாழ்ந்த சாதியினர் என்றும் தெளிவாகக் கூற இயலவில்லை. அவர் கருத்துப்படி ராம்சமி (ராமசாமி), வெங்கட்சலம் (வேங்கடாசலம்), நார்யண்சமி (நாராயணசாமி), முன்சமி (முனுசாமி). கோவிண்ட்சமி (கோவிந்தசாமி), போன்றோர் உயர் சாதியினர்; மற்றையோர் தாழ்ந்த சாதியினர். அதோடு சில குடும்பங்களின் பெயர்களைக் கூறி அவர்கள் யாவரும் தாழ்ந்த சாதியினர் என்றார்.[31] இந்தச் சாதிப் பாகுபாடு பெர்பீஸ் பகுதியில் அதிகம் இருப்பதாக என் கள ஆய்வின்மூலம் அறிந்தேன்.

---

31. திரு. பாஸ்கர் நாயுடு அவர்களோடு நடத்திய பேட்டி.

இந்த நாட்டுக் கோயில்களில் மூலவரான காளியம்மனுக்குப் பெரிய அறையும், மட்ரை வீரன் (மதுரை வீரன்) போன்ற கிராம தேவதைகளுக்குத் தனித் தனியான சிறிய அறைகளும் உள்ளன. கோயில் சிறியதாக இருந்தால் எல்லாக் கடவுளரையும் ஒரே அறையில் உயரமான மேடையில் வைத்திருப்பார்கள். (பார்க்க படம் 5)

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் கோயில் பூசை சிறப்பாக நடைபெறும். காலை ஒன்பது மணிமுதல் மக்கள் கோயிலில் கூடத் தொடங்குவார்கள். வழிபாட்டிற்காக வரும் பக்தர்கள் பூசைத் தட்டில் வாழை, ஆரஞ்சு போன்ற பழங்களையும், பல நிறப்பூக்களையும், தேங்காயையும் கொண்டு வந்து காளியம்மன் முன் வைத்துவிட்டு முற்றத்தில் போடப்பட்டிருக்கும் விசுப்பலகையில் அமைதியாக உட்கார்ந்திருப்பார்கள். (பார்க்க படம் 6) சிலபக்தர்கள் சுண்டல், வடை, அரிசிமாவால் செய்த கேசரி, போன்றவைகளைச் சிறப்புப் படையலாகக் கொண்டு வரும் வழக்கம் உண்டு. தங்களின் வேண்டுதல் நிறைவேறிய போதும், தீராத துன்பங்கள் விலகியபோதும், நோய் தீர்ந்த போதும் இத்தகைய சிறப்புப் படையலைக் கொண்டுவரும் வழக்கம் இந்த நாட்டில் உள்ளது.

பூசாரி வந்தவுடன், அவரும் பக்தர்களோடு அமர்ந்து பல வகைப் பக்திப் பாடல்களை ஒரு மணி நேரம் தாளத்தோடு பாடுவார். பெரும்பாலான பாடல்கள் ''மாரியம்மன் தலாத்து'' (மாரியம்மன் தாலாட்டு) என்னும் நூலிலிருந்து எடுத்தவை, ''சிலக்குத்து'' என்னும் நூலிலுள்ள அம்மன் பாடல்களையும், வட இந்தியாவின் பாடப்படும் பஜனைப் பாடல்களையும் ஆங்கிலத்தில் எழுதி வைத்துக்கொண்டு பாடும் வழக்கமும் உண்டு. எந்தப் பாடலைப் பாடுவதாக இருந்தாலும் பக்தர் ஒருவர் முதலில் ஒரு வரியைப் பாட, மற்றவர்கள் அதனைத் திரும்பப் பாடுவார்கள். இந்த முறை எல்லாக் கோயில்களிலும் பின்பற்றப்படுவதால், கோயிலுக்கு வரும் பக்தர்கள் யாவரும் பெரும்பாலான பக்திப் பாடல்களைத் தெளிவாக நினைவில் வைத்துள்ளனர். இந்தக் கூட்டுப் பிரார்த்தனை முடிந்தவுடன் பூசாரி எழுந்து. பூசை செய்யத் தொடங்குவார். ஒவ்வொரு தட்டிலும் உள்ள பூக்களில் சிலவற்றைச் சிலையின் பாதத்திலோ படத்தின் அடியிலோ வைத்து விட்டுச் சாம்பிராணி தூபம் காட்டிப் பின் கற்பூர ஆரத்தியோடு பாடல்கள் பாடிக்கொண்டே பூசையை முடித்து விடுவார், பூசை நிகழும் சமயத்தில் பறையொலி எழுப்புவர்.

பூசை நிகழும் காலத்தில் சில பெண்களும் ஆண்களும் உணர்ச்சி வசப்பட்டுத் தெய்வம் ஆடுவதுமுண்டு. இதனை வெறியாட்டு எனக்

கருத இடமுண்டு. பூசை முடிந்தவுடன் வழிபாடு செய்ய வந்த யாவருக்கும் பக்தர்கள் கொண்டு வந்த பழங்களையும், தேங்காய்களையும், பிரசாதங்களையும் பங்கிட்டு வாழை இலைகளிலோ தாமரை இலைகளிலோ கொடுப்பர்.

இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் மற்றோர் சிறப்புப் பூசை நடைபெறும். அப்போது கோவிலோடு தொடர்புள்ள ஒருவர் உணர்ச்சி மேலிட்டால் வெறியாட்டு ஆடத் தொடங்குவார். அந்த வெறியாட்டின்போது குறி சொல்லும் வழக்கமும் உண்டு. பக்தர்கள் வேண்டிக் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்வதோடு, சில பரிகாரங்களையும் செய்யும்படி கூறுவர். நோயுற்றோருக்கு மந்திரம் செபித்து, தண்ணீர் தெளித்து வேப்பிலை அடிப்பதோடு சில நாட்டு மருந்துகளையும் உபயோகப் படுத்தும்படி கூறுவர். ஆங்கில மருத்துவரால் தீர்க்கமுடியாத சில நோய்களுக்கும், தோல் வியாதிகளுக்கும் மருந்து தருகின்றனர். இதனால் குணம் பெற்றோர், அந்தக் கோயிலின் நிரந்தர பக்தர்களாகின்றனர். இத்தகைய கோயில்களுக்கு மதறாசிகள் தவிர, பிற இந்தியர்களும், மற்ற சமயத்தவர்களும், ஆப்பிரிக்கர்களும் வருகின்றனர். கொரன்டைனிலுள்ள ரோஸ் ஹால் கோயிலை நடத்துபவர் ஓர் ஆப்பிரிக்கர்; ஹோப்ஸ்டெலிங் கோயிலில் குறி சொல்பவர் ஒரு முஸ்லீம். மதறாசிகள் நடத்தும் இக் கோயில்களில் சில, வெறும் வழிபாட்டுக் கோயில்களாக இல்லாமல் நோய் தீர்க்கும் மருத்துவ நிலையங்களாகவும் உள்ளன.[32]

கல்கத்தா வாசிகளின் கோயில்களில் சில வட இந்திய பாணியில் கட்டப்பட்டுள்ளன. அவர்களில் சிலர் சிவனையும், பலர் கிருஷ்ணனையும் வழிபடுகின்றனர். இந்தக் கோயில்களில் சில, அழகாகக் கட்டப்பட்டுள்ளன. எனினும் எல்லாக் கோயில்களிலும் இறை வழிபாடு நாள்தோறும் நடைபெறுவதில்லை. பொதுவாக, வாரத்தில் இரண்டு நாட்களில் பூசை நடைபெறும்; ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் பூசை மிகவும் முக்கியமானது.

இந்தியாவிற்கு மிக அருகில் உள்ள இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ் போன்ற நாடுகளில் இந்தியப் பண்பாடு ஆழப் பதிந்துள்ளது. அதற்குக் காரணம் அந்நாடுகளில் தமிழகத் தொடர்பு அறுபடாமல் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. ஆனால் மேற்கிந்தியத் தீவுகளிலும், கயானாவிலும் உள்ள மதறாசிகளுக்கு இத்தகைய வாய்ப்பில்லை. ஆதலால் நூற்று

32. என் கள ஆய்வினால் அறிந்த செய்திகள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் மூதாதையர் கடைப் பிடித்த கடவுள் வழிபாட்டு முறையினை இன்றும் இவர்கள் அரை குறையாகக் கடைப் பிடித்து வருகிறார்கள். சினிமா, தொலைக் காட்சி, வீடியோ போன்ற சாதனங்களின் மூலம் இந்தியத் தொடர்பை இவர்கள் பெற்றிருந்தாலும், அது மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ் போன்ற நாடுகளில் வாழும் தமிழர் பெற்றிருக்கும் தொடர்பிற்கு இணையாகாது.

பொதுவாகக் கயானாவில் வாழும் இந்தியர்களின் நடையுடை பாவனைகள் யாவும் ஆங்கில, அமெரிக்க நாகரிகத்தைப் பின் பற்றியவை. நாட்டின் அரசியல் மொழியாகவும், பேச்சுமொழி யாகவும் உள்ளது ஆங்கிலமே. பெரும்பாலான இந்தியர்களுக்குத் தங்களின் தாய்மொழி தெரியாது; அப்படித் தெரிந்திருந்தாலும் அது அரைகுறையாகவே இருக்கும். தம் தாய்மொழியை யார் மறக்கின்றார்களோ அவர்கள் தம் பண்பாட்டை மறக்கின்றார்கள் என்று இந்த நாட்டு வரலாற்றுப் பேராசிரியர் நோயல் மெனீஸ் (Sister M.N. Menezes) என்பவர் கூறியுள்ளார்.[33] மொழியை மறந்த தோடல்லாமல், இனக் கலப்பும் இந்த நாட்டு மக்களிடை அதிகம் நிகழ்ந்துள்ளது. இதற்கு அதிகமான விலக்கானவர்கள் இந்தியர்கள்; மதறாசிகளில் வேற்றினத்தவரின் கலப்புமிகக்குறைவு, எனினும், மதறாசிகளில் பலர் கல்கத்தாவிலிருந்து வந்தவர்களோடு கொள்வினை கொடுப்பினைத் தொடர்பை ஏற்படுத்திக் கொண் டுள்ளனர். இந்த நாட்டு மக்களில் பலர், குறிப்பாக இந்தியர்கள் யாவரும் நன்றாக மாமிசம் உண்டு, 'ரம்' என்னும் மதுவைக் குடித்துக் களிப்பதில் இணையற்றவர்கள். இது இந்த நாட்டின் பொதுப் பண்பாடு, இருந்தாலும் இந்தியர்களில் பலர் தம் பாரம் பரியத்தை மறக்காமல் உள்ளனர். பண்பாட்டுக் கூறுகள் சில வற்றை உறுதியாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இக்கூறுகளி ல் ஒன்றுதான் கடவுள் நம்பிக்கையும், கோயில் வழிபாடும் ஆகும்

இந்த நாட்டில் உள்ள இளைஞர்களில் சிலர். குறிப்பாகத் தமிழ் இளைஞர்களில் பலர் தம்முடைய பாரம்பரியச் சிறப்பை அறியவும், தமிழ்மொழி. பண்பாடு இவைகளைக் கற்கவும் துடிக் கின்றனர். பொருளாதார வளங்குன்றிய நாடான காரணத்தினால்

---

33. பேராசிரியர் நோயல் மெனீஸ் என்பவர் கயானாப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பேராசிரியராக உள்ளார். 16-4-1987 அன்று நடந்த ஆராய்ச்சித் தொடர் பேச்சில் கூறிய கருத்து. இவர் போர்த்துகீசிய வம்சாவளியைச் சார்ந்த கிறித்துவர்.

மலேசியா—சிங்கப்பூர்த் தமிழர்களைப்போல் தங்கள் பணத்தைச் செலவு செய்துகொண்டு தமிழ்ப் பாரம்பரியச் சிறப்புகளைத் தமிழ் நாட்டிற்கு வந்து கற்க இயலாத நிலையில் உள்ளனர். இதற்குத் தமிழகம் ஏதாகிலும் வழி செய்யுமா?[34]

---

34. இந்திய அரசாங்கம் உலகில் உள்ள நான்கு நாடுகளில் (கயானா, சுரினாம், பிஜீ, மொரிசியஸ்) ''இந்தியப் பண்பாட்டு மையம்'' (Indian Cultural Center) என்பதனை நிறுவி அதன் மூலம் இந்திமொழி, பண்பாடு, கலைகள் ஆகியவற்றை மட்டும் பரப்பி வருகின்றது. அத்தகைய மையங்களில ஒன்று கயானாவில் பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. மையங்களுக்குத் தமிழக அரசும் தன் செலவில் ஓர் அறிஞரை அனுப்பித் தமிழ்மொழி, பண்பாடு, கலைகளைப் பரப்ப முன் வரலாம். குறிப்பாக, கயானா, பிஜீ, மொரிசியஸ் போனற பகுதிகளுக்குத் திண்ணமாக ஒருவரை அனுப்புவது நல்லது.

2. தமிழக அரசு அமெரிக்காவில் உள்ள நியூயார்க் அல்லது மியாமி நகரத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஏதேனும் ஒன்றில் தமிழ்த் துறையை நிறுவினால் "கயானாவில் உள்ள தமிழர் களும், அமெரிக்கா, மேற்கிந்திய தீவுகளில் உள்ள தமிழர்களும் அங்குச் சென்று தமிழையும் தமிழ்நாட்டுக் கலைகளையும் படிக்க வசதியாக இருக்கும். இதேபோல் சிங்கப்பூரிலும், ஆஸ்திரேலி யாவிலும் தமிழ்த் துறையினை நிறுவுவது இன்றியமையாத தாகும். ஆஸ்திரேலியாவில் சிட்னி, பெர்த் போன்ற இடங் களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறையை நிறுவி னால் நல்லது. ஏனெனில் இந்த இரு நகரங்களிலும் நிறையத் தமிழர்கள் குடியேறி உள்ளனர்.

3. பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடான கயானாவில் உள்ள தமிழ் இளைஞர்களில் ஒருவருக்கு ஒவ்வோர் ஆண்டும் உதவிப் பணம் கொடுத்துத் தமிழகத்திற்கு வரவழைத்து, ஆறுமாத காலம் அடிப்படைத் தமிழையும், கலைகளையும், இந்து சமயத் தைச் சார்ந்த கோயில் வழிபாட்டு முறைகளையும் கற்பதற் கான வாய்ப்பை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமோ, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகமோ ஏற்படுத்தித் தருவதற் கான பண வசதியினைத் தமிழக அரசு செய்தால் மிகப் பய னுடையதாக இருக்கும். இவ்வகையில் அரசுக்கு உதவியாகத் தமிழகத்தில் உள்ள சைவ வைணவ ஆதீனங்களும், மடங்களும் பொருளுதவி செய்ய முன்வந்தால் நாயன்மார்களும், ஆழ்வார் களும் வளர்த்த சைவ, வைணவ சமயங்களைத் தமிழர் வாழும் கடல் கடந்த நாடுகளிலும் அழியாமல் காக்கலாம்.

4. இலண்டன் பல்கலைக் கழகத்தில் டாக்டர் ஜான்மார் என்பவர் தற்போது தமிழைக் கற்பித்து வருகிறார். அவர் ஓய்வு பெற்றால் அங்குத் தமிழ் நீட்டிக்குமா என்னும் ஐயம் உள்ளது. அந்தப் பல்கலைக் கழகத்தில் சிறப்பு அறக்கட்டளை (Special endowment) ஒன்றை ஏற்படுத்தி தமிழ் அங்கு என்றும் கற்பிக்கப்படுவதற்கான ஒரு வழியைத் தமிழக அரசு ஏற்படுத் தியாக வேண்டும். இங்கிலாந்தில் தற்போது நிறையத் தமிழ

கள் குவிந்துள்ளனர் என்பதனையும் நினைவில் கொண்டு அறக் கட்டளை நிறுவுவதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபடுதல் வேண்டும்.

தமிழர்கள் வாழும் சில நாடுகளில் பணியாற்றியதோடன்றித் தமிழர்கள் வாழும் பல நாடுகளையும், உலக நாடுகள் பல வற்றையும் சுற்றிப் பார்த்த அனுபவத்திலும் தமிழுணர் வுள்ளவன் என்னும் நிலையிலும் மேற்கூறிய கருத்துக்களைத் தமிழக அரசு ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்னும் நோக்கத் தில் மிகப் பணிவுடன் இக்கட்டுரையின் குறிப்பில் இணைத் துள்ளேன்.

குறிப்பு : இக்கூட்டுரையில் உள்ள நான்கு புகைப்படங்களையும் எடுத்தவர் கட்டுரை ஆசிரியரே.

2. ஆங்காங்

அ. அய்யூப்

1840-1898 காலப்பகுதியில் ஆங்கிலேயர் சீனாவிடமிருந்து பெற்று உருவாக்கிய இந்நாட்டில், இன்று 70 இலட்சம் மக்கள் இருந்தபோதும், வெறும் ஆயிரம் தமிழரே உள்ளனர். சுமார் ஒரு நூற்றாண்டாக வைர வாணிகம், வங்கி அலுவல், தனியார் நிறுவனம், அரசாங்கம் ஆகிய வற்றில் பல வகையில். ஈடுபட்டுள்ளனர். மாணிக்க வணிகத்தில் ஈடு பட்ட தமிழக இஸ்லாமியர் பலர், தமிழர் வாழ்க்கைத் தரம் உயர்வாக உள்ளது, குடும்பம் ஊரிலும், பணிபுரிவோர் ஆங்காங்கிலுமாக இருப்ப துண்டு; தமிழ் விழாக்கள், சமய வழிபாடு உண்டு, தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், தமிழர் கூடி மகிழும் இடமாக உள்ளது. தமிழ் உணவு விடுதி கள் அமைகின்றன. இங்கு அரசியலோ, கட்சிகளோ இல்லை, தமிழ்க் கல்விக்கோ தமிழறிவை வளர்க்கவோ இங்கு இடமில்லை.

சீனக் கடலில் உள்ள ஒரு சிறிய தீவு, ஆங்காங்.

ஆங்காங், கவ்லோன் ("9 பாம்புகள்" என்று பொருள்), புதிய பகுதி ஆகிய மூன்றும் சேர்ந்ததுதான், இன்று ஆங்கிலேயரின் குடியேற்ற நாடாக இருக்கும், ஆங்காங்.

சீனாவில் கஞ்சா வியாபாரம் செய்துவந்த ஆங்கிலேயர்களைச் சீன மன்னர் வெளியேற்றி விட்டார். அந்த வணிகர்களிடம் இருந்த கஞ்சாவைப் பறித்துக் கடலில் எறிந்தார். இதற்கு இழப்பீடு வேண்டும் என்று படை திரட்டி வந்த ஆங்கிலேயர், 1840-இல் ஆங்காங்கைப் பிடித்துக் கொண்டனர், 1860இல் சீனாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, கவ்லோன் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. புதிய பகுதியை 1898 சூலை, முதல் 99 ஆண்டுக்கு சீன அரசிடம் இருந்து ஆங்கிலேயர் குத்தகைக்கு எடுத்துக் கொண் டார்கள். இவ்விதந்தான் ஆங்காங் நாடு தோன்றியது.

இந்த நாட்டின் மொத்தப் பரப்பளவு, 391 சதுர மைல், அதில் ஆங்காங் தீவு வெறும் 29 சதுர மைல்தான். ஆனால், நாட்டு மக்களில் நான்குபேரில் ஒருவர் ஆங்காங் தீவில் வசிக்கிறார். 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி ஆங்காங் நாட்டின் மொத்த மக்கள் தொகை 40 இலட்சம். அவர்களில் ஆங்காங் தீவு 10 இலட்சம்; கவ்லோன் 22 இலட்சம்; புதிய பகுதி 7 இலட்சம். கடலில் படகுகளில் வாழும் சீன அகதிகள் 1 இலட்சம்.

கவ்லோன் - ஆங்காங் பகுதிகளைப் படகுகள் இணைக்கின்றன. கடலுக்கு அடியில் சாலையும், இரும்புப் பாதையும் அமைக்கப்பட்டு உள்ளன.

நூறு ஆண்டுக்கு முன்பு கஞ்சா வியாபாரிகளின் தலைநகராக விளங்கிய ஆங்காங், இன்று உலகின் மிக முக்கியமான வணிகச் சந்தையாகத் திகழ்கிறது. அமெரிக்க டாலரின் மதிப்பு, நாள் தோறும் ஆங்காங்கில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. தங்கமா? வயிரமா? அவற்றின் தலையெழுத்து எழுதப்படுவதும் ஆங்காங்கில் தான்! வணிகத்தில் ஆங்காங்குக்கு ஈடான ஒரு நகரம் உலகில் இல்லை என்றே சொல்லிவிடலாம். உலக வணிகத்தை ஒரு மனிதன் என்று வைத்துக்கொண்டால், அவனது நாடித் துடிப்பைப் பிடித்துப் பார்க்கும் கை ஆங்காங்தான்!

தமிழர்கள்

இன்று (1986-இல்) ஆங்காங்கில் 70 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் 99 விழுக்காடு சீனர்களே'; ஒரு விழுக்காடு தான் (70 ஆயிரம் பேர்) மற்றவர்கள்.

ஆங்காங்கில் 15 ஆயிரம் இந்தியர்கள் இருக்கின்றனர். இவர்களில் தமிழர்கள் ஏறத்தாழ ஆயிரம் பேர், தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் இருந்து வந்த தமிழர்கள், ஈழத்தில் இருந்து வந்த தமிழர்கள், பர்மா மலேசியா, சிங்கப்பூர், வியட்நாம் நாடுகளில் இருந்து வந்த தமிழர்கள் அனைவரும் இந்த ஆயிரத்துள் அடங்குவர்.

தமிழர் நிலை

ஆங்காங்கில் உள்ள தமிழ் மக்கள், நல்ல நிலையில் இருக்கின்றனர்,

தமிழ்நாட்டில் இருந்து வந்த தமிழர்கள் பெரும்பாலும் மாணிக்க வியாபாரம் செய்கின்றனர். சிலர் வங்கிகளில் பணியாற்றுகின்றனர். ஈழத் தமிழர்கள் அரசாங்கத்திலும், தனியார்

நிறுவனங்களிலும் அதிகாரிகளாகத் திகழ்கின்றனர். மற்ற தமிழர்களும் அப்படியே. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்திலும், நாணய மாற்றுத் தொழிலிலும் சில தமிழர் ஈடுபட்டு உள்ளனர். சிலர் மருத்துவர்களாகவும் பொறியாளர்களாகவும் இருக்கின்றனர்.

தாயகத்துத் தமிழர்கள் உணவுவிடுதிகளும் நடத்துகின்றனர்; ஆங்காங்கில் அவர்கள் நடத்தும் ஐந்து உணவு விடுதிகள் உள்ளன.

தமிழ்நாட்டில் கீழக்கரை, காயல்பட்னம், தஞ்சை மாவட்டம் நீடூர், கூத்தாநல்லூர், திருக்களாச்சேரி பகுதிகளில் இருந்து வந்த முசுலிம்கள் அதிகம். இவர்கள் மாணிக்க வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் சைகோன், இரங்கூன் நகரங்களில் மாணிக்க வியாபாரம் செய்தவர்கள். 1950ஆம் ஆண்டுகளில் அந்நகரங்களில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் காரணமாக அங்கு இருந்து வெளியேறி, ஆங்காங்கில் குடியேறினர், தங்கள் மாணிக்கத் தொழிலை ஆங்காங்கில் தொடர்ந்தனர்.

தமிழர் அனைவருமே சொந்தத் தொழிலில் அல்லது பதவிகளில் இருப்பதால், அவர்களின் வாழ்க்கைத்தரம் சிறப்பாக இருக்கிறது.

ஆங்காங்கில் வரிகள் கிடையாது. வருமானவரி கூட பத்து விழுக்காடுதான்; சம்பாதித்த பணத்தைத் தாராளமாக ஊருக்கு அனுப்பிவைக்கலாம்; அதற்குக் கட்டுப்பாடு கிடையாது.

பழக்கவழக்கங்கள்

வசதியுடன் வாழ்ந்தாலும். தமிழ் மக்கள் கட்டுப்பாட்டுடன் வாழ்கின்றனர். உழைத்துச் சம்பாதித்த பணத்தை உல்லாசத்துக்கு ஊதாரித்தனமாகச் செலவிடுவது இல்லை.

அவர்களின் குடும்பங்கள் பெரும்பாலும் ஊரில்தான் உள்ளன. அவர்களின் நல்வாழ்வுக்காகவே இங்கே சம்பாதிக்க வந்து இருக்கிறோம் என்பதை எப்பொழுதும் மறப்பது இல்லை.

ஆங்காங்கில் இரவு வாழ்க்கை உல்லாசமானது. ஆனால், அங்கே தமிழர்களைக் காணமுடியாது. மாலையுடன் வேலை முடிந்துவிடும், பிறகு வீட்டோடு இருந்துவிடுவார்கள்.

குடும்பம் ஊரில் இருப்பதால் பெரும்பாலானவர்களுக்கு சொந்த சமையல்தான். காலையில் ரொட்டியைச் சுட்டுச் சாப்பிட்டுக் கொள்வோம். பிற்பகலில் போன இடத்தில் கிடைப்பதைச் சாப்பிடுவோம். இரவில்தான் நல்ல சாப்பாடு.

இங்கே குடும்பத்துடன் இருக்கும் நண்பர்கள், அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். விடுமுறை நாட்களில் ஒருவர் வீட்டில் கூடுவோம். விருந்து, வேடிக்கை என்று பொழுது கழியும். உல்லாசப் பயணங்களும் செல்லுவோம்.

பண்டிகை என்றால். எங்களுக்கும் கொண்டாட்டந்தான். அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழர் திருநாளைக் கொண்டாடு வோம். நபிகள்நாயகம் (சல்) பிறப்பு. ஏசு பிறப்பு போன்ற சமய விழாக்களையும் அந்த அந்த சமயத்தவரும் கூடிக் கொண்டாடுவது உண்டு. சீன நண்பர்கள் அவர்களின் பண்டிகைகளில் கலந்து கொள்ள எங்களை அழைப்பார்கள். நாங்களும் நமது பண்டிகை களுக்கு அவர்களை அழைப்போம். இட்லி தோசை என்றால் சீனர்கள் மகிழ்ச்சியுடன் உண்பர். சமீபத்தில் முருகன் கோவிலைக் கட்டியிருக்கிறோம். மசூதிகளும், மாதா கோவில்களும் ஏற்கனவே இருக்கின்றன. இவை வழிபாட்டு நிலையங்களாக மட்டும் இல்லாமல், தமிழர்கள் சந்தித்துக்கொள்ளும் நல்ல வாய்ப்புக்களங்க ளாகவும் விளங்குகின்றன.

தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் ஒன்று நடத்துகிறோம். கேரள மாநிலத்தவரும் இதில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். சமய வேறுபாடு இன்றி. அனைத்துத் தமிழர்களும் கூடி மகிழும் இடமாக இந்தத் தமிழ்ச் சங்கம் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் 1965இல் ஆங்காங் வந்தபோது, அனைத்துத் தமிழரும் கூடி அவருக்கு வரவேற்பு அளித்தோம். அப்பொழுது அண்ணா அவர்கள். "இங்கே ஒரு தமிழ்ச் சங்கம் அமையுங்கள்" என்று சொன்னார். அப்பொழுதே அதற்கான முயற்சியில் ஈடுபட்டு, 1967இல் தொடங்கினோம்.

தமிழர்கள் கூடி மகிழுவதே தமிழ்ச்சங்கத்தின் முதல் நோக்கம்.

திங்கள் இதழ் ஒன்றுநடத்துகிறோம். உள்நாட்டு தமிழ்நாட்டுச் செய்திகளைத் திரட்டி, இவ்விதழில் அச்சிட்டு, உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கிறோம்.

வெள்ளம், பஞ்சம் என்று தாயகத்து மக்கள் தவிக்கும்பொழுது நிதி திரட்டி அனுப்புகிறோம்.

உலகத்தமிழ் மாநாடுகளுக்குப் பேராளர்களை அனுப்புகிறோம்.

தமிழர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.

''ஒரு தமிழ்க் குரலைக் கேட்க மாட்டோமா?'' என்ற தவிப்புடன் தமிழ்நாட்டில் இருந்து ஆங்காங் வருவோரை வரவேற்று, அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கிறோம்.

தமிழ்நாட்டில் இருந்து வரும் அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், பெருமக்கள் ஆகியோருக்குத் தமிழ்ச்சங்கத்தில் வரவேற்பு அளிக்கிறோம். எம் ஜி ஆர்., நாவலர் நெடுஞ்செழியன், அரங்கநாயகம், க. இராசாராம், அப்துல் சமது, குன்றக்குடி அடிகளார், சிவாஜி கணேசன், எம்.எஸ். சுப்புலட்சுமி. நாகூர் அனிபா, அவ்வை நடராசன் ஆகியோர் நாங்கள் வரவேற்பு அளித்தவர்களில் சிலர்.

தமிழ்ச்சங்கத்தைப் போலவே குறிப்பிடப்படவேண்டிய இன்னோர் இடம், கவ்லோனில், நாதன் தெருவில் இருக்கும் ''சுங்கிங்மான்சன்''(Chunking Mansion),பலமாடிகளைக்கொண்ட இந்த மாளிகை, தமிழர் சங்கமம் ஆகும் இடமாகும். ஆங்காங் வருவோர். இங்கே வந்துவிட்டால் போதும், ஏராளமான தமிழர்களைச் சந்திக்கலாம். இது ஒரு வணிக மையம். தங்குவதற்கும் இடம் கிடைக்கும். தமிழர் நடத்தும் உணவு விடுதிகளும் இங்கே உண்டு. அம்மா - அப்பா தவிர மற்ற எல்லாம் இங்கே கிடைக்கும்'' என்று நாங்கள் சொல்வது உண்டு.

அரசியல் இல்லை

இங்கே அரசியல் இல்லை. அரசியல் கட்சிகள் இல்லை. எங்களுக்குள்ளும் அரசியல் கிடையாது.

இங்கு குடும்பத்துடன்இருப்பவர்ரிளின் குழந்தைகள் ஆங்கிலப் பள்ளிகளில் பயிலுகின்றனர்.

விளையாட்டுகளுக்கும் வாய்ப்பு இல்லை. பொங்கல் விழாவில் கூடும்பொழுது, குழந்தைகளுக்கு சில விளையாட்டுப் போட்டிகள் நடத்துவோம். இசை நாற்காலி போன்ற விளையாட்டுகளில் ஆண்களும், பெண்களும் கலந்துகொள்ளுவார்கள்.

தமிழ்க் கல்விக்கோ, தமிழறிவை வளர்த்துக்கொள்ளவோ இங்கே வழியில்லை. குழந்தைகளுக்கு, அம்மாக்கள் ஆனா ஆவன்னா சொல்லிக் கொடுத்தால்தான் உண்டு. தமிழ் இதழ்கள், வானொலி, ''வீடியோ''தான் எங்கள் தமிழறிவை வளர்க்க உதவுகின்றன.

தமிழ்நாட்டுடன் தொடர்பு

நாங்கள் ஆங்காங்கில் நிரந்தரமாகக் குடியேறிவிடவில்லை, வணிகம் செய்ய வருகிறோம்; சம்பாதிக்கிறோம், ஊருக்கு திரும்புகிறோம். ஓரிரு மாதம் குடும்பத்துடன் இருந்துவிட்டு, மீண்டும் திரைகடல் ஓடித் திரவியம் தேட ஆங்காங்குக்குப் புறப்பட்டுவிடுகிறோம். இதனால், தமிழ்நாட்டுடன் எங்களுக்கு எப்பொழுதும் தொடர்பு இருந்து கொண்டே இருக்கிறது.

பள்ளிக்கூட விடுமுறை நாட்களில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு எங்கள் குடும்பத்தாரும் ஆங்காங் வருவது உண்டு.

தொலைபேசித் தொடர்பு ஏராளம். அதுவும் நேரடி இணைப்பு. எண்களைச் சுழற்றினால், உடனே இணைப்புக் கிடைக்கும். இது தமிழ்நாட்டுடன் நாள்தோறும் எங்களுக்கு இணைப்பை ஏற்படுத்துகிறது.

அடுத்து. இதழ்கள், தமிழ்நாட்டில் வெளிவரும் "தினத்தந்தி", "ராணி", 'குமுதம்" போன்ற இதழ்கள் உடனுக்குடன் எங்களுக்கு வருகின்றன. நாங்கள் மாலை வேளைகளைக் கழிப்பது, இந்த இதழ்களின் துணையுடன்தான். இவை எங்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் பாலமாக விளங்குகின்றன. அதுமட்டுமா? எங்களுக்குத் தமிழ் படிக்கும் வாய்ப்பையும் வழங்குகின்றன.

எங்களுக்குத் தமிழுடன் தொடர்பு ஏற்படுத்துவது, "விடியோ" படங்கள்தாம். தமிழ்ப்படங்கள் தமிழ்நாட்டில் திரையிடப்படும் முன்பே இங்கு நாங்கள் பார்த்துவிடுகிறோம்!

கேள்விக்குறி

ஆங்காங்கில் உள்ள புதிய பகுதியை 99 ஆண்டுக்கு சீனாவிடம் இங்கிலாந்து குத்தகைக்கு எடுத்து இருக்கிறது. என்பதை முதலிலேயே குறிப்பிட்டு இருக்கிறேன், இந்த குத்தகைக் காலம் 1997இல் முடிகிறது, இதன் பின்? எங்கள் முன்னே பெரிய கேள்விக் குறி நிற்கிறது!

1997இல் ஆங்காங் முழுவதுமே சீனாவுடன் இணைகிறது. அது ஒரு பொதுவுடமை நாடு. அங்கே உரிமையான வணிகத்துக்கு இடம் இருக்காது. தமிழ்நாட்டில் பாண்டிச்சேரி போல, சீனாவில் ஆங்காங்கைத் தனியே வைத்து இருப்போம் என்று சீன அரசு சொல்லுகிறது. ஆனால். பொதுவுடமைக் கொள்கையை அது விட்டுக்கொடுக்குமா?

அப்பொழுது நாங்கள் ஆங்காங்கில் இருந்து வெளியேற வேண்டியிருக்கும். இப்பொழுதே பலர் பேங்காக், இலண்டன், நியூயார்க். பாரிசு என்று கால் ஊன்ற முயற்சி செய்கிறார்கள். நாங்களும் கிணற்றுத் தவளைகளாக இல்லை; வணிகத்தின் வாயிலாக உலகம் முழுக்கத் தொடர்புகொண்டு இருக்கிறோம், எனவே, எங்கள் எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தாலும், இருண்ட காலமாக இல்லை.


புதிய பகுதி
கவ்லோன்
இலாண்டவ்
தீவு
ஆங்காங்
தீவு
ஆங்காங்



பிஜியின் இருப்பிடம்

3. பிஜி

எம். ஆர். பாலகணபதி

கரும்புத் தோட்டங்களில் அடிமைகளாக வேலை செய்ய இந்தியர் பலர் அப்போதைய ஆங்கிலேய அரசினரால் 'ஏமாற்றி' பிஜிக்கும் அனுப்பப் பெற்றனர். 19-ஆம் நூற்றாண்டில் இவ்வாறு சென்றவரின் வழித்தோன்றல்கள் தற்போது மூன்றரை லட்சம் உள்ளனர்; இவரில் 70 அல்லது 80 ஆயிரம் தமிழர். பலருக்குத் தமிழ் பேசவோ எழுதவோ தெரியாது. அண்மையில்தான் தமிழ் ஒரு தேர்வுப்பாடமாக அரசால் ஏற்கப் பெற்றுள்ளது. தமிழின் - தமிழரின் பல்வகை வளர்ச்சிக்குத் 'தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம்' காரணமாயிற்று. தமிழகத்து விவசாயியை விட, பிஜியின் தமிழ் விவசாயியின் பொருளாதார நிலை மேம்பட்டது. 'சங்கம்' பள்ளிகளில் தமிழ்க் கல்விப்பணி பாராட்டுக்குரியது.

எங்கே?

300க்கும் மேற்பட்ட மிகச் சிறிய தீவுகளைக் கொண்டது பிஜி நாடு. ''பெரிய'' தீவைச் சுற்றி அனேகமாக அதன் விளிம்பின் ஓரமாக ஒரு சாலை உள்ளது. அதன் மொத்த நீளம் 250 மைல்களே. இவ்வளவே சுற்றளவு உள்ள தீவுதான் ''வித்திலேவு'' என்ற பெரிய தீவு.

பெருமை

சிறிய பிஜிக்கும் பெருமை உண்டு! உலகத்துக்கெல்லாம் முதல்-முதல் நாள் 'துவங்குவது' - எங்கள் நாட்டில்தான் 'International Date Line' - 180^0 'நெடுங்கோடு' எங்கள் நாட்டின் ஓரத்தில் உள்ளது; அதனால் கன்னி நில வளம் மிக்கது; மழை வளமும் மிக்கது. நீர் பாய்ச்சாமலேயே கரும்பு விளையும். ''காய்ந்த பகுதிகள்'' வித்திலேவு, வனுவாலேவுவில் உள்ளன. இங்கேதான் தமிழர்கள் நிறைந்துள்ளனர்.

எப்படி? எத்தனை?

இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டபோது 19ஆம் நூற்றாண்டில் அடிமைகளாக வேலை செய்ய பலரை ஏமாற்றி அயல் நாடுகளுக்கு அனுப்ப ஆங்கில ஆட்சி உதவியது அப்படி ஏமாந்தோ, அல்லது எப்படியும் எங்கும் போய், 'பிழைப்போம்' என்ற நிலையிலோ ஏழ்மைமிக்க சில தமிழர் பிஜிக்கும் சென்றனர், 19ஆம் நூற்றாண்டில் தாங்கள் எங்கே போகிறோம் என்று தெரியாத நிலையிலேயே படிப்பே இல்லாத பரம ஏழைகள் ''கண்காணாத் தீவுகளுக்குக்'' கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டனர்.

மக்கட் தொகை

பிஜியின் மொத்த மக்கட் தொகை 7,32,000. இதில் இந்தியர் வழி வந்தவர் தொகை 3,50,000 (3½ லட்சம்). இதில் 'வட இந்தியர்' வழி வந்தவரே பெரும்பாலோர். ''தமிழர்'' என்று தனிக் கணக்கெடுப்பு எடுக்கவேஇல்லை. 1986இல் எடுத்த மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் போது 'தென் இந்தியர்' எத்தனை பேர் எனவும் குறிக்க எடுத்த, 'தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம்' என்ற அமைப்பின் முயற்சி வெற்றிபெறவில்லை.

3½ லட்சம் 'இந்தியரில்' மூன்றில் ஒரு பங்கு 'தென் இந்தியராக' இருக்கலாம். இதில் தமிழர் 70-80 ஆயிரம் பேர் இருக்கலாம். தமிழ் பேசத் தெரிந்த 35 வயதுக்கு மேலான பெரியோர் 5 அல்லது 6 ஆயிரம் இருக்கலாம். இவர்களில் தமிழ் எழுதவும் தெரிந்தவர்கள் 2 ஆயிரத்திற்கும் குறைவாகவே இருக்கலாம். மொத்தத்தில் 'தமிழ் தெரியாத் தமிழர்களே' அதிகம். சென்ற 5-6 ஆண்டுகளாக ஓரளவு புதுவிழிப்புக் காணப்படுகிறது. 1986இல் 2000 பிள்ளைகள் 12 பள்ளிகளில் தமிழ் படிக்கிறவர்கள் எண்ணிக்கையில் சேர்க்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது. இதற்குத் தமிழக அரசும், அதன் மூலம் தமிழ்ப் பல்கலைக்கழகமும், மதுரை காமராசர் பல்கலைக் கழகமும், பல தமிழ் அன்பர்களும் காரணமாவர். பிஜி அரசும் தமிழை ஒரு தேர்வுப் பாடமாக ஆக்கி, உறுதியான ஆணைகளைப் பிறப்பித்துள்ளதையும் இங்குக் கூற வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படை 'தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம்' எனும் அமைப்புத்தான்.

தமிழ் - தெலுங்கு - மலையாளம் தெரியாத தென் இந்தியர் வழிவந்தவர்கள் தங்களைத் தென் - இந்தியர் (''மதராசி'') எனக் கூறிக் கொள்கின்றனர்.

தொடக்க காலத்தில் இந்தியே தெரியாத நிலையில் கப்பலில் இறங்கிய சமயத்தில், முன்பேயே பிஜி போய்ச் சேர்ந்துவிட்ட 'வட இந்தியர்') புதிதாக வந்த தமிழரை (தென் - இந்தியரை) ஓரளவு பரிகசித்த நிலை இப்போது இல்லை. தொடக்க காலத்தில் பரிகசிக்கப்பட்ட நிலையில் தென் இந்தியர்களில் சிலர்



தங்கள் மொழியில் பாடுவது, தங்கள் மொழியைப் படிப்பது, கற்றுத்தருவது, தங்களுக்குப் பழக்க - வழக்கமான பூசனைகளைப் பாதுகாத்து வளர்ப்பது என்ற ஆக்க முறையில் "தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம்" என்ற நிறுவனத்தை நிறுவி, பல கோயில்கள், பஜனைக் கூடங்கள், பள்ளிகள் இவற்றை உருவாக்கினர். இவர்களில் தவத்திரு சாது குப்புசாமி, திரு. எம். என். நாயுடு, திரு. டி.ஏ.ஜே. பிள்ளை ஆகியவர்கள் தலைசிறந்தவர்கள்.

தமிழர் குடியேறிய வரலாறு ஒரு சோகக் கதை... அவர்கள் "குடியேற" வில்லை. அவர்களை அந்நிய ஆட்சியாளர் அடிமைத் தொழிலாளராகக் குடியேற்றினர். அடிமைத் தொழில்-கரும்புத் தோட்டத்தில் 'ஒப்பந்த' வேலையில் - படாதபாடுபட்டு, கரும்பை விளைவித்து ஆஸ்திரேலியக் கம்பெனி கொழுத்து வளரும்படிச் செய்தனர். காடாக இருந்த பிஜி, "நாடு" ஆக உருவாகியது. அவர்களின் உழைப்பால் ஒப்பந்தக்காலம் 5 ஆண்டுகள் ஆன பின்பும், வேறு வழியின்றி அதே மண்ணில் மடிந்தவர் போக, பிறர் அங்கேயே - பிஜியிலேயே கம்பெனிக்காரர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து அந்தக் கம்பெனிக்கே பயிரிட்டு வளர்த்த கரும்பை, கம்பெனி கொடுத்த விலைக்குக் கொடுத்தனர். இந்த முறையில் கம்பெனி ஒரே கம்பெனி - இட்டது சட்டம்! . இந்த ஏற்பாட்டில் "கம்பெனிக்காரர் ஆலையில் - கரும்பைப் பிழிந்து சக்கையையும் எரித்தது போல பயிர்த் தொழிலாளிகளையும் பிழிந்து" விட்டனர். இந்த முறையற்ற ஏற்பாட்டிலும், அடிமையாயிருந்த நிலை போலவே ஏழை விவசாயி ஏழையாகவே இருந்தான். வருவாயில் நூற்றுக்கு 80 பங்கு ஆஸ்திரேலிய - வெள்ளையர் - கம்பெனிக்கு. மீதி 20 பங்கு 'சுதந்திர' விவசாயிக்கு. வேலையாள் வேலைக்காரனாகவே இருக்க வேண்டிய நிலை.

நிலைமாறியது

இந்த நிலை படிப்படியாய் மாற வழி ஏற்பட்டது. இந்திய சுதந்திர இயக்கம்; மகாத்மா காந்தி அவர்கள் ஏற்படுத்திய "அடிமைத் தொழில் ஏற்பாட்டை ஒழித்தல் இயக்கம்"; வணக்கத்துக்குரிய தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ் அவர்களின் பெருந்தொண்டு; பிஜியில் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ருத்திரானந்தர், தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத் தொண்டர்கள் பலர், திரு. ஏ. டி. பட்டேல் என்ற சிறந்த வழக்கறிஞர், பிற இந்தியத் தொண்டர்கள் ஆகிய பலர் பொறுப்பேற்று - நடத்திய 'சத்தியாக்கிரக' இயக்கம் எல்லாம் சேர்ந்து புதிய நிலையை

உண்டாக்கியது. கத்தியின்றி இரத்தமின்றி நடந்த இந்தப் போரில் இன்னல்கள் பல இருந்தன; அவற்றைச்சகித்துக்கொண்டு, விடாது முயன்று வெற்றி பெற்றனர் பெருந்தொண்டர்கள். அதன் பயன், வருவாயில் 100க்கு 80 விழுக்காடு விவசாயிக்கு, கம்பெனி பிஜிக்குச் சொந்தமானது. வருவாயில் 20 விழுக்காடு இந்த சுதந்திர பிஜியின் கம்பெனிக்கு. இந்தக் கம்பெனியின் அதிகாரிகள், இயக்குநர், பொறியாளர், எல்லாம் அந்த 'ஏழை' விவசாயிகளின் பிள்ளைகள், இந்த மோனப் புரட்சி ஒரு அதிசய நிகழ்ச்சி (Miracle) போலத்தான் இருக்கும். இதற்கு அடிகோலியவர்களில் தவத்திரு சுவாமி ருத்திரானந்தர். திரு. ஏ. டி. பட்டேல் ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு.

வருவாய்

வருவாய் அதிகரிக்க அதிகரிக்க, நீரிட்ட பயிர்போல் விவசாயிகள் தலை நிமிர்ந்து, பள்ளிகளும், கோயில்களும் ஏற்படுத்தித் தங்கள் பண்பாட்டைப் போற்றி வளர்க்கத் தலைப்பட்டனர்.

இந்த வளர்ச்சி பிஜியிலுள்ளோர் அனைவருக்குமே ஏற்பட்ட போதிலும், சங்கத்தின் மூலம் இந்த நாட்டுச் சேவை நடந்தேறிய பெருமையை நாம் அறிய வேண்டும். இதில் பிஜித் தமிழர் பெருமை கொள்ள இடம் உள்ளது.

கல்விநிலை

சங்கத்தின் பெயரில் 20 தொடக்கப் பள்ளிகளும் 8ஆம் வகுப்பு வரை 4 உயர்நிலைப் பள்ளிகளும் (+ 2 வரை இரண்டு, + 3 வரை இரண்டு) நடக்கின்றன. பிஜி நாட்டரசோ, கிறித்தவ மிஷன் இயக்கங்களோ (பிஜியில் கிறித்தவரே அதிகம்), ஆரிய சமாஜத்தாரோ, இஸ்லாம் இயக்கமோ, சீக்கிய இயக்கமோ, சனாதனதர்ம இயக்கமோ, தனித்தனியே இத்தனை (20+4) பள்ளிகளை நடத்தவில்லை.

எனினும் பொதுமக்கள் நடத்தும் பள்ளிகளின் எண்ணிக்கையில், சங்கம் நடத்தும் பள்ளிகளே அதிகம் எனலாம்.

தமிழ்

தென் இந்திய மொழிகளைக் கற்றுத்தரும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டே "சங்கம் பள்ளிகள்" தொடங்கப் பெற்றன. ஆசிரியர்களை நியமித்து சம்பளமும் கொடுத்தது சங்கமே. தாய்மொழிகளைக் கற்றுக் கொள்ளும் உணர்ச்சி

வேகமும் தொடக்க காலத்தில் மிகுதியாக இருந்தது. வரவர வேகம் குறைந்தது. ஆசிரியர்களை அரசாங்கம் தன் ஊழியர்களாக ஆக்கியது. அப்போதே தாய்மொழிக் கல்வி தாழ்ச்சியுற்றது. ஆங்கிலத்துக்கு முதலிடம். இந்தி இரண்டாம் இடத்தைப் 'பிடித்தது'. தமிழ், தெலுங்கு மூன்றாம் இடத்துக்கு ஒதுக்கப்பட்டு, அந்த நிலையிலும் சீர்கேடு ஆகி, 2-3 பள்ளிகளில் மட்டும் பேச்சளவிற்குக் கால அட்டவணையில் (Time Table) தமிழ் குறிக்கப்பட்டு இருந்தது. தமிழ் தேர்வுப் பாடமாக இல்லாமல், பெயரளவில் மட்டுமே இடம் பெற்றது.

தமிழ் வளராவிட்டாலும் தமிழர் படிப்பு, பிற பாடங்களில் வளர்ந்தது. ''சங்கம்'' மூலமாகவே முதன் முதல் விவேகானந்தா உயர்நிலைப்பள்ளி, 1949இல் உருவாகி வளர்ந்தது. அரசாங்கம் நிறுவி நடத்திவந்த, ஒரே ''இந்திய'' உயர்நிலைப் பள்ளி. அதில் துவக்கப் பள்ளிக்கு மேல் படிக்க உரிய தேர்வு பெற்றவர்கள் எல்லோருக்கும் ''இடம் இல்லை''. இந்த நிலையை மாற்ற விவேகானந்தா உயர்நிலைப் பள்ளியைத் தவத்திரு சுவாமி ருத்திரானந்தர் தலைமையில் 'சங்கம்' நிறுவியது அதில் படித்துப் பயனடைந்தோர் ஆயிரமாயிரம். 'இதில் தமிழர்'களும் உளர். அதற்கும் மேல், உயர் படிப்புப்படிக்க வழிவகைசெய்து இந்தியாவில் முக்கியமாகத் தமிழகத்தில்—கணிசமான பேர்களுக்கு இடம் பெற்றுத் தந்து உதவினார்கள் தவத்திரு சுவாமி ருத்திரானந்தர் அவர்கள்.

தமிழக அரசும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், பல கல்லூரிகளும் இடம் ஒதுக்கி உதவின. இதன் மூலம் பட்டக்கல்வி பெற்றும், டாக்டர்களாக ஆகியும் பிஜி திரும்பிய தமிழர் பலர் உண்டு.

தொழில் நிலை

பெரும்பாலோர் கரும்பு விவசாயிகள். ஒருசிலர் வாடகை வண்டி உரிமையாளரும், ஓட்டுனர்களும்; சிலர் பேருந்து கம்பெனி உரிமையாளர்; ஒரு சிலர் சிறு வியாபாரிகள்; இருவர் கட்டிட காண்ட்ராக்ட் கம்பெனியாளர்கள்; மூன்று நான்கு பேர்கள் ஹோட்டல் வைத்து உரிமையுடன் விரிந்த முறையில் வியாபாரம் செய்கிறார்கள்; பத்துப் பதினைந்து டாக்டர்கள், முன்னூறு நானூறு ஆசிரியர்கள், அலுவலர் பலர், இப்படிப் பல துறைகளில் 'தமிழர்' ஈடுபட்டுள்ளனர்.

வாழ்க்கைத் தரம் என்பதை வாழ்க்கை வசதி என்று இங்கு எடுத்தாள்கிறேன். பிஜியின் சராசரிப் பயிர்த் தொழிலாளிகள் இந்தியாவின் சராசரிப் பயிர்த் தொழிலாளிகளை விட அதிக வசதி பெற்றுள்ளனர். இந்த வசதிகள் உருவானது அவர்களுக்கு உரிய வருமானம் கிட்டிய பிறகுதான். பலரின் வீடுகள் மரப்பலகைச் சுவருடன் 'டின்' கூரை வேய்ந்தவை (Tin-Timber). சிலருக்குக் கான்கிரீட் வீடுகள் உள. 10-15 வீடுகட்கொரு வீட்டில் டிராக்டரும், காரும் உண்டு. ஒவ்வொரு வீட்டிலும், குறைந்தது இரண்டு வானொலிப் பெட்டிகள் உண்டு.

பிஜியில் தொலைக்காட்சி இன்னும் வரவில்லை; ஆனால் 'வீடியோ' பரவி, 10-15 தமிழ் விவசாயி வீட்டுக்கொரு வீட்டில் வீடியோ உண்டு; குளிர்சாதன வசதியும் உண்டு.

மிகுந்த வருமானம் உள்ள நடுத்தரத் தமிழருக்கு ஒவ்வொரு வீட்டிலும் ஓர் இரு கார்களும், வீடியோவும், குளிர்சாதன வசதியும் உண்டு.

குடிப் பழக்கம் வழக்கமாக உள்ளது. இதில் தப்பிய சிலர் நல்வாழ்வு வாழ்கின்றனர்.

பழக்க வழக்கங்கள்

பொதுவாக இந்தியப் பழக்க வழக்கங்கள் நிலவுகின்றன. ஆண்கள் காற்சட்டை அணிகின்றனர். அபூர்வமாகச் சில சடங்குகளில் ஈடுபடும் போது வேட்டி கட்டிக் கொள்கிறார்கள். பெண்கள் "கவுன்ட்ரெஸ்" அணிகிறார்கள். திருமணமானவர்கள் சேலை அணியும் பழக்கமிருந்து வருகிறது.

திருமணமாகாத பெண்கள்-சிலரைத் தவிர-குங்குமப் பொட்டு வைத்துக் கொள்வதில்லை.

'சாதி' என்ற 'பேய்' பிஜியில் தலைவிரித்து ஆடவில்லை, ஆனால் இந்தியாவில் சாதிப்பெயராக 'விளங்கும்' ரெட்டி, செட்டி, பிள்ளை, முதலியார், கவுண்டர் ஆகிய பெயர்கள் பிஜியில் பெரும்பாலோரின் பெயரோடு ஒட்டிக் கொண்டுள்ளன. பெண்கள் பெயரிலும் இந்த 'ஒட்டு' உண்டு.

ஒரு 'பிள்ளை', ஒரு 'கவுண்டரை' 'முதலியாரை' ஏன் 'ப்ரசாதை' மணப்பது வழக்கம். உறவினருக்குள்ளேயே மணந்து கொள்ளும் பழக்கம் குறைந்துள்ளது. இதுவும் வடஇந்தியரின் நிழல்.

வட இந்தியர் தென்னிந்தியர் என்ற பாகுபாடு இல்லாமல் திருமணங்கள் நடைபெறுகின்றன.

ஒரு சில குடும்பங்களில் பிஜியரையும் திருமணம்செய்துள்ளனர்.

இந்தியன் பிஜியன் என்ற "இன" வேறுபாட்டை வளர்த்து வந்ததால் இவ்விரு இன மக்களிடையே, சாதாரண மக்களிடை நட்புறவு இருந்தாலும், கலப்புத் திருமணம் வழக்கமாக ஆகவில்லை.

வீட்டு வாசலில் கோலம் போடுவது தினசரி வழக்கமாக இல்லை. விசேட நாட்களில் கோலம் இடுகின்றனர்.

பொதுவாக உடல்தூய்மை, உடைத்தூய்மை சிறப்பாக உள்ளது.

தெய்வ வழிபாடு—கோயில்கள்

பிஜித் தமிழரிடை தெய்வ நம்பிக்கை பரவியுள்ளது. பூசை அறை என ஒன்று தனியாக இராவிட்டால், வீட்டில் ஓர் இடம் பூசைக்குரிய இடமாக உண்டு. தெய்வ உருவப்படங்கள் பல ஒவ்வொரு வீட்டினுள்ளும் உண்டு. 'பூசை' எனத் தனியே நாள் தோறும் முறையாக நடக்காவிட்டாலும் வீட்டில் பூசை, சாமி "மூலை" ஒன்றிருக்கும். "காமாட்சி விளக்கு" ஒன்றும் இருக்கும். குத்துவிளக்குகள் வரவேற்பறையில் அழகுப் பொருளாக விளங்கும். விசேட காலங்களில் அவை ஏற்றப்படும்.

குடம் முதலிய பல இந்தியப் பாத்திரங்கள் வீடுகளில் காணப் படுகின்றன.

இட்லி, தோசை அவ்வப்போது கிடைக்கும். புட்டு, இடியாப்பம், ஆப்பம், அதிரசம், முறுக்கு ஆகிய தமிழ்ப் பண்டங் களும் இல்லாமலில்லை. மற்றபடி சோறும், ரொட்டியும், பருப்பும், குழம்பும், ரசமும், ஊறுகாய்களும், புளி—இஞ்சியும் கிட்டும்.

கோயில்கள்

தமிழர் வாழும் கிராமம் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு கோயில்—சிறிய கோயில்— இருக்கும். விநாயகர், காளி, மாரி, துரோபதை, சிவன், முருகன், பெருமாள் ஆகிய தெய்வங்களில் ஒன்றோ, பல சேர்ந்தோ—உள்ள கோயில்கள் பல. இம்மாதிரிக் கோயில்களில் பெரும்பாலானவற்றைத்தென்னிந்தியர்தான் நடத்து கின்றனர். துளசித் தீர்த்தமும், திருநீறும் எல்லாக் கோயில்களிலும்

தரப்படுகின்றன. "கோவிந்தா! கோவிந்தா!!" என்ற கூட்டொலி காளி, மாரி கோயில்களிலும் கேட்கும்.

வட இந்தியர்கள், 'இராமாயண மண்டலிகள்' என்று பெரும் பாலும் பஜனைக் கூடங்கள் போன்றவற்றை நடத்துகின்றனர். நந்தியிலிருக்கும் சிவசுப்பிரமணிய கோயில் மிகப் பழைய கோயிலாகும். 'சங்கம்' உருவாவதற்கு முன்பே இது நிலை பெற்றது.

லம்பாசாவில் உள்ள வெங்கடேசப் பெருமாள் கோயில் பிஜியில் உள்ளவற்றில் உருவிலும் திருவிலும் பெரியது.

நந்தியிலிருக்கும் கோயில் 1½ ஏக்கர் நிலத்தில் ஒரு சிறு வீட்டளவில் (50'×20') உள்ளது. புதிதாகக் கட்ட 3 ஏக்கர் நிலத்தைப் பிஜி அரசாங்கம் கொடுத்துள்ளது.

லம்பாசாக் கோயில், சுமார் 200'×120' அளவில் புதிதாக உருவாகியுள்ளது.

தலைநகராகிய சூவாவில் புகழ்பெற்ற 'பெரிய மகாசக்தி' கோயில் ஒன்று உள்ளது.

நந்திக் கோயிலில் மாதக் கிருத்திகை, சிவராத்திரி, வைகாசி விசாகம், விநாயக சதுர்த்தி, கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், தைப் பொங்கல், பங்குனி உத்திரம் ஆகிய விழாக்கள் நடந்தாலும் மற்றக் கோயில்களில் ஆண்டுக்கொரு முறை 3 நாள், 5 நாள், அல்லது 10 நாள் திருவிழாக்கள் ஒவ்வொரு கோவிலிலும் வசதிக்கேற்ப நடக்கும். திருவிழாக் காலங்களில் 'மகேசுவர பூசை' ஒழுங்காக நடக்கும். கோயிலுக்கு வருபவர்க்கெல்லாம் பிரசாத—உணவு வழங்குவது வழக்கம், இதில் பிஜியரும் கலந்து கொள்வர். காவடி எடுத்தல், தீக்குழியில் இறங்குதல், கரகம் எடுத்தல் ஆகிய அனைத்தும் உண்டு.

திருவிழாக் காலங்களிலும் சில திருமணக் காலத்திலும் தெருக் கூத்தும் நடக்கும். இக் 'கூத்துக்களில்' மிகப் பயன்படுவது இந்தியே.

பண்டிகைகள்

தீபாவளி, கிறித்துமஸ் இவ்விரு திருநாட்களும் பிஜி முழுவதும் கலந்து கொள்ளும் பண்டிகை.

திருமணங்கள் 'நாதசுர' ஒலியுடன் தமிழகத்தில் நடப்பது போல நடக்கின்றன.

அரசியல்—வணிகம்

அரசியலில் 'சங்கம்' நேரடியாக ஈடுபடுவதில்லை. வணிகத்தில் தமிழர் மிகப்பின் தங்கி விட்டனர். ஒருசிலரே சிறுசிறு கடைகள் வைத்திருக்கிறார்கள்.

மகளிர் நிலை

தமிழகம் போலத்தான். வீட்டிலும், 'காட்டிலும்' (நிலத்திலும்) அலுவலகங்களிலும் பெண்களும் தாய்மார்களும் வேலை செய்கின்றனர். படிப்பிலும் முன்னேறுகிறார்கள்.

சங்கத்தில் ''மாதர் சங்கம்'' என்ற பிரிவு உண்டு. பொதுவாக இது நன்கு நடைபெறுகிறது.

விளையாட்டுக்கள்

பெரும்பாலும் பள்ளிகளிலும். நகர்ப்புறங்களிலும், இடம் இருந்தால் கிராமங்களிலும், இளைஞர்கள் கால்பந்து விளையாடுகிறார்கள்; பெண்கள் கூடைப் பந்தாட்டம் விளையாடுகிறார்கள்.

தாய்நாடு—நினைவு—தொடர்பு—விருப்பம்

தமிழகத் தொடர்பு பிஜி வாழ் 'தமிழருக்கு' மிகமிக வேண்டியிருக்கிறது. தமிழ்ப் புத்தகங்கள் தமிழகத்திலிருந்துதான் வர வேண்டும். தமிழக அரசு அதற்கு ஓரளவு உதவியுள்ளது. மேலும் மேலும் தமிழக அரசிடம் உதவி வேண்டியுள்ளது. பிஜித்தமிழர் ஓரளவாவது தலை நிமிர்ந்திருக்க தமிழகம் (அரசும்—பெரியோர்களும்)—செய்யக்கூடிய, செய்ய வேண்டிய உதவித் துறைகள்:

1. புத்தகங்கள் பிஜிக்கென அச்சிட்டு அனுப்புதல்

2. இங்குள்ள புத்தகங்கள் — பாடப் புத்தகங்கள் சிலவும் வேறு பலவும் அனுப்புதல்

3. தமிழ்ப் பண்பாடு, கலைகள் இவற்றை விளக்கும் படங்கள், வீடியோ காசட்டுகள், பாடல் காசட்டுகள் முதலியன அனுப்புதல்

4. பிஜித்தமிழர்கட்கு — தமிழ் தெரிந்தவர்கட்கு அதிகச் சலுகையுடன்—பல கல்லூரிகளில் தமிழ்நாட்டில் இடம் ஒதுக்கல்

புதுச் சூழ்நிலையில் பெரும்பாலான விவசாயிகள் ஏழைகள்—பிஜியிலேயே இருக்க வேண்டிய நிலையிலுள்ளனர்; அவர்கட்கு மேற்குறித்த வழிகளில் தமிழக அரசும், தமிழ்நாட்டில் பணமும் மனமும் உள்ளவர்கள், சங்கம் மூலமாக நேரடியாக உதவ வேண்டும்.

பிஜித்தமிழர் பெரும்பாலோர் ஏழைகள் என்பதைத் தமிழகம் உணர வேண்டும். இந்திய (நடுவண்) அரசாங்கத்தின் மூலம் உதவி கிடைக்க, நெடுநாள் பிடிக்கும். ஆதலின், தமிழகமே, உதவுக! மொத்தம் 20—30 லட்ச ரூபாய்க்கு மேலாகாது! இந்த உதவியை 5—10 ஆண்டுகளில் செய்யலாம். பிஜியில் தமிழ் மணம் நிலைக்க, தமிழகமே உதவ வேண்டும்; நேரடியாக உதவ வேண்டும்.

இணைப்புகள்

1. பிஜிப்படம் — சில குறிப்பிட்ட இடங்கள்.

○ — தமிழர் அதிகமாயிருக்கும் இடங்கள்.

△ — சங்கம் பள்ளிகள் இருக்கும் இடங்கள்.

□ — சங்கம் கோயில்கள் இருக்கும் இடங்கள்.

2. பிஜி பற்றிய விவரங்கள் மேலும் சில; 322 தீவுகளின் நிலம்-நீர் பரப்பு:- 18,333 ச. கி. மீ. 1879 முதல் 1916 வரை 87 கப்பல்களில் பிஜிக்குக் கொண்டு செல்லப்பட்ட 65,000 இந்தியர்களில் 16, 615 பேர் தென்—இந்தியர். பிஜிக்குக் சென்ற 87 கப்பல்களில் 'சிரியா' என்ற முதல் கப்பல் பிஜியின் அருகே— அதன் தலைநகர் சூவாவின் அருகே— கடற்பாறையில் மோதி உடைந்தது. அதில் சென்றவர்களில் பலர் மாண்டனர். கல்கத்தாவிலிருந்து அதிகக் கப்பல்கள் சென்றன; சென்னைத் துறைமுகத்திலிருந்து சென்ற கப்பல்களின் எண்ணிக்கை குறைவு.

பிஜி சென்றவர்களில் வட இந்தியர் — பீகார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய இடங்களிலிருந்து சென்றோர் எண்ணிக்கை அதிகம். வடஇந்தியர் முதலில் சென்றனர்; அடுத்து தென் இந்தியர் சென்றனர் (பிஜி சென்ற தனித்தனிக் கப்பல்களின் விவரங்கள் மேலும் உள்ளன).

(முதலில் பிஜி போனவர்களில் பெண்கள் தொகை மிகக் குறைவாக இருந்தது—100 ஆண்கட்கு 3 பெண்கள் விகிதத்திலிருந்தது. பின்பு 100 ஆண்கட்கு 20 பெண்கள் என்ற விகிதத்துக்கு உயர்ந்தது. இப்போது ஆண்களை விட, பெண்களே அதிகம்.) 1917 முதல் சில இந்தியர் — சிறப்பாக, குஜராத்திய வியாபாரிகள் — தங்கள் விருப்பப்படி சென்றார்கள்.

பிஜியில் தமிழ் கற்பிக்கப்படும் பள்ளிகள்

1. நாந்தி/நந்தி சங்கம் பள்ளி
2. திரகேத்தி சங்கம் பள்ளி
3. லூரவு சங்கம் பள்ளி
4. ரவிரவி சங்கம் பள்ளி
5. ம்பா சங்கம் பள்ளி
6. உனிச மூலோவா சங்கம் பள்ளி
7. வத்தியாக்கா சங்கம் பள்ளி
8. டாங்கி டாங்கி சங்கம் பள்ளி
9. பீனாங் சங்கம் பள்ளி
10. நண்ட் ரோங்கா சங்கம் பள்ளி
11. ஊதி வாய் சங்கம் பள்ளி
12. லம்பாசா சங்கம் பள்ளி
13. ....சங்கம் பள்ளி

சங்கத்தின் கீழ் இல்லாத பள்ளிகள்

(ஆனால் அங்கும் தமிழ் கற்பிக்கப்படுகிறது)— தமிழர்கள் அங்கே அதிகம் உள்ளதால்.

14. ஏ. டி. பட்டேல் மெமோரியல் பள்ளி, மலோலா பள்ளி
15. மூலோ மூலோ இந்தியன் பள்ளி
16. ஊனிமோனோ இந்தியன் பள்ளி

பிஜி மாணவர் கல்லூரிக் கல்வி பெற இடம் கொடுத்து உதவிய தமிழகக் கல்வி நிறுவனங்கள்

1. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
2. ஸ்டெல்லா மேரீஸ்— சென்னை
3. புதுக்கல்லூரி—சென்னை
4. எஸ். அய். இ. டி. கல்லூரி—சென்னை
5. ராணி மேரிக் கல்லூரி—சென்னை
6. பூ. சா. கோ. (P S. G) கலைக் கல்லூரி—கோவை
7. பூ. சா. கோ. கிருஷ்ணம்மாள் கல்லூரி—கோவை
8. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி—கோவை
9. தியாகராசர் கல்லூரி—மதுரை
10. வ. உ. சி. கல்லூரி—தூத்துக்குடி
11. அழகப்பா கல்லூரி—காரைக்குடி
12. சென்னைக் கிறித்தவக் கல்லூரி
13. சென்னை மாநிலக் கல்லூரி
14. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி (தமிழக அரசின் மூலம்)
15. கீழ்ப்பாக்கம மருத்துவக் கல்லூரி (தமிழக அரசின் மூலம்)
16. சென்னை மருத்துவக் கல்லூரி (தமிழக அரசின் மூலம்)

4. இலங்கை

இளையதம்பி பாலசுந்தரம்

கி.மு. 500 முதலே இலங்கையில் தமிழர் வாழ்கின்றனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தமிழரின் பாரம்பரியத் தாயகம் எனலாம், 1981-இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழர் 26.9 லட்சம் பூர்வீகக் குடிகளாகவும், சோழப் பேரரசுக் காலத்தில் வினைமேற் சென்று குடியேறியவராகவும் அமைந்தனர்; ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான கூலியாட்களாகவும் இந்தியத்தமிழர் வரவழைக்கப்பட்டனர். 16-ஆம் நூற்றாண்டுவரை திண்ணைப்பள்ளிக் கூடக் கல்வி அமைந்து கிறித்தவ சமயத் தொண்டரால் கல்வி நிறுவனங் கள் தோன்றி, தரம் உயர்ந்தது. திராவிட மக்களின் தொன்மை வாய்ந்த வழிபாட்டு முறைகள் இன்றும் இங்கே காணப்படுகின்றன. திருமணத்திற்குப் பின், கணவன் மனைவியின் வீட்டில் வாழும் பொது வழக்கம் இந்திய நிலைக்கு முரண்பட்டதாகும்.

பாரெல்லாம் பரந்துவாழும் தமிழ் மக்களை இனங்கண்டு, அவர்கள் வாழும் இடங்களின் வரலாறுகளையும், வாழ்வியல் முறைகளையும் தொகுத்துத் தனிநூலாக வெளிவரும் இத் தொகுப்பு நூலில் ஈழத்துத் தமிழ் மக்களைப் பற்றி எழுதவாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மக்கள் தொகை

இலங்கையில் 1981இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ் மக்களின் தொகை 2,696,768 ஆகும். இவர்கள் இலங்கையின் மொத்த மக்கள் சனத்தொகையில் 18.2 வீதத்தினராவர், இலங்கை மக்கள் சனத்தொகையில் சுமார் 25% வீதமானோர் தமிழ்மொழி பேசுகின்றனர். இதனைப் பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

இனம்	மொத்த எண்ணிக்கை	வீதம்
சிங்களவர்	10,985,665	73.98 %
இலங்கைத்தமிழர்	1,871,535	12.60 %
இந்தியத் தமிழர்	825,233	5.56 %
சோனகர் - மலாயர்	1,100, 350	7.41 %
பறங்கியர்	38,286	0.26 %
ஏனையோர்	28,981	0.20 %

மூலம் : Statistical Abstract Census - 1981

மேலே காட்டப்பட்ட அட்டவணையிலுள்ள தமிழர்களும் சோனகர்களும் தமிழ்மொழி பேசுவோராகக் காணப்படுகின்றனர். சோனகரில் (முஸ்லீம்கள்) சிங்களப் பிரதேசங்களில் வாழும் முஸ்லீம்கள் தமிழ்மொழியுடன் சிங்களம் பேசுவோராகவும் வாழ்கின்றனர்.

குடியேற்ற வரலாறு

ஈழத்தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர்தம் பாரம்பரியத் தாயகம் எனக்கருதப் படுகின்றன. இப்பிரதேசத்திலுள்ள இடப்பெயர்கள், மக்களின் சமய ஒழுகலாறுகள், சமுதாய மரபுகள், நம்பிக்கைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் முதலியவற்றை நோக்கும்போது இப் பிரதேசத்திற்கும் தமிழ் மக்களுக்குமுள்ள பூர்வீக வரலாற்றுத் தொடர்புடைய அம்சங்கள் வெளிப்படையாகின்றன. இவ்வகை யில் கிழக்கிலங்கை வாழ் மக்களின் மூதாதையர் மலையாளர், வங்கர், கலிங்கர், சிங்கர் முதலிய இந்தியக் குடிகளின் வழிவந்தோர் என்பது பெறப்படுகின்றது. மலையாளத்தில் வாழ்ந்த குகர் என்போர் இங்கு வந்தார்கள் என்பதற்கு மட்டக்களப்பில் வழங்குகின்ற தென்சேரி வடசேரி மக்கட் பிரிவுகள், மருமக்கள் தாயமுறை, கன்னக்குடுமி வைக்கும் முறை, "போடி" என்ற ஆட்பெயர்ப் பிரயோகம், குரவையிடும் வழக்கம், தாய்வழிப் பாரம் பரியம், மந்திரத்தில் கூடிய ஈடுபாடு, சமூகத்திற் பெண்களுக்குக் கொடுக்கப்படும் முதன்மை, திருமணச் சடங்கு முறைகள் மற்றும் இன்னோரன்னவையும் சான்றுபகர்கின்றன. அத்துடன் கிழக்கிலங் கையில் மிகவும் பிரபல்யம் பெற்றுக் காணப்படும் கண்ணன் வழி பாட்டுமுறைகளின் நிலைப்பாடும் இப்பிரதேசத்திற்கும் மலையாள

நாட்டிற்குமிடையேயுள்ள தொடர்பைக் கோடிட்டுக் காட்டுகின்றன.[1]

இலங்கையில் தமிழ்மக்கள்—வரலாறு

ஆதிகாலம் தொட்டே இத்தீவின்கண் வாழ்ந்துவரும் மக்களின் ஒரு பிரிவினராகத் தமிழர்கள் காணப்படுகின்றனர். இதனைவிட 'இந்தியத் தமிழர்கள்' என்ற ஒரு தொடரும் இத்தீவின் சமூகக் கட்டமைவு தொடர்பாக ஆய்வு செய்வோரால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது, மறைமுகமாக இந்தியத் தமிழர்களிடமிருந்து இலங்கைத் தமிழர்கள் வேறுபட்டவர்கள் என்ற பொருள் கொள்வதனை உணர முடிகிறது. இலங்கைத் தமிழர்—இந்தியத் தமிழர் என்ற வேறுபாடு பின்வரும் அடிப்படையில் செய்யப்பட்டது. அதாவது, இலங்கைத் தமிழர் என்போரின் மூதாதையர்கள் இலங்கையில் வசித்திருந்தாராயின் அவர்கள் இலங்கைத் தமிழர்கள் எனவும், அவ்வாறில்லாதோர் இந்தியத்தமிழர் எனவும் வகைப்படுத்தப்பட்டனர். இத்தகைய வகைப்பாடு பல காலமாகக் கொள்ளப்பட்டு இன்று அங்கீகாரம் பெற்றுள்ளது. இதனாலேயே இலங்கைத் தமிழர்கள் எனச் சிறப்பாகப் பாகுபடுத்தப்படும் மக்களது கலாசாரத் தனித்துவத்தினைத் தமிழகத்திலிருந்து பிரித்து வேறுபடுத்திப்பார்க்கும் மரபு ஒன்று இப்பொழுது இங்கு நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.[2]

இலங்கையிலே இந்தியத் தமிழர் எனச் சுட்டப்படும் மக்களுடைய வரலாறு, ஆங்கிலேயர்களுடைய ஆட்சியின் கீழ் தமிழகத்திலிருந்து கொண்டு வரப்பட்டு, இத்தீவிலுள்ள மத்திய மலைநாட்டிலே குடியேறத் தொடங்கிய காலகட்டத்திலிருந்து ஆரம்பமானது. இவர்களுடைய வாழ்க்கைமுறை, சமயச் சடங்கு—சம்பிரதாய முறைகள், அவர்கள் தங்கியிருந்த பொருளாதார அடித்தளம் என்பன இலங்கைத் தமிழர்களுடைய முறைகளிலிருந்து

---

1 இது பற்றிய மேலதிக விவரங்களைப் பின்வரும் நூல்களில் காண்க.

i. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு., யாழ்ப்பாணக்குடியேற்றம், சுன்னாகம், புலவரக வெளியீடு, 1982,

ii, Rajanayagam, D., Ancient Jaffna, Madras, Every Mans, 1926.

2 வரலாறு தொடர்பான விடயங்களை எழுதுவதற்குத் துணை புரிந்த யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் எஸ். கிருஷ்ணராசா அவர்களுக்கு நன்றி.

பெரிதும் வேறுபட்டுள்ளன. இங்கு இலங்கைத் தமிழ் மக்களது வரலாறு என்று குறிப்பிட்டுச் செல்வது பரம்பரை பரம்பரையாக மிகப்பழங் காலம் முதலாக இந்த மண்ணுடன் அவர்கள் கொண்டிருந்திருக்கும் தொடர்புகளையே எடுத்துக்காட்டுவதாக அமையும்.

அவ்வகையில் இலங்கைத் தமிழர்களை "குடியேற்றக்காரர்" என்று கொள்வதோ, தமிழகத்திலிருந்து தாமாகவே புலம்பெயர்ந்து வந்து இங்குக் குடியேற்றமுண்டாக்கி வாழ ஆரம்பித்தவர் என்று கொள்வதோ அறிவியல் ரீதியான ஆய்வுமுறைக்கு முற்றிலும் பொருந்தாத ஓரம்சமாகும். தென்னிந்தியாவின் தென்முனையுள்ளிட்ட மன்னார்க்குடாப் பிராந்தியமானது, சிந்து சமவெளி நாகரிக காலத்திலே முத்துக் குளித்தற்றொடர்பான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்திருந்தது என்பதனையும், இலங்கையைப் பொறுத்தவரையில் அதன் நாகரிகக் கட்டுமானமானது மன்னார்க்குடாப் பிராந்தியத்திலிருந்து வடகிழக்கு—தென்மேற்கு நோக்கியதாகவும், தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் சிறப்பாகப் பாண்டிய நாடு உள்ளிட்ட பகுதியின் நாகரிகக் கட்டுமானம் தெற்கிலிருந்து அதாவது மன்னார்குடாப் பிராந்தியத்திலிருந்து வடக்கு நோக்கியதாக அமைந்திருந்தது என்பதனையும் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல்—சாசனவியல்—மானிடவியல் ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட உண்மைகளிலிருந்து அறிய முடிகின்றது. அவ்வகையில் தென்னாசியாவின் தென்கோடியிலே அமைந்துள்ள தமிழர் தாயகம் தொடர்பான நோக்கிலே தமிழகமும், இலங்கையின் வடக்கு கிழக்குப் பாகங்களும் சமகால வரலாற்றின் பரிணாமக்கட்டங்களைக் கொண்டிருந்தன என்று கொள்வதே மிகப்பொருத்தமானதாகும். அதேவேளையில் தமிழகத்துடனும், அதற்கப்பாலும் உள்ள பிரதேசங்களுடனும் குறிப்பாகக் கிருஷ்ணா நதிப்பள்ளத்தாக்கு வலையான பகுதிகளுடனும்—இலங்கைத் தமிழர் தொடர்பு கொண்டு, தமது வாணிப விருத்தி இலக்கிய—பண்பாட்டு மேன்மை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன.[3] ஒரே இன—மொழி—மதவமைவுடைய சமூகமொன்று இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளிலே வாழும்போது பெரும்பான்மையாக வாழும் நிலப்பரப்பிலிருந்து குறைவாக அவ்வினம் வாழும் நிலப்

3 வேலுப்பிள்ளை, ஆ., "தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணிகளும்," தொடக்கப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 19.09 1986.



வல்லிபுர ஆழ்வார் கோயிற் கோபுரம்
படம் : செல்வி சுபதினி செல்வராசு
யாழ் பல்கலைக் கழகம்



திருஞானசம்பந்தர் சுவாமிகள்

இந்த வெண்கலச் சிற்பமானது பொலனறுவை இராசதானியிலே உள்ள ஐந்தாம் சிவதேவாலயத்தினுள் இருந்து அகழ்வாய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டதாகும். சோழரீ பாணியில் அமைந்த இந்த உருவமானது 48. 6 c.m உயரமுடையது. தமிழ்நாட்டிலே இதனையொத்த வெண்கலச் சிற்பம் எதுவும் இன்னும் கண்டு பிடிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படம் : கிருஷ்ணராசா, யாழ்பல்கலைக் கழகம்

திருக்கேதீஸ்வரம்

விஜயனது வருகைக்கு முன்பிருந்தே இலங்கையில் மிகப் பிரயல்யம்பெற்றிருந்ததாகக் கருதப்படும் பஞ்சஈஸ்வரங்களுள் திருக்கேதீஸ்வரமும் ஒன்றாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டினைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியிலே பாடல்பெற்ற இத்தலமானது சோழர் காலத்திலே இராஜராஜேஸ்வரம் என அழைக்கப்பட்டது, இக்கோயில் அமைந்துள்ள மாதோட்ட நன்னகரானது ஒரு தொல்லியற் களஞ்சியமாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

படம் : இ பாலசுந்தரம்



நல்லூர் முருகன் ஆலயம்



ஆனைக் கோட்டையிற் கிடைந்த தொல்லியற் சான்று
பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட முத்திரை

படங்கள் : இ பாலசுந்தரம்

பரப்பு நோக்கி நடைபெற்ற பண்பாட்டலைகளின் பரிமாற்ற மானது, புரவலன்—இரவலன் என்ற உறவுமுறையின் அடிப் படையிலே அமைந்திருந்த அதேநேரத்தில், இரவலனுக்குரிய தனித் துவமான அம்சங்களும் அமையப் பெற்றதனை இலங்கைத் தமிழரி வரலாற்றினை முன்னெடுத்துச் செல்லும் தமிழியல் ஆய்வாளர்கள் எவரும் நன்குணர்ந்துகொள்ளுவர். அவ்வகையிலே இலங்கைத் தமிழர் வரலாற்றினை இத்தீவின் அமைவிடமும் அதன் புவியியல் சார் அரசியலும் பெருமளவுக்குப் பாதித்து வந்துள்ளமையும், அவ் வடிப்படையிலே தமிழக மக்களிடம் காணப்படாத பல தனித்துவ மான பண்பாட்டம்சங்களைத் தம்மிடத்தே கொண்டோராக, இவர்கள் இன்னும் தமிழக மக்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்க விரும்புவோராக இன்றுவரை வாழ்ந்து வருவது பற்றியும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இதுவரை, இலங்கைத் தமிழர்களுடைய வரலாற்றினை எழுத முற்பட்டோர் பெருமளவுக்கு ஐதீகங்களையும் (Myths) மரபு களையும் (Tradtions) அடிப்படையாகக் கொண்டே இத்தீவில் வாழும் தமிழ் மக்களது தோற்றம் தொடர்பான விளக்கத்தினைக் கொடுத்துள்ளனர். இலங்கையிலே தொல்லியல் ஆய்வுகள் சற்று முன்னேற்றகரமான நிலையை அடைந்துள்ள போதிலும், இலங்கைத் தமிழர் தொடர்பான ஆய்வுமுயற்சிகளில் பல பின்னடைவுகள் காணப்படுவது வருந்தத்தக்கது. இருந்தும், அவ் வாறான ஆய்வு முயற்சிகளில் இருந்து இலங்கைத் தமிழர் தொடர் பான தோற்றவரலாறு பற்றி எடுத்துக்காட்ட சில வரலாற்றா சிரியர்கள் முயற்சி மேற்கொண்டனர். அவ்வகையிலே, தென் னிந்திய—இலங்கைப் பிராந்தியத்தின் அடிப்படையான பண் பாட்டுக் கட்டுமானம் ஒரே அடித்தளத்திலிருந்தே அதாவது பெருங்கற்காலப் பண்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தே ஊற்றுப் பெற்று வளர்ச்சியடைந்து, காலத்தின் தேசவர்த்தமானங்களின் போக்கில் ஏற்பட்ட கோலத்தினால் தனித்துவமான அம்சங்களை யுடையதாகப் பரிணாமமடைவதாயிற்று. தென்னிந்திய நிலப் பரப்பிலே கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் முதலிய மொழிகளைப் பேசும் மக்கள் எவ்வாறு பெருங்கற்காலப் பண் பாட்டு அடித்தளத்திலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்தனரோ அதனையொத்தே இலங்கைத் தமிழரும், சிங்களமொழி பேசுகின்ற 'திராவிட இனத்தினரும்'(சிங்களரும்) இலங்கைத் தீவிலே பரிணாம வளர்ச்சியடைந்தனர். "......யாழ்ப்பாணத்தின் மக்கட் குடியிருப் பானது தென்னிந்தியத் திராவிடப் பண்பாடாகிய பெருங்கற்காலப்

பண்பாட்டுடன் கி.மு. 500 அளவில் ஆரம்பமாகியது. யாழ்ப் பாணத்துத் தமிழ்வழக்கும் இதிலிருந்தே ஆரம்பமாகின்றதெனலாம். கிறிஸ்தாப்த ஆரம்பத்தில் தென்னிலங்கையிலுள்ள அனுராதபுரத் திற்கும் மகாகமைக்கும் சமதையாகச் சமகாலத்தில் கந்தரோடை ஒரு நகரமாக இங்கு வளர்ச்சியடைந்துவிட்டது. கந்தரோடையை மையமாகக் கொண்ட குடியிருப்பு மையமொன்றும் யாழ்ப்பாணத் தில் ஏற்பட்டது. இக்காலத்திலும் இதனையடுத்த நூற்றாண்டு களிலும் யாழ்ப்பாணம் பௌத்தத்தின் செல்வாக்கிற்குட்பட்டது. இலங்கையின் பௌத்தமயமாக்கமே யாழ்ப்பாணத்திற்கூடாக நடைபெற்றதாகப் பாலி இலக்கியங்கள் கூறுவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்துக்குப் பிரத்தியேகமான பௌத்த சின்னங்களும் இங்கு எழுந்தன. இவை தென்னிலங்கையில் எழுந்தவற்றில் இருந்து வேறுபட்டவையாகும். கி.பி. 10ஆம் நூற்றாண்டையொட்டித் தோன்றிய சோழர் ஆதிக்கத்தின் பின்னர், கதிரமலை என்ற கந்தரோடை அழிந்துபோக, நல்லூரைத்தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசும் பிராமணீய சமய மறுமலர்ச்சியும் இங்கு ஏற்படலாயின.[4]

தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் அண்மைக்காலங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் தொல்லியல் அகழ்வாய்வுகளின் மூலம் இலங்கைத் தமிழர்கள் தனித்துவமானவர்கள், அவர்கள் இலங்கை யிலேயே தோன்றி வளர்ச்சியடைந்த மக்கட் கூட்டத்தினரின் ஒரு பிரிவினர், தமிழகத்திலே தோற்றம் பெற்ற மக்களது தோற்ற காலத்துடன் சமத்துவம் பெற்றவர்கள் என்பன போன்ற இன்னோரன்ன விடயங்கள் ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலே ஆனைக்கோட்டை என்றழைக்கப் படும் புராதனத் தொல்லியல் தலத்திலே (site) 1980-களிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறையினர் மேற் கொண்ட அறிவியல் ரீதியான அகழ்வாய்வுகளின்பெறு பேறாகத் தமிழகத்திலேயோ அல்லது தென்னிந்தியாவிலேயோ அல்லது இலங்கையின் ஏனைய இடங்களிலேயோ பெருங்கற்காலம் தொடர்பான தொல்லியற் சின்னங்களுள் கிடைத்திருக்காத ஓர் அரிய, இலங்கைத் தமிழர்களது தனித்துவத்தினை வெளிப்படுத்தக் கூடியதான, செம்பினாலான முத்திரை ஒன்று கிடைக்கப்பெற்றது. தென்னாசிய தொல்லியல் வரலாற்றாசிரியர்களின் கவனத்தினைத்

4. இரகுபதி,பொ. பெருங்கற்கால யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, மகாஜனாக்கல்லூரி வெளியீடு, 1982.

தன்பால் ஈர்த்துள்ள இம்முத்திரையானது இரட்டை எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு மொழியிலமைந்த வாசகமாகவுள்ளது எனப் பேராசிரியர் கா. இந்திரபாலா எடுத்துக்காட்டியுள்ளார்.[5] அவ்வகையிலே ஆதிப் பிராமி வரிவடிவிலமைந்திருந்த அவ்வாசகத்தினைக் 'கோவேத' அல்லது'கோவேந்த' என அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வகையிலே, இதுவரையில், இதுபோன்ற சான்றுகள், பெருங்கற்கால மக்கள் தொடர்பாகத் தென்னாசியாவின்பிராந்தியமெங்கும் கிடைத்திராத தன்மையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, இக்குட்டித்தீவின் வடபகுதியிலே, குறிப்பாக யாழ்ப்பாணத்திலே, தமிழ் மக்கள் மிக அநாதியான காலம்தொட்டு வாழ்ந்து வருகின்றார்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனைக்கோட்டையிலே கிடைத்த இப்பிராமி எழுத்துப்பொறிக்கப்பட்ட முத்திரையின் காலவரையறையையிட்டு ஆய்வாளரிடையே சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும், அவ்வெழுத்தின் தன்மையைக்கொண்டு பார்க்கும்போது கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்குமிடைப்பட்ட காலத்துக்குரியதாகக் கொள்ளமுடியும் என்பதில் ஐயமில்லை.[6]

குடியேறிய நோக்கம்

இலங்கையில் தமிழர் குடியேற்றம் எப்போது ஏற்பட்டது, அவர்கள் குடியேறிய நோக்கம் யாவை என்பனபோன்ற வினாக்களுக்கு விடைகாணல் எளிதன்று. சங்க இலக்கியம் குறிப்பிடும் ''ஈழத்துணவும் காழகத்தாக்கமும்'' என்ற தொடர் வர்த்தக உறவைக் காட்டுகின்றது. அதேவேளையில் அழிந்த லெமூரியாக் கண்டத்தின் ஒரு பகுதியே இலங்கை என்பதும், இதன் பூர்வீகக் குடிகளின் வாரிசுகளே ஈழத்தமிழர் என்ற கருத்துடையோரும் உளர். இருப்பினும் தென்னிந்தியாவிற்கும் ஈழத்திற்குமிடையேயுள்ள கலாசார ஒருமைப்பாடுகளை நோக்கும்போது சேரநாட்டுக் குடியேற்றம், பாண்டிய நாட்டுக்குடியேற்றம் என்பன கிறிஸ்தாப்தத்தின் தொடக்கத்தில் ஏற்பட்டிருக்கலாம். பின்னை நாளின் சோழப் பேரரசு நிலவியக்காலத்தில் அரசப்பணியாளராகவும், போர்ப்படை வீரர்களாகவும், சமயப்பிரச்சாரகர்களாகவும் தமிழ் மக்கள் ஈழத்திற் குடியேறியிருக்கலாம். ஆங்கிலேயர் ஆட்சிக்

---

5. Indrapala. K., ''Is it an Indus–Brahmi epigraph'? The Hindu, 26-4-1981.
6. Ragupathi, P., "Early settlement in Jaffna and archealogical survey", (Unpublished Ph. D. Thesis), University of Jaffna, 1983.

காலத்தில் ஈழத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான கூலியாட்களாகவும், இந்தியத் தமிழர் இலங்கைக்கு வரவழைக்கப்படலாயினர்.

தமிழர் கல்விநிலை*

இலங்கைத் தமிழருடைய கல்விப் பாரம்பரியத்தை வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது கடல்கடந்து தமிழகத்துடன் தொடர்புற்று இருப்பதைக் காணலாம். பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த குடிப்பெயர்வுகள், அரசியல் நிலைப்பாடுகள் போன்ற தொடர்புகள் வாயிலாக ஏற்பட்ட உறவுகள் கலாசாரத் துறையில் வலுவான பாலத்தை நிறுவியுள்ளன. பண்டைய பாரம்பரியக் கல்விமுறையான குருகுலக் கல்வி முறையின் பரிணாம வளர்ச்சியின் ஒரு படியான திண்ணைப் பள்ளிக்கூடமே பதினாறாம் நூற்றாண்டளவில் கல்வியை வளர்த்த நிலையமாக விளங்கியது.

பதினாறாம் நூற்றாண்டில் இலங்கைக்குப் போர்த்துகீசியர் வந்த காலகட்டத்தில் தமிழ் மக்களிடையே வழக்கிலிருந்த கல்வி, இந்துசமய மரபினதாகவே இருந்தது. போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மேலைநாட்டவரின் வருகையின் விளைவாகவே மேற்கத்திய, கிறித்தவ மரபிலான கல்வி இலங்கையில் காலூன்றியது. மேலைநாட்டாரின் வருகையுடன் வந்து சேர்ந்த கிறித்தவ மிஷனரிமாரின் செயற்பாடுகள் காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் அவர்களுடைய கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன. தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலும், முக்கியமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிறித்தவப் பாதிரிமாரின் முயற்சிகள் காரணமாகப் பாடசாலைகள் பெருகின. அப் பெருக்கத்தின் விளைவாகக் காலப்போக்கில் யாழ்ப்பாண மக்களிடையே, ஏனைய பகுதிகளிலும் பார்க்க, கல்விநிலை உயர்ந்து வளர்ந்தது.

யாழ்ப்பாணத்தவர் கல்விக்கு அளித்த முன்னுரிமை பலராலும் குறிப்பிடப்பட்டுப் பாராட்டப்பட்ட ஒன்றாகும். கல்வியானது யாழ்ப்பாண மக்களுடைய 'முதன்மையான கைத்தொழில்' என்று வர்ணிக்கப்படும் அளவுக்குப் பரவியிருந்தது. வளங்குன்றிய

* இவ்விடயம்பற்றி எழுதுவதில் உதவிய யாழ் பல்கலைக்கழகக் கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வ. ஆறுமுகம் அவர்களுக்கு நன்றி

புவியியற் பிரதேசத்தில் வாழ்ந்த காரணத்தினால் தம்மை உயர்த்திக்கொள்வதற்கு அவர்களுக்குக் கிட்டிய ஒரு மூலதனமாகக் கல்வி அமைந்தது என இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான சர் ஐவர் ஜெனிங்க்ஸ் குறிப்பிட்டுள்ளார்.[7]

தமிழ் மக்களிடையே கல்வி வளர்ச்சி பெருகி வளர்ந்தமைக்குப் பெருமளவில் உதவிய பிறிதொரு காரணி 1960ஆம் ஆண்டுவரை நாட்டில் நடைமுறையில் இருந்த அரச உதவிபெற்ற பள்ளிக்கூட (பாடசாலை) அமைப்பாகும். கிறித்தவ மிஷனரிமாரின் கல்விப் பணி அரசு ஆதரவுடன் இலங்கையில் பரவியகாலந்தொட்டு, ஏனைய மதநிறுவனங்கள் உட்பட அரசு அல்லாத நிறுவனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு நிதியுதவி வழங்கும் நடைமுறை படிப்படியாக ஏற்கப்பட்டு நிலைத்துவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருப்பெற்று வேரூன்றியபௌத்த, இந்து, இஸ்லாமியப் பள்ளிக்கூடங்களின் செழிப்புக்கு இது வழி கோலியது. இந்நிலை 1960-ஆம் ஆண்டில் அன்றைய அரசாங்கம் எடுத்த 'பள்ளிக்கூடங்களைப் பொறுப்பேற்றல்' என்றநடவடிக்கைக் காரணமாக மாறியது. பள்ளிக்கூடங்கள் அனைத்தும், ஒரு சில தனியார் பள்ளிக்கூடங்கள் தவிர, அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதன் விளைவாகத் தமிழர் பகுதிகளில் கல்வி வளர்ச்சி ஓரளவு வீழ்ச்சி கண்டுள்ளது என்றே கொள்ள வேண்டும்.

இலங்கை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தாய்மொழி மூலக் கல்வி என்ற தத்துவத்தின்படி, தமிழ் மக்களிடையே கல்வி ஊடகமாகத் தமிழ்மொழியே பயன்படுத்தப்படுகின்றது. இக்கோட்பாடு மனித உரிமைப் பிரகடனத்துடன் இயைந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். 1951 இலிருந்து மேற்கொள்ளப்பட்ட நிருவாகச் செயற்பாடுகள் மூலம் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் கல்விமொழிகளாக ஆங்கிலத்தின் இடத்தை எடுத்துள்ளன. தாய்மொழி மூலம் கல்வி என்ற இவ்வழக்கு, பொதுப் படையாக, பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை நடைமுறையிலுள்ளது. எனினும், பல்கலைக்கழகத்தில் மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம் என்ற சில துறைகளில் இன்றும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது.

7. University of Ceylon Review - 1944, 'Race, Religion and Economic Survey in the University of Ceylon'.

கட்டாயக் கல்வி என்ற தத்துவம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அதனைச் செயற்படுத்துவதற்கு வலுவுடைய சட்டதிட்டங்கள் இன்றுவரை கொண்டுவரப்படவில்லை. என்றாலும், கல்வியின் பெருமையை நன்கு உணர்ந்து ஏற்றுக் கொண்டுள்ள தமிழர் சமுதாயத்தில் பெற்றோர் அக்கறை காரண மாகப் பிள்ளைகள் 5வயது முதல் 16வயதுவரை பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பதைக் காணலாம். அண்மைக் காலங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் இப்பருவத்துப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் பயில்வதை உற்சாகப்படுத்துவதற்குப் பரவலான வழிமுறைகளைக் கையாண்டுள்ளன.

இடைநிலைக்கு அப்பாற்பட்ட பருவம், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் என்ப வற்றுக்கூடாக, மூன்றாம் நிலைக் கல்வியை அளிக்கின்றது. பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் க.பொ.த. உயர்நிலைத் தேர்வில் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதே வழக்கமாக இருந்தது. அண்மைக் காலங்களில் இவ்வழக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்று தெரிவு செய்யப் படும் மாணவர்களில் 30 வீதத்தினர் திறமை அடிப்படையிலும், 55 வீதத்தினர் மாவட்ட அடிப்படையிலும், 15 வீதத்தினர் பின் தங்கிய மாவட்டங்களுக்கென ஒதுக்கீட்டு அடிப்படையிலும் இடம் பெறுகின்றனர். இந்நடைமுறை, பல்கலைக்கழக மாணவர் அனுமதித் தெரிவில் திறமையைப் புறக்கணிக்கின்றது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. நாட்டில் இயங்கி வருகின்ற எட்டுப் பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணத்தில் ஒன்றும் கிழக்கி லங்கையில் ஒன்றுமாகத் தமிழர் பகுதிகளில் இரண்டு பல்கலைக் கழகங்கள் காணப்படுகின்றன. ஆண்டுதோறும் பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதிபெற்றும், இடவசதியின்மை காரணமாக அனுமதி பெறாத தமிழ் மாணவர்களின் துயர்துடைக்க உயர் கல்வி வசதிகள் மேலும் விரிவாக்கப்படுவது விரும்பத்தக்கதாகும்.

தொழில்நுட்பக் கல்வித்துறையில் தமிழர்களுக்கு இருக்கும் வாய்ப்புப் போதுமானதாக இல்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறைக் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை முறையே வடக்கு கிழக்கு மாகாணத் தமிழரின் தொழில்நுட்பக் கல்வித் தேவையைக் கவனிக்கின்றன.

ஆசிரியர் கல்வியானது, பொதுப் பயிற்சி, சிறப்புப் பயிற்சி என்று சாதாரண ஆசிரியர் மட்டத்திலும், பட்டப் மேற்படிப்பு

பின்கல்வித் தகைமைச் சான்றிதழ் பயிற்சியாகப் பட்டதாரி ஆசிரியர் மட்டத்திலும் அளிக்கப்படுகின்றது. பொதுப் பயிற்சி யானது தொடக்கநிலை, இடைநிலை ஆகிய இரண்டு நிலை களிலும் கற்பிக்கும் ஆசிரியரை உருவாக்குகின்றது. சிறப்புப் பயிற்சி, ஆங்கிலம், கணிதம், அறிவியல், மனையியல், வணிகம் என்ற துறைகளில் இடைநிலைக்கு ஆசிரியர்களைத் தயார் செய்கின்றது. இவ்விருவகைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கும் ஆசிரியர் கல்லூரிகள் யாழ்ப்பாணத்தில் கோப்பாய், பலாலி ஆகிய இரண்டு இடங்களிலும், மட்டக்களப்பில் ஒன்றுமாகக் காணப்படுகின்றன. பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பல்கலைக்கழகத்தில் இடம்பெறுகின்றது. தமிழ் மக்களிடையே, இப்பயிற்சி தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கொழும்புத் பல்கலைக்கழகத்தில் சிறிய அளவிலும் மேற்கொள்ளப் படுகின்றது.

இலங்கையில் தமிழர் கல்வி வளர்ச்சியில் முன்னணியில் நின்று பாடுபட்டவர்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலாநந்தர், சர். பொன்னம்பலம் இராமநாதன், சர். பொன்னம்பலம் அருணாசலம், ஹன்டி பேரின்பநாயகம், ‘இந்துபோட்’ இராச ரத்தினம் முதலியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோராவர். இத்தகு பெரியோர்களின் அயரா முயற்சியின் விளைவாகத் தமிழர் கலாசாரம், கல்வி ஆகியன இன்றும் ஈழத்தில் நிலைகொண்டு விளங்குகின்றன.

தமிழர் தொழில்நிலை - வாழ்க்கைத்தரம்

தொழில்நிலை, வாழ்க்கைத்தரம் என்ற இரு எண்ணக்கருக் களும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. வருமானம், வாழ்க்கைத் தரம் என்பனவற்றைத் தொழில்நிலையே பெருமளவுக்குத்தீர்மானிக் கின்றது. இலங்கைத் தமிழ் மக்கள்பற்றிய சமூக, பொருளாதார ஆய்வுகள் அரிதான நிலையில் இருப்பதால், சில பொதுவான அவதானங்களின் அடிப்படையிலேயே கருத்துக்களை முன்வைக்க வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் தொழில்நிலை, வாழ்க்கைத் தரம் பற்றிய புள்ளிவிவரங்கள் கூட இன்னும் சரியான முறையில் கிடைப்பதாக இல்லை.

இலங்கைத் தமிழ் மக்கள் என்று பொதுவாகக் கூறப்படினும், இம்மக்களின் சமூகப் பொருளாதார அடிப்படைகள் ஒரே தன்மைத் தானவையல்ல. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார்,

முல்லைத்தீவு, மலையகம், கொழும்பு என்ற பிரதேசக் கூறுகளாக விளங்குவன, புவியியல் ரீதியான பிரிவுகளாக மட்டுமன்றி, பொருளாதார உற்பத்தி முறைகள்-சாதனங்கள் என்பனவற்றிலும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. எனவே, இலங்கைத் தமிழர்களின் தொழில்நிலை, வாழ்க்கைத்தரம் என்பனபற்றி அறிய மேற்குறிப்பிட்ட அடிப்படை வேறுபாடுகளையும் கருத்திற்கொள்ள வேண்டும். மேலும் அரசு நிலையத்திலான தொழில் வாய்ப்பு கல்வி என்பனவற்றுடன் சாதியமைப்பின் தாக்கமும் ஈண்டு முக்கியத்துவம் பெறுகின்றன.

இங்கு அரச அல்லது கூட்டுத்தாபன தொழில் வாய்ப்புகளை அவற்றிலுள்ள ஏற்ற இறக்கங்களினால் ஏற்படுகின்ற வாழ்க்கைத் தர அசைவுகளை மட்டுமன்றி, இம்மக்களில் பெரும்பாலோரின் அடியாதார உழைப்பு மூலங்களான வேளாண்மை, மீன்பிடி, மற்றும் வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளின் வினைத்திறன், முடங்கல் நிலைகளையும் கருத்திற் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

அடிப்படையில் வர்க்க அல்லது வகுப்பு வேறுபாடுகளைக் கொண்ட ஒரு சமூக அமைப்பில், சாதியமைப்பும் வலுவாக இணைந்த நிலையில் வாழ்க்கைத்தரநிலை வேறுபாடுகள் பரவிக் காணப்படும். வறுமைக்கோட்டுக்குக் கீழே இன்னல் படும் மக்களிலிருந்து, வசதியான உல்லாச வாழ்க்கைநிலை வரை இது அமையும். இதில் சுமாரான ஒரு வாழ்க்கைத் தரத்துடனான மத்தியதர வர்க்கமும் சக்திவாய்ந்ததாக விளங்கும்.

வாழ்க்கைத் தரத்தின் அடிநிலையில் விளங்கும் வறியமக்கள் வகுப்பினர் முன்பு குறிப்பிட்ட பிரதேச உற்பத்தி தொழில் சார்ந்து வேறுபட்டு விளங்குவர். மலையகத்து தோட்டத் தொழிலாளர்களில் கணிசமான மக்களின் வாழ்க்கைநிலை தாழ்ந்த நிலையில் உள்ளது போல, யாழ்ப்பாணத்து மற்றும் வடக்குக்கிழக்கு பகுதிகளின் வறிய விவசாயக் கூலிகளின் நிலைமைகளும் உள்ளன. பெருமளவில் இவர்கள் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சார்ந்தவர்களாக விளங்குவதைக் காணமுடியும்.

நிலமற்ற வறிய விவசாயிகளின் நிலைகூட ஆரோக்கியமானதல்ல. இங்குதான் நிலத்தின் முக்கியத்துவம் நோக்கப்படல் வேண்டும். உலகளாவிய நிலையில் உற்பத்திக்காரணியான நிலம் மக்கள் வாழ்க்கைத்தர நிலையில் கொண்டுள்ள இணைவை நாம் கருத்தில் கொண்டு அணுக வேண்டும். தமிழ்நாட்டில்

தஞ்சாவூரிலோ அல்லது ஆர்க்காட்டிலோ உள்ளது போல பெரிய நிலவுடைமை இங்கு இல்லாதபோதும், உடைமைகளில் பரந்த வேறுபாட்டு நிலைகள் உள. பிரதேசரீதியிலும் பண்ணை அளவுகளில் வேறுபாடு உண்டு. மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் பெரிய நிலவுடைமையும், யாழ்ப்பாணத்தில் சிறிய நிலவுடைமையும் உண்டு. ஆயினும், இங்குப் பணப்பயிர்களின் செறிவான செய்கையினால் வருமான வாழ்க்கைத்தரத்தில் உயர்வு காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் நிலவுடைமையாளர்களான வேளாளர்கள் வாழ்க்கைத்தர நிலையிலும் உயர்நிலையில் விளங்குபவர்கள். ஏனைய இடைநிலைச் சாதியினரும் அண்மைக் காலங்களில் ஓரளவு முன்னேற்ற நிலையை எட்டியுள்ளனர். மட்டக்களப்பினை எடுத்துக்கொண்டால், அங்குள்ள வேளாள மற்றும் முக்குல சாதியினரிடையே பெருமளவு நிலம் உண்டு. இவர்கள்''போடியார்'' எனப்படுகின்றனர்.

தமிழ் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வில் அல்லது வீழ்ச்சியில் நிலம் முக்கியத்துவம் பெறுவது போல, வர்த்தகமும் மிக நெடுங் காலமாகவே முக்கியத்துவம் பெற்று வந்திருக்கிறது. பழைய வரலாற்றுக்கால வாணிப ஆதாரங்கள் மட்டுமன்றி. அண்மைக்கால நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவுடனான புகையிலை வர்த்தகம் பற்றிய செய்திகளும் அனைவரும் அறிந்ததே. இது மட்டுமன்றி, மிக அண்மைக் காலம்வரை (1983) தென்னிலங்கையின் முக்கிய கேந்திர வர்த்தகக் களங்களில் தமிழர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளது. விவசாயம், விவசாயம்சார் உற்பத்தி மட்டுமன்றி, ஏனைய ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலும் தமிழர்கள் பங்குகொண்டிருந்தனர். இந்திய வம்சாவழியினரான செட்டி, நாடார் போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். அவ்வப்போது நிகழ்ந்த சர்வதேச, உள்நாட்டு சமூக அரசியற் காரணங்களினால் தமிழர்களின் வர்த்தகம் பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது. இத்தகு வீழ்ச்சியின் கொடுமுடியாக 1983 கலவர கால வர்த்தகநிலைய அழிப்புகளையும் சூறையாடல்களையும் குறிப்பிடலாம்.

வாழ்க்கைத்தர உயர்வு தாழ்வில் கல்வியின் பங்கு முக்கியமானது. விவசாயத்துக்கு அடுத்ததாக இம்மக்களின் முக்கிய உயர்வு மூலமாகக் கல்வி அமைந்திருக்கிறது. உள்நாட்டிலும் வெளிநாடு

களிலும் கல்வியின் வழியிலான பல்வேறு உத்தியோக வாய்ப்புகளை முதலில் தேடிப் பயன் காண்பவர்களாகத் தமிழ் மக்களைக் காண லாம். 18ஆம் நூற்றாண்டு காலத்திலேயே மலாயாவிலிருந்து பெருமளவு பணம் தமிழ் மக்களினால் பணவிடை மூலம் இங்குவந்து சேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்நிய கிறிஸ்தவ மிஷனரி களின் கல்வி வாய்ப்புகளை இம்மக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டதன் மூலம் உள்ளூர் நிர்வாக சேவைகளிலும் இவர்கள் பெரிதும் இடம்பிடிக்க வாய்ப்பாயிற்று. இந்த வகையில் யாழ்ப் பாணத்தவர் பெருமளவில் சமூக உயர் அந்தஸ்து பெற முடிந்தது.

சுதந்திரத்திற்கு (1948) பின்பு தோன்றிய சிங்கள தேசியவாதம் தமிழர்களுக்கு விரோதமானதாக அவர்களது தொழில் மற்றும் கல்விவாய்ப்புக்களை அநியாயமாக மறுப்பதாக அமைந்துவிட்டது. இதனால், தொழில் வாய்ப்புக்களில் பெருவீழ்ச்சி நிலை அதிகரித்து வந்துள்ளது. இவையே, இன்றைய அரசியல் கொந்தளிப்பு நிலையின் மூலங்களாகும். மிகக் குறைந்த எண்ணிக்கை யினராலேயே இன்று அரசுத் தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடி கிறது. உயர் அரசாங்க உத்தியோகம் என்பது இன்றைய நிலையில் தமிழர்களுக்கு அரிதாகி விட்டது

மூளைசாலிகளின் வெளியேற்றம் தமிழர்களைப் பொறுத்த வரை அதிகமாக இருந்தது. இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா முதலிய நாடுகளைத் தொழில்நுட்பம், உயர் தொழில் துறைகளில், தேர்ச்சிபெற்ற தமிழர்கள் நாட, சிறப்புத் தேர்ச்சியற்ற இளைஞர் கள், பெருமளவில் மத்திய கிழக்கு நாடுகளை நாடினர். இந்த இளைஞர்களின் உழைப்பினால் கீழ்மத்திய வகுப்பு, மத்திய வகுப்பு குடும்பங்களிடையே கணிசமான அளவு வாழ்க்கைத்தர உயர்வு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நிலம், உறுதியான வீடு ஆகியவை மட்டுமன்றி, சில உல்லாச ஆடம்பரப் பொருட்களையும் இவர்கள் பெற முடிந்துள்ளது. எனினும், இன்று வளைகுடா நாடுகள் பலவற்றின் போர், மற்றும் தொழிற் சேர்ப்பு நிபந்தனை களினால் தமிழர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொழில் நுட்பக் கல்விசார் விழுமியங்கள் பெரிதும் மதிக்கப் படாத ஒரு சூழ்நிலையில், கைத்தொழில் வாய்ப்புகள் பெரு மளவில் இல்லாத சூழலில், தமிழ் மக்களிடையே நகரத் தொழிலாளர் வகுப்பினரின் உருவாக்கம் அரிதானதுதான். தமிழ்ப் பிரதேசங்களில் வடக்கே காங்கேசன் துறையிலுள்ள சிமெண்டுத் தொழிற்சாலை, பரந்தனிலுள்ள இரசாயனத் தொழிற்சாலை,

கிழக்கில் வாழைச் சேனையில் உள்ள காகிதத் தொழிற்சாலை என்பன தவிர ஏனையவை மிகச் சொற்ப எண்ணிக்கையினருக்கே தொழில் வாய்ப்புத் தருவன.

மீன்பிடித் தொழில் வடக்கு கிழக்கில் பெருமளவில் இடம் பெறுகிறது. இதன் உச்சவள எல்லை இன்னும் எட்டப்படாதது. ஆனால், அண்மைக்காலங்களில் அரச கெடுபிடிகளின் கடல்வலைய எல்லைகளால், இம் மக்களின் வாழ்க்கைத்தரம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில், புதிய வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையில், உள்ள வசதிகளையும் பயன்படுத்த முடியாத நிலையில், புதிதாக அகதிகள் என்ற ஒரு ''தொழில் நிலை''யையும், சீரழிந்த ஒருவாழ்க்கைத் தரநிலைக்குத் திடீர் வீழ்ச்சிகாணும் தமிழ் மக்களை யும் இன்று காணமுடிகின்றது.

எல்லா நிலைகளிலும் வாழ்க்கைத்தர நிலையில் பெரும் தாக்கங்கள், தொழில் நிலைகளிலும் பெரிய வீழ்ச்சி நிலைகள்— இவை சரி செய்யப்படாத நிலையில் இன்று பெரிதும் பாதிக்கப் பட்டுள்ள கல்வியின் வழி எதிர்கால நிலை மேலும் மோசமாகும் அபாயம் சுட்டிக் காட்டப்பட வேண்டியனவாகும்.

பழக்க வழக்கங்கள்

மனிதனின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளில் மேற் கொள்ளப்படும் ஒழுக்க முறைகளைப் பழக்க வழக்கங்கள் எனக் கொள்ளலாம். தனி ஒருநாளில் கடைப்பிடிக்கும் ஒழுகலாறுகள், தனி ஒருவரின் வாழ்நாளில் பின்பற்றப்படும் நடைமுறை ஒழுங்கு கள் ஆகியனவும் பழக்கவழக்கங் ளில் அடங்கும். உதாரணமாக, குழந்தையின் வளர்ச்சிப் படியில் இடம்பெறும் சடங்குகளைக் குறிப்பிடலாம். குழந்தை பிறந்து 31 அல்லது 45ஆம் நாளில் தொடக்குக் கழிக்கும் சடங்கு நடைபெறுகிறது. அன்று, விருந்தினர் உபசரிக்கப்படுகின்றனர்; குழந்தையைக் கோயிலுக்குக் கொண்டு போகின்றனர். பின்பு காதுகுத்துச் சடங்கு, பெண்கள் பூப்படையும் போது பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, புதுமணமக்களை உபசரிக்கும் முறைகள், சீதன முறைகள் முதலியனவும் விதந்து கூறத்தக்க வகையில் தனித்துவம் வாய்ந்தவை.[8] அடுத்து மரணச்

8. சண்முகதாஸ் அ, சண்முகதாஸ் மனோன்மணி, (பதிப்பாசிரியர் கள்) தமிழர் திருமண நடைமுறைகள், யாழ்ப்பாணம், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், 1984.

சடங்குகளின் இயல்புகளும் இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன.[9]

உணவுப் பழக்கத்தில் வகைவகையாக உணவு தயாரித்தலிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. விருந்தினரை உபசரிக்கும் முறையிலும் தனித்துவம் பேணப்படுகின்றது. இவை போன்றே உடை, உறைவிடம், பெரியோரைக் கனம்பண்ணல் (மரியாதை செலுத்துதல்) முதலான விடயங்களிலும் பழக்கவழக்கங்கள் குறிப்பிடத்தக்கவகையில் அமைகின்றன.

மலையாள நாட்டிலே மாந்திரிகப் பயிற்சியின் பிரயோகம் பெரிதும் பேசப்படுவது போன்றே ஈழத்திலும் மட்டக்களப்புப் பிரதேசம் மந்திரத்திற்குப் பெயர்பெற்ற பகுதியாக விளங்குகின்றது. இங்கு வழங்கி வந்த "மகுடிக் கூத்து" என்ற கிராமிய நாடகத்தின் உட்பொருளானது மலையாள நாட்டிலிருந்து வந்தோர் தமது மந்திரவலிமையால் இப்பிரதேச மக்களைத் தம் வசப்படுத்திய சேதியைக் கூறுவதாக அமைகின்றது. இக்கதை, பண்டைய குடியேற்ற நிகழ்வுகளை உருவக அமைப்பில் குறிப்பிடுகின்றது எனலாம்.

பிறப்பு, பெண் பூப்பெய்தல், திருமணம், இறப்பு என்ற கட்டங்களிலும் சாஸ்திரம் கேட்டு அதன் நன்மை தீமைகளை அறிந்து கொள்வதில் மிக்க ஆர்வமும், சாஸ்திரம் கூறுவதன்படி நடந்து கொள்வதில் நம்பிக்கை உடையோராகவும் காணப்படுகின்றனர், மேலும் வீடுகட்டுதல் வயலில் ஏர்நாளுக்குப் போதல், விதைத்தல் முதலான தொழில்துறை சார்ந்த நடவடிக்கைகளிலும் சாஸ்திரம் பார்க்கும் போக்கும்— நம்பிக்கையும் இம் மக்களிடம் நிலை கொண்டுள்ளன. திருட்டைக் கண்டுபிடிக்கவும் காணாமற் போனவரைக் கண்டுபிடிக்கவும் சாஸ்திரம் பார்க்கப்படுகிறது. இதனைக் "குறிபார்த்தல்", "மைபோட்டுப் பார்த்தல்" (அஞ்சனம் பார்த்தல்) என்று கூறுவர்.

இலங்கைத் தமிழருடைய பழக்கவழக்கங்கள் பிரதேச அடிப்படையில் ஆராயப்பட வேண்டிய மிகப் பரந்துபட்டதொரு விடயமாகவே காணப்படுகின்றது.

---

9. பாலசுந்தரம், இ., "மட்டக்களப்பு மாவட்டத்து மரணச் சடங்குகளும் மரபுகளும்", உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக் கிளையின் மட்டக்களப்பு மாநாட்டில் 20-3-1976 அன்று படிக்கப்பட்ட கட்டுரை.

கோயில்கள்

ஈழத்தின் புராதனத் தலங்களாக இலங்கையின் கரையோரங்களில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம், கொக்கொட்டிச் சோலை, தான்தோன்றீஸ்வரம் முதலிய பல சிவாலயங்கள் அமைந்துள்ளன. இலங்கையின் வடகோடியிலுள்ள வல்லிபுரம், பொன்னாலயம் ஆகிய விஷ்ணு ஆலயங்களும் வரலாற்றுப் பழமை மிக்கனவாகத் திகழ்கின்றன. தென்கோடியில் தேவன்துறை என்றழைக்கப்பட்டு, பிற்றை நாளில் தெவிநுவர என வழங்கும் இடத்தில் பண்டைநாளில் விஷ்ணு ஆலயம் இருந்தழிந்தமைக்கான சான்றுகளும் காணப்படுகின்றன.

மேலும், கடற்கரையோரப் பிரதேசங்களை யடுத்தமைந்த பழமைமிக்கத் தலமாகக் கதிர்காமம் திகழ்கின்றது. இவற்றுக்கு அடுத்த படியாக இலங்கையின் கரையோரச் சுற்றுப்புறங்களில் வடக்கே அங்கணாமைக் கடவை, மாதகல், மாதனை முதலாக, கிழக்குக்கரையில் வற்றாப்பளை, நிலாவெளி, வந்தாறுமூலை, கழுதாவளை, செட்டிபாளையம், காரைத்தீவு, தம்பிலுவில், பாணமை முதலிய 50க்கும் மேற்பட்ட கடற்கரையை அண்மித்த இடங்களில் கண்ணகி அம்மன் கோயில்கள் அமைந்துள்ளன.

இலங்கையின் கிழக்குக் கரையில் பாண்டிருப்பு என்ற இடத்திலும், மேற்குக் கரையில் உடப்பு என்ற இடத்திலும் திரௌபதை அம்மன் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. மேலே குறிப்பிடப்பட்ட கரையோரக் கோயில்களை நோக்கும்போது, பண்டை நாளில் குடியேறிய மக்கள், தம் குலத்தெய்வங்களுக்குக் கோயில்கள் அமைத்து வழிபட்டமையும், அவர்கள் அத் தெய்வங்களைக் காவல் தெய்வங்களாக வழிபட்ட முறைமையும் பெறப்படுகின்றன.

தென்னிந்தியாவிலுள்ள நிலைப்பாடு போன்றே, ஈழத்திலும் கலியுகக் கடவுளாகப் போற்றப்படும் முருகனுக்கே அதிக கோயில்கள் பெரியனவும்—சிறியனவுமாக அமைந்துள்ளன. இவற்றில், கதிர்காமம், நல்லூர், செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம், சிற்றாண்டி, திருக்கோவில், மண்டூர் முதலான தலங்கள் பழமையும் பெருமையும் மிக்க முருகதலங்களாகும். விநாயகர் வழிபாடும் இலங்கையில் மிகப் பழங்காலம் முதலாக இருந்து வந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. பிள்ளையார் கோயில்கள் அல்லது விநாயகர் வழிபாட்டிடங்கள் இல்லாத இந்துக் கிராமங்கள் இலங்கையில் இல்லை என்றே கூறத்தக்க அளவுக்கு விநாயகர் வழிபாட்டிடங்கள்

மிகப் பரவலாகக் காணப்படுகின்றன. வீரபத்திரர் ஆலயங்களும் ஆங்காங்கே அமைந்துள்ளன. காத்தவராயன், முனியப்பர், ஐயனார், அண்ணன்மார், பெரியதம்பிரான், விறுமர், கிங்கரர், சுடலைமாடன் முதலிய தெய்வங்களுக்குரிய வழிபாட்டிடங்கள் சிலவும் காணப்படுகின்றன.

பேய்ச்சி, மாரி, காளி—துர்க்கை, நாச்சிமார் முதலிய பெண் தேவதைகளுக்குரிய கோயில்களும் பெரிதளவாகக் கிராமப்புறங் களில் உள்ளன. நாகதம்பிரான் கோயில்களும், நாகதம்பிரான் வழிபாட்டிடங்களும் ஈழத்தில் மிகப் பரவலாக அமைந்துள்ளன. இவற்றில், வட இலங்கையிலுள்ள நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், நாகர் கோயில் என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

ஈழத்தின் மத்திய மலைநாட்டில் நுவரெலியாவுக்கு அண்மை யில் சீதாஎலிய என்ற இடத்தில் உள்ள சீதை அம்மன் ஆலயம் இதிகாச காலத்துச் சேதிகளை நினைவூட்டுகின்றது.

போர்த்துகீசியர் வட இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் (கி. பி. 1620) பழைய சைவத் தலங்கள் பலவும் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டன, அக்காலத்துச் சைவர் வெளிப்படையாகச் சமய அனுட்டானங்களை மேற்கொள்ள முடியாதிருந்தனர். மறை விடங்களிலே மறைவாகத் தமது வழிபாட்டை நடாத்தி வந்தனர். ஆங்கிலேயர் காலத்தில் (1796—1948) நிலவிய சமய சகிப்புத் தன்மையினாலும். ஆறுமுகநாவலர் அவர்களின் சமய எழுச்சிப் போராட்டங்களினாலும் இடித்தழிக்கப்பட்ட பழங் கோயில்கள் மீண்டும் புனரமைத்துக் கட்டப்படலாயின. சுதந்திரத்திற்குப் பின்பு ஏற்பட்ட சமய கலாசார விழிப்புணர்ச்சியின் பயனாகக் கோயில்களை நிர்மாணித்தல், குடமுழுக்குச் செய்தல், புனரமைத்தல் முதலான கோயிற்பணிகள் விரிவடையலாயின, ஆனால், அண்மைக் காலமாக இந்து ஆலய பாதுகாப்புக் குழுக்கள் தோன்றிச் செயல்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமைக்கான பின்னணிகளும் நிகழ்வுகளும் வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டி யனவே.

தெய்வ வழிபாடு

ஈழத்தில் வாழும் இந்துக்களின் வழிபாட்டு முறைகளை வேதாகம விதிமுறைகளுக்கு உட்பட்டவை எனவும், வேதாகம விதிகளுக்கு உட்படாத கிராமீய வழிபாட்டு முறைகள் எனவும், இரண்டாக வகுத்துக் கொள்ளலாம். இந்தியாவில் தோற்றம் பெற்ற வேதாகம வழிபாட்டு முறைகள் ஈழத்து வழிபாட்டு முறைகளிலும்

பாதிப்பை ஏற்படுத்தலாயின. சோழப் பேரரசு, பாண்டியப் பேரரசு, விசயநகரப் பேரரசு என்பன நிலவிய போது, அவை ஈழத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய காலங்களில் வேதாகமவிதிவழிப்பட்ட வழிபாட்டு முறைகளும் இங்கு ஆதிக்கத்தைப் பெறலாயின. யாழ்ப்பாணத்தில் கி. பி. 1620 வரை நிலவிய ஆரியப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் வேதாகம முறைப்படி கோயில் அமைப்பு முறைகளும் வழிபாட்டு முறைகளும் நன்கு நடைமுறைப்படுத்தப்படலாயின. திருக்கேதீஸ்வரம், நல்லூர் ஆதீனம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முதலான இடங்களில் இயங்கும் குருகுலங்கள் வைதீக ஆசாரியர்களை வேதாகம முறைப்படிப் பயிற்றுவித்து வேதாகம வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்தி வருகின்றன.

ஈழத்தைப் பொறுத்தவரையில், நாவலர் பெருமானின் பெருமுயற்சியினால் சமய அனுட்டானங்கள், விரத நடைமுறைகள், சைவ உணவுப் பழக்கம் முதலியன இந்துக்களால் குறிப்பிடத்தக்க வகையில் பின்பற்றப்பட்டு வருகின்றன எனின் மிகையாகாது. சைவ சமயம் கூறும் சகல விரதங்களையும் மக்கள் அனுட்டிக்கின்றனர். இத்தகையோரில் பெரும்பாலானோர் பெண்களேயாவர். புராணப் படிப்பு கோயில்களில் ஒழுங்காக நடைபெறுகின்றது. கந்தபுராணப் படிப்பு தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நடைபெறும். அடியார்கள் பயபக்தியுடன் விரதமனுட்டித்துக் கேட்பதும், இறுதி நாளில் அன்னதானத்துடன் புராணப் படிப்பு நிறைவெய்துவதும் சிறப்பு அம்சமாகும். வேதாகம முறைப்பட்ட ஒவ்வொரு கோயிலிலும் விசேட பூசைக் காலங்களில் அவற்றுடன் தொடர்புடைய புராணப் படிப்பு இடம்பெறும் பெரும் மரபும், வழிபாட்டு முறையிலே பின்பற்றப்பட்டு வருகின்றது.

வேதாகம கிரியை முறைகளுக்கு அமையாது வழிபாடு நடைபெறும் ஈழத்துப் புகழ்பெற்ற திருத்தலங்களுள் கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் ஆகிய மூன்று முருக தலங்களும் குறிப்பிடத்தக்கவை. கதிர்காமத்தில் பிராமணரல்லாத "கப்புறாளை" எனப்படுவோரே பூசகராவர். தேனும் தினைமாவும் முருகனுக்குப் படைக்கப்படுகின்றன. மண்டூர் முருகன் பதியில் அந்தணர் அல்லாத "கப்புகன்" என்றழைக்கப்படுபவரே பூசகராவர். சந்நிதி முருகன் கோயிலிலும் பூசகர் அந்தணர் அல்லாத பொதுமக்களேயாவர். கிராமிய வழிபாட்டு முறையில் பொதுமக்கள் நேரடியாகவே பூசையில் ஈடுபடுகின்ற சிறப்புக் காணப்படுகின்றது. கிராமிய மக்கள் தாம் விரும்பிய, தமக்கு வசதியான தினங்களிலே

கிராமியவழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று பொங்கல், மடை, படையல் முதலியவற்றை வைத்து வழிபடுதல் இயல்பு. கோயிற் பூசாரியார் அவர்களுக்கு 'திருநீறுபோடுதல்', 'நூல் கட்டுதல்' முதலிய கிரியைகளைச் செய்வதுண்டு.

ஆலயங்களில் உயிர்ப்பலி (கோழி, ஆடு) கொடுக்கும் வழக்கம் சட்டரீதியாகத் தற்போது தடைசெய்யப்பட்டுள்ளது. முன்னர் கிராமியத் தேவதைகளுக்குப் பலிகொடுத்து வழிபடும் மரபு பரவலாக இருந்து வந்திருக்கிறது. வேள்வி நடைபெறும் கோயில் களில் வீரசைவரே பூசகராக இருப்பர். வைரவர், காளி ஆகிய தேவதைகளுக்கே பலிகொடுக்கும் வேள்வி நடைபெற்றிருக்கின்றன. உக்கிரவைரவர், நரசிங்க வைரவர், சுடலை வைரவர், காட்டு வைரவர் என்ற தேவதைகளுக்குப் பலிச் சடங்குவைத்து வழி பட்டிருக்கின்றனர். ஆனால், ஞானவைரவமூர்த்திக்குப் பலிச் சடங்கு நடைபெறுவதில்லை.

திரௌபதை அம்மன் கோயில்களில் ஆண்டுக்கொருமுறை சடங்கு நடைபெறும். மகாபாரதப் படிப்பு, வனவாசம், தவநிலை என்ற சடங்குகளும், இறுதிநாளில் "தீ மிதிப்பும்" சிறப்பாக நடை பெறும். அம்மன் வழிபாட்டுச் சடங்குகளிலும் தீமிதிப்பு இடம் பெறுதல் வழக்கமாகும். உடுக்கிசையும், கரகஆட்டமும் அம்மன் வழிபாட்டில் இடம்பெறும் முதன்மைக் கலைகளாகும். தென்னிந்தி யாவில் வழக்கற்றுப்போன கண்ணகி வழிபாடு, ஈழத்தில் பெரு வழக்குப் பெற்றுள்ளமையின் சமூக சமயக்காரணிகள் ஆராயப்பட வேண்டியனவாகும். அதுபோன்றே கண்ணகி வழிபாட்டிலக்கியங் களும் ஈழத்திற் பெரிதும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

கண்ணகி வழிபாட்டிலே ஆண்டுதோறும் வைகாசிப் பூரணையை ஒட்டி எட்டு நாட்கள் கண்ணகி கதை ஏட்டுப்படிப்பும், எட்டாம்நாள் குளிர்த்தி, மடை, பொங்கல் முதலாம் கிரியைகளும் நடைபெறும். குறிப்பாகக் கிழக்கிலங்கைக் கண்ணகி அம்மன் கோயில்களில் பஞ்சம், கொடுநோய் முதலான பேரின்னல்கள் ஏற்படும்போது, போர்த்தேங்காய் அடித்தல், தேர்க்கலியாணம், கொம்பு முறித்தல் என்ற விசேட வழிபாட்டுக் கிரியைகள் இடம் பெறுவதுமுண்டு. செட்டிக்குலத்துதித்த கண்ணகிக்குக் கோயில் இருக்கக் கூடாது என்று ஆறுமுகநாவலர் தீவிர பிரசாரத்திலீடு பட்டமையால், கண்ணகி கோயில்கள் இராசராஜேஸ்வரி அம்மன், மனோன்மணி அம்மன் கோயில்களாக மாற்றம் பெற்று, வேதாகம முறைப்படியான வழிபாட்டு முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்

படம் : இ. பாலசுந்தரம்



யாழ்ப்பாணத்திலே நல்லூரினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சிங்கை ஆரிய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களையே 'சேது நாணயம்' என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கும் 16ஆம் நூற்றாண்டுக்கும் நடுப்பகுதி வரை ஆட்சிசெய்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளின் சேது நாணயம் தென்னிலங்கை வரை புழக்கத்தில் இருந்தமையினை தேவி நுவர விஷ்ணுகோவிலில் மேற்கொண்ட அகழ் வாய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

படம் : இ. பாலகந்தரம்

யாழ்ப்பாணம் குடாநாட்டினுள் கற்காலத்தினைச் சேர்ந்ததாகக் கொள்ளப்படும் ஒரு புராதன வரலாற்றுத் தலமாக 'மாயக்கை' என்ற கிராமப் பகுதி அடையாளம்காட்டப்பட்டுள்ளது. இங்கு கி மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்துப் பொறிக்கப் பட்ட மட்பாண்டம், கூரையோடுகள், மண்ணாலான விளக்குகள் புராதான செங்கட்டிகள் என்பனவெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கேயுள்ள புராதன சுண்ணாம்புக் கற்குகையொன்றின் உள்ளிருந்து இப்படத்தில் உள்ள கல்லாயுதமும். வேறுபல தொல்லியல் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

படம் : செ. கிருஷ்ணராசா, யாழ் பல்கலைக்கழகம்.



நடராசர் வெண்கலச் சிற்பம்

இந்த வெண்கலச் சிற்பமானது பொலனறுவை இராசதானியிலே உள்ள இரண்டாம் சிவதேவாலயமான வானவன் மாதேவி ஈஸ்வரத்தினுள் இருந்து அகழ்வாயின்போது வெளிக்கொணரப்பட்டது. சோழ-சிங்கள கலைப்பாணிகளின் கலப்பிலே யமைந்த இந்த நடராசர் வெண்கலச் சிற்பம் 90.4 cm. உயரமுள்ளது. தென்னிந்திய பாணியினின்று இது வேறுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

படம் : செ. கிருஷ்ணராசா,
யாழ் பல்கலைக்கழகம்.

மாரியம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் காத்தவராய சுவாமி வழிபாடும் இங்கு சிறப்புப் பெற்றுள்ளது. இவ்வழிபாடு பற்றிய விவரங்கள். இக்கட்டுரையாசிரியர் பதிப்பித்த "காத்தவராயன் நாடகம்" (1986) என்ற நூலின் ஆய்வுரையில் தரப்பட்டுள்ளன. காத்தவராய சுவாமிக்கென்று தனிக் கோயில்கள் மிக அரிதாகவேயுள்ளன. ஆனால் மாரியம்மன் கோயில் முன்றிலில் காத்தவராய சுவாமியின் சின்னமாகக் கழுமரம் நாட்டப்பட்டு, அஃது வழிபடப்படும். காத்தவராயசுவாமி வழிபாடு பொதுவாகச் சமூக பொருளாதார அடிநிலை மக்களாலேயே மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இவ்வழிபாட்டின் போது, காணிக்கையாகக் காத்தவராயன் கூத்து கோயில் முன்றிலில் மிகப் பயபக்தியுடன் ஆடப்பட்டு வருகின்றது.

திராவிட மக்களின் தொன்மை வாய்ந்த மர வழிபாட்டு முறைகளும் இங்குக் கிராமிய வழிபாட்டு முறையில் இடம் பெற்று வருகின்றன. வேம்பு, அரசு, ஆல், மருது, புளி முதலிய மரங்களை வழிபடுகின்றனர். கிராமியக் கோயில்கள் பல இத்தகு மரப் பெயர் களை முன்னொட்டாகக் கொண்டும் (உ-ம் : மருதப்பிள்ளையார்) அமைந்துள்ளன.

விழாக்கள்

பண்டைத் தமிழர்தம் விழாக்கள் பற்றிய சேதி பழந்தமிழ் இலக்கியங்களினூடாக அறியப்படுகின்றது. ஈழத்திலும் தமிழர் மத்தியில் பாரம்பரியமாக உழவர் திருநாளாகிய தைப்பொங்கல் விழா, உழவுக்குத் துணைபுரியும் மாட்டுப் பொங்கல் அல்லது தைப் பூசத் திருநாள், புதுவருடப் பிறப்பு விழா, தீபாவளிப் பண்டிகை, சிவராத்திரிவிழா, நவராத்திரி விழா என்பன சமய—சமூக விழாக் களாகக் கொண்டாடப்படுகின்றன. தைப்பொங்கல் விழா பொதுவாகத் தைமாதம் முதல் தேதியில் நடைபெறுகிறது. புத்தாடை அணிந்து புதுப்பானையில் பொங்கி, சூரியனை வழி பட்டு, உண்டு மகிழும் குதூகல விழாவாகப் பொங்கல் விழாக் கொண்டாடப்படுகிறது. அன்று கலைநிகழ்ச்சிகளும் பரவலாக இடம்பெறும், இதற்கடுத்தபடியாகப் புது வருடக் கொண்டாட்டத் தினை மிகச் சீராக இந்துக்கள் அனைவரும் கொண்டாடுவர். தலைக்கு மருத்துநீர் வைத்து முழுகுதல், கைவிசேடம்பெறுதல், புத்தாடை புனைதல், ஆலயவழிபாடு, விருந்தினரை வரவேற்றல். உறவினர் இல்லஞ் செல்லல் முதலியன கண்டிப்பான முறையில்

பின்பற்றப்படுகின்றன. பலவகையான இனிப்புப் பலகாரம் செய்து உறவினர் நண்பர்களுடன் கலந்துண்ணல் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. சித்திரை வருடத்திலும் புதுப்பானைப் பொங்கல் இடம்பெறும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் சித்திரை வருடத்திற்காகத் தாம் வாங்கிய புத்தாடைகளைத் தாம் அணியு முன்பு, தம் இல்லத்தின் முற்றத்தில் நிற்கும் தென்னம்பிள்ளைக்கு அணிவித்து மகிழும் மரபு மிக அண்மைக் காலம் வரை இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் புதுவருடக் கொண்டாட்டங் களை முன்னிட்டு ''மாட்டுவண்டிச் சவாரி''ப் போட்டிகள் முன்னர் நடைபெற்றிருக்கின்றன. மட்டக்களப்புப் பகுதியில் புதுவருடத்தை முன்னிட்டு நாட்டுக்கூத்துக்கள் ஆடப்பட்டுமிருக்கின்றன. தொட்டில் ஊஞ்சல் அமைத்து உல்லாசமாகப் பொழுது போக்கும் மரபும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருந்திருக்கிறது.

சிவராத்திரி காலங்களில் கோயில்களில் விசேடபூசைகள், சொற் பொழிவுகள், சமயச் சார்பான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுதல் வழக்கம். ஈழத்தைப் பொறுத்தவரையில் சிவராத்திரி விழாவுக்கும் வழிபாட்டிற்கும் சிறந்த தலமாகத் திருக்கேதீஸ்வரம் விளங்கி வந்தது. அங்கு நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளையும் வானொலி நேரடியாக ஒலிபரப்புச் செய்தது. ஆனால், இன்று அந்நிலை கற்பனையாகிவிட்டது.

இலங்கைத் தமிழர் அரசியல்நிலை*

இலங்கைத்தீவு பல்வேறு இன மக்களைக் கொண்ட ஒரு நாடாகும். கிறித்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இத்தீவில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் கி பி. 6ஆம் நூற்றாண்டில் மகாநாமதேரோ எனப்படும் பௌத்தத் துறவியால் எழுதப்பட்ட மகாவம்சம் எனப்படும் நூலின்படி இலங்கைத்தீவு சிங்கள— பௌத்தர்களுக்கே உரியதென்றும், தமிழர் இத்தீவிற்கு அந்நியர் என்றும் விவரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் தான் இன்று சிங்கள மக்களின் மனப்பாங்காய் அமைந்துள்ளது. தென்னிந்தியாவிற்கே சிறப்பாக உரிய பெருங்கற்காலப் பண்பாடு

* இப்பொருள்பற்றி எழுதுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் எஸ். திருநாவுக்கரசு அவர்கள் உதவினார்.

கிறித்துவிற்கு முற்பட்ட காலத்தில் இலங்கையிச் நிலவிய தென்பதும், தமிழ் மக்கள் பூர்வீகக் குடிகளாய் இலங்கையில் வாழ்ந்துள்ளனர் என்பதும் தொல்பொருட் சான்றுகளால் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லாளன் எனப்படும் தமிழ் மன்னன் கி. மு. 205 – 161 வரையான காலப் பகுதியில் அனுராத புரத்தைத் தலைநகராகக் கொண்டு நீதிதவறாது சிறப்பாக ஆட்சி புரிந்தான் என்று மகாவம்சமே ஒப்புக்கொள்கின்றது. ஆயினும், எல்லாளனை ஒரு தமிழன் என்றும் இந்து மதத்தவன் என்றுமே மகாநாமதேரோ நோக்கியுள்ளார். இத்தகைய இனரீதியான நோக்கே இன்றைய இனப்பிரச்சனைக்கு ஓர் அடிப்படைத் தூண்டு கோலாக உள்ளது.

இலங்கைத் தீவில் சிங்கள மக்களுடன் இணைந்து ஓர் அரசியற் குட்பட்டு வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண இராச்சியம் எனும் அரசை அமைத்தனர். இவ்விராச்சியம் 1619ஆம் ஆண்டு போர்த்துக்கீசியராலும், பின்பு 1658ஆம் ஆண்டு ஒல்லாந்தராலும், 1796ஆம் ஆண்டு ஆங்கிலேயராலும் கைப்பற்றி ஆளப்பட்டுவந்தது. ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் 1833ஆம் ஆண்டு இலங்கைத்தீவு முழுவதும் ஒற்றையாட்சி முறையின் கீழ் ஒரே நிர்வாகத்திற்குட் படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் சட்ட நிரூபண சபையில் வகுப்பு வாரியாகத் தமிழ், சிங்களப் பிரதிநிதிகள் இடம்பெறத் தொடங்கி னர். ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் இனமுரண்பாடுகள் வளர்ந்து வந்தன. 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் பெருந் தோட்டப்பயிர்ச் செய்கைக்காகத் தென்னிந்தியாவிலிருந்து குறைந்த கூலிக்குத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டு மலையகத்தில் குடியேற்றப் பட்டனர். இவ்வாறு அழைத்துவரப்பட்ட மக்களுக்கு எதிராக இனத்துவேசம் காட்டப்பட்டு வந்தது. 1948-ஆம் ஆண்டு இலங்கை "சுதந்திரம் அடைந்ததும்" டி. எஸ். சேனநாயகா தலைமையிலான அரசாங்கம் மலையக மக்களின் வாக்குரிமையையும் குடியுரிமையை யும் பறித்தது. மலையக மக்களின் பிரச்சனையைக் காரணமாக வைத்து அனைத்து இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்த ஒரு பகுதியினர், 1949ஆம் ஆண்டு சமஷ்டிக் கட்சியை (தமிழரசுக் கட்சி) ஆரம்பித்தனர். ஆனால் உண்மையில் இக்கட்சி மலையகத்தமிழ் மக்கள் மத்தியில் தன்னை வளர்த்துக்கொள்ள வில்லை. இக்கட்சி இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில்

மட்டுமே வளர்ந்தது. மலையகத்தில் திரு. எஸ். தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சி யடைந்தது.

1956ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் ஆட்சி மொழியாகச் சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றியது. இதனால் இனப்பிரச்சனை வளரத் தொடங்கியது, சமஷ்டிக் கோரிக்கையும் கைகூடவில்லை. 1972ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் திட்டத்தில் சிங்கள மொழியும், பௌத்தமதமும் அரசியல் சட்டரீதியாக முன்னிலைக்கு வந்தன. பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு இனரீதியான தரப் படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நான்காம் உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றபோது காவல் துறையினரின் பலாத்கார மான குழப்பத்தால் 11 அப்பாவிகள் பலியாகினர். இவற்றின் பின்னணியில் 1976ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பிரிந்து தனியரசு அமைக்கும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது இன்றுவரை ஆயுதம் தாங்கிய போராட்டமாக நீடித்து வருகிறது.

கலைகள் — விளையாட்டுக்கள்

ஈழத்து மக்களின் வாழ்வும் வளமும் கலைசார்ந்தனவாகும். சாஸ்திரிய ரீதியான கலைகளும், நாட்டார் கலைகளும் இங்குச் செழுமை பெற்றுள்ளன. தமிழகத்தைப் பின்பற்றிய சாயலில் சாஸ்திரியக் கலைகளான பரதம், கர்நாடக சங்கீதம், தவில், நாதஸ்வரம், சிற்பம், ஓவியம் முதலான கலைகள் வளர்ச்சி கண்டுள்ளன. இவற்றுக்கப்பால் நாட்டார் கலைகள் மகோன்னத நிலையில் இன்றும் செயலாற்றல் பெற்றுக் காணப்படுகின்றன. இலங்கையில் நாட்டுக்கூத்துக் கலை மிக நுட்பமாக வளர்ந்திருக் கின்றது. வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து, விலாசக் கூத்து, கொட்டகைக் கூத்து, காத்தான் கூத்து என்ற அடிப்படையில் கிராமிய நாடகக்கலை நன்கு வளர்ச்சிபெற்று ஆற்றல் மிக்க கலைவடிவமாகத் திகழ்கிறது. இதிகாசம், புராணம், சமூகம், வரலாறு தழுவிய கிராமிய நாடக இலக்கியங்கள் வாய்மொழியாக வழங்கி, அவை படிப்படியாக அச்சுவாகனமேறியும் வருகின்றன.

கிராமிய நாடகங்களின் சிறப்பம்சங்களை நவீன நாடகங்களில் புகுத்திக் கிராமிய நாடகங்களின் இயல்புகள் பேணப்பட்டு வருகின்றன. இருப்பினும் அண்மைக் காலங்களில் பழைய மரபினைச் சார்ந்த நாட்டுக்கூத்துக்கள், நவீன முறையில் தயாரிக்கப்பட்டுப் பல்கலைக்கழகங்களிலும், நகர்ப்புறங்களிலும் மேடையேற்றப்பட்டு வருகின்றன.

கோலாட்டம், கரகம், காவடி முதலான கலைகளும் வாழும் கலைகளாக உள்ளன. காவடி ஆட்டத்தில் ஆடல் நுட்பங்களைப் புகுத்தித் "தாளக்காவடி" என்ற ஒரு ஆடல்முறை மாவிட்டபுரப் பகுதியில் சிறந்து காணப்படுகின்றது.

ஈழத்தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான பட்டம் விடுதல், கிட்டியடித்தல், கிளித்தட்டு ஆட்டம் முதலியன இன்றும் வழக்கிலுள்ளன.

இலங்கையில் மகளிர்நிலை

இலங்கை வாழ் தமிழர்களில் 51% வீதத்தினர் ஆண்களாகவும் 49%வீதத்தினர் பெண்களாகவும் காணப்படுகின்றனர். பெண்களுக்குக் கல்வி, தொழில் வாய்ப்பு, சமூக நிலைப்பாடு என்பனவற்றில் சமஉரிமை வழங்கப்பட்டுள்ளன. பொதுவாகப் பெற்றோரால் ஒழுங்குபடுத்தப்படும் திருமணங்களே இங்குப் பொதுமக்கள் யாவராலும் வரவேற்கப்படுகின்றன. எனினும், காதல் திருமணமும் கணிசமான அளவு இடம் பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது. ஒரு பெண் ஓர் ஆணைத் திருமணம் செய்தலையே சட்டம், சமயம், சமூகம் ஆகியன அங்கீகரிக்கின்றன. இளம் விதவைகள் மறுமணம் செய்வதைச் சமூகம் தற்போது ஏற்றுக்கொள்கின்றது. திருமணத்தின் பின் கணவன் மனைவியின் வீட்டில் வாழ்வதே பொது வழக்கமாகும். மாறாக, கணவன் பணவசதி உடையவனாக இருந்தால், பெண் கணவனின் வீட்டில்போய் வாழும் மரபுமுண்டு. இது இந்திய நிலைக்கு முரண்பட்ட ஒரு பொது மரபாகும்.

பெண்கள் 'பூப்புநிலை' அடைந்தபின்பு திருமணம் செய்து கொள்ளும் மரபே இருந்து வருகின்றது. முன்னர், பெண் 'பூப்பு நிலை' அடையுமுன்பே திருமணம்செய்துகொண்ட செய்திகளுமுள. தற்போது திருமணவயது சராசரியாகப் பெண்களுக்கு 25உம், ஆண்களுக்கு 30உம் எதிர்பார்க்கப்படுகின்றது. பட்டதாரிகளும், பணி புரியும் பெண்களும் இந்த வயதெல்லலையைத் தாண்டுவதும் வழக்க

மாகிவிட்டது. இவற்றுக்கும் மேலாகச் சீதனப் பிரச்சனை, சாதகப் பொருத்தம் என்பனவற்றால் வயதெல்லையைத் தாண்டு வதும் வழக்கமாகிவிட்டது. இருப்பினும், பொதுவாகப் பெண் களின் திருமண வயது சுமார் 20 ஆகக் கருதப்படுகின்றது. மலையகத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் பெண்களின் திருமண வயது குறைவாக இருப்பதற்கு அவர்கள் கல்வி கற்கும் காலம் குறுகியதாயிருத்தல், தாம் சேர்ந்து வாழும் சமூகம், சுற்றத் தினரின் நிலை, பொருளாதார ரீதியில் பெரிய குடும்பத்தைப் பராமரிக்கக்கூடிய நிலையில் பெற்றோர் காணப்படாமை, சீதன வழக்குமுறை ஆழமாக வேரூன்றாமை போன்றவற்றைக் காரணி களாகக் கூறலாம்.

இந்தியப் பெண்கள் குறைந்த வயதில் திருமணம் செய்து கொள்வதற்கு, சமூக பொருளாதார நிலைகளும் காரணமா கின்றன. இந்தியத் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புக்கள் மிக நெருக்கமாகவுள்ளமை, கல்வியறிவுக் குறைவு, தொடர்பு சாதனங் கள் சென்று சேர்வதில் உள்ள சிக்கல் நிலை குறிப்பாகப் பாலுணர்வு பற்றிய அறிவும், கல்வியும் கற்றலினூடாக அவர்களைச் சென்றடை வதில் பல்வேறு வழிகளில் தடைப்படல் போன்றவை, திருமண வயதினைக் குறைத்துள்ளன.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. இலங்கைத் தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரையில் கல்விசார் தொழில் நிலையே அதிகமாகவும், தோட்டத் தொழிலாளர் மத்தியில் உடல் உழைப்பு நிலையே பெரிதாகவும் காணப்படுகின்றன. கல்வியிலும் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

பொதுவாக ஆண்களைவிட பெண்கள் சமய நம்பிக்கை, சமய அனுட்டானங்கள், சமய விழாக்கள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தாய்நாடு பற்றியநினைவுகள்

திராவிடர் யார்; அவர்களின் தோற்ற இடம் எங்கே; ஈழத்தின் மூதாதையர் யார்; ஈழத் தமிழரின் தாயகம் எது என்ற வினாக்கள் இன்றும் சர்ச்சைக்குரிய நிலையிலேயே உள்ளன. இந்நிலையில் ஈழத்தமிழரின் ''தாய்நாடு'' என்ற கோட்பாடு கலாசார அடிப் படையில் மிகவும் அர்த்தமுள்ள தொடராகக் காணப்படுகின்றது.

ஈழத்தமிழர் மத்தியில் பண்பாட்டடிப்படையில் தமிழகத்தோடுள்ள தொடர்பானது "தாய் நாடு" என்ற அடிப்படையில் மிக இறுக்கம்பெற்றுக் காணப்படுகின்றது. ஈழத் தமிழர் தமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் அடிப்படையிலும், அவர்களுக்கு ஏற்படக்கூடிய சமூக அரசியல் அழிவுகளை எதிர்த்து உரிமைக்குரல் கொடுக்கும் அடிப்படையிலும், தமிழ்நாட்டைத் (இந்தியாவை) தமது கலாசாரத் தாயகமாக—பாதுகாவலனாகக் கருதிச் செயற்படும் தீவிரப் போக்கையும் உணர முடிகிறது.

1956ஆம் ஆண்டிலிருந்து ஈழத்திலிடம்பெற்ற அரசியல் கலாசார நடவடிக்கைகளின் தாக்கங்கள் தமிழ் மக்களைப் பாதித்தபோது, அவர்களுக்காகக் கலாசாரப் பாதுகாப்புக் குரல் எழுப்பும் தாய்நாடு தமிழகமே என்ற அசையாத நம்பிக்கை ஈழத் தமிழ் மக்களிடம் வேரூன்றிக் காணப்படுகிறது. அன்றியும் கடந்த காலங்களில் கலாசார இனப் பாதுகாப்புத் தொடர்பான இந்திய நாட்டு நடவடிக்கைகளும் "தாய்நாடு" என்ற நினைவுகளை வலுப்படுத்தி அர்த்தமுள்ளதாக்கி வருகின்றன. இந்திராகாந்தி அவர்களின் இழப்புத்துயரை ஈழத்தமிழ் மக்கள் எதிர் நோக்கிய போது, "தாய்நாடு" பற்றிய நினைவுகளும் உணர்வுகளும் எத்தகு ஆழமும் அர்த்தமும் பெற்றுள்ளன என்பது பெறப்படுகின்றது.

ஈழத்தில் தமிழர் அறிவு—தமிழ்க்கல்வி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்ற பெருமை ஈழத்தமிழ் அறிஞராகிய சுவாமி விபுலானந்தருக்கே உரியதாகும். தமிழுக்கும், சைவத்திற்கும் அருந்தொண்டாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அத்தகு ஈழத்தமிழரது அறிவுப் புலத்தைத் தமிழகத்து அறிஞர்கள் பாராட்டி "நாவலர்" என்ற பட்டமளித்துக் கௌரவித்தமை ஈண்டு சுட்டத் தக்கது. ஈழத்தமிழ் அறிஞர் வரிசையில் சி. வை. தாமோதரம்பிள்ளை, திருநெல்வேலி ஞானப் பிரகாச சுவாமிகள், வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை முதல் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க. கைலாசபதி ஈறாகவுள்ள தமிழறிஞர் பாரம்பரியமும் ஈண்டு நினைவு கொள்ளப் படவேண்டியதாகும்.

அறிவியல் துறையில் கணிதப் பேராசானாகத் திகழ்ந்து, எலிசபெத் மகாராணியாருக்கே கணிதம் போதிக்கும் பெருமை பெற்றிருந்த திரு. சி. சுந்தரலிங்கம், மருத்துவத்துறையில் பெரும் பேரரசனாகத் திகழ்ந்த பேராசிரியர் அ. சின்னத்தம்பி, சட்டத் துறையில் பெரும் புகழ்தேடித் தந்தவர்களான சர். பொன். இராம நாதன், ஜி ஜி. பொன்னம்பலம், செனட்டர் நடேசன், பேராசிரியர் நடராசா முதலியோரும் குறிப்பிடத்தக்கோராவர்.

வட இலங்கையில் ஆரியப் பேரரசர்களின் ஆட்சி நடைபெற்ற காலத்தில் (கி. பி. 1251-1620) நல்லூரில் 4ஆம் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. நாடெங்கணும் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் குருகுலப் பாரம் பரியக் கல்வி நடைபெற்றிருக்கின்றது. ஆறுமுகநாவலர் காலத்தில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டன. இடைக்காலத்தில் ஆங்கிலமொழிக் கல்வி உச்சநிலையை அடைந்தது. 1952இல் தாய் மொழி பயிற்று மொழியாக ஆக்கப்பட்டமையைத் தொடர்ந்து, படிப்படியாகப் பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை தமிழில் கற்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. 1982இல் எடுக்கப் பட்ட மதிப்பீட்டின்படி, இலங்கையில் 2573 தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் உள்ளன.

1942இல் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது முதலாகத் தமிழ்மொழியும் ஒரு பாடமாகப் போதிக்கப் படலாயிற்று. 1960இலிருந்து தமிழ் பயிற்று மொழியாகப் பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், 1967லிருந்தே மருத்துவம், அறிவியல் முதலிய பாடங்களும் தமிழில் போதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ்க் கல்வியை மையப்படுத்தி 1974இல் யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகம் நிறுவப்பட்டது. அஃது 1978இலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டுத் தமிழ் கல்விக்குச் சேவையாற்றி வருகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்க் கல்வி நடைபெற்று வருகின்றது.[10]

---

10. இது பற்றிய மேலதிக விவரங்களைப் பின்வரும் கட்டுரையிற் காண்க. பாலசுந்தரம், இ. "ஈழத்தில் தமிழ்க் கல்வி", உலகத் தமிழ்க் கல்வி இயக்கம் தொடக்கவிழாச் சிறப்பு மலர், தமிழ்நாடு, 1985, பக். 82-92.

தமிழகத்தோடு கொள்ளவிரும்பும் தொடர்பு

இந்தியாவின் அயல் நாடாகிய இலங்கை, சகல துறைகளிலும் நட்புரிமையுடன் இயங்கவே விரும்புகின்றது. அது போன்றே, ஈழத்தமிழரின் கலாசாரத் தாயகமாகிய தமிழகத்தோடு ஈழத் தமிழர் சகலதுறைகளிலும் நாட்டம் கொண்டவர்களாக இருந்து வருகின்றனர். குறிப்பாக அண்மைக் காலங்களில் தமிழர் ஈழத்துப் பேரினவாதிகளால் அழிக்கப்பட்டும், தாக்கப்பட்டும் இன்னல் களுக்குட்பட்ட வேளைகளில் அரசியல் அகதிகளாகப் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றமையை ஈண்டு சுட்டிக் காட்டலாம். தமக்குப் பாது காப்பைத் தமிழகம் தரும் என்ற எண்ணக்கரு ஈழத்தமிழ் மக்களிடம் பூதாகாரமாக நிலை கொண்டுள்ளது.

ஈழத்தமிழரது பண்பாட்டு வெளிப்பாடுகளைத் தமிழகத்தி னூடாகச் செய்து கொள்வதில் தீவிர அக்கறை எடுக்கப்பட்டு வரு கின்றது. இவ்வகையில், ஈழத்தவர் பலர்தம் நூல்களைத்தமிழகத்தில் வெளியிட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். இசை, நடனம் முதலாம் நுண்கலைத்துறையின் உயர் படிப்பின் களம் தமிழகமே என்ற நிலைப்பாடு இங்கு வலுப்பெற்றுள்ளது. சித்த மருத்துவக் கல்வி தற்போது இங்கு வளர்ச்சிபெற்று வருகின்றது. அதன் உயர் கல்விக்கும் ஆராய்ச்சி நெறிகளுக்கும் பாளையங்கோட்டை, பழனி முதலான தமிழக அறிவியல் நிலையங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெறும் வாய்ப்பினை இழந்தோர் தமது உயர்கல்வியைத் தொடர் வதற்குத் தமிழகக் கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் நாடிச் செல்கின்றபோக்கு கடந்த சில ஆண்டுகளாகத் தீவிரம் பெற்றுள்ளமை விதந்துகூறப்படவேண்டிய அம்சமாகும்.

சமய ரீதியான வாழ்க்கையில் தமிழகத்து நடைமுறைகளைத் தொடர்ந்து பேணவேண்டும் என்ற மனப்போக்கும் நிலை பெற்றுள்ளது. ஈழத்துப் பிராமணர்களின் திருமணங்கள் தமிழகத்துப் பிராமணக் குடும்பங்களுடன் இன்றும் நடைபெற்று வருகின்றன. ஈழத்தில் நடைபெறும் கோயிற் கும்பாபிஷேகங் களுக்குத் தமிழகத்திலிருந்து குருக்கள்மாரை அழைக்கும் பாங்கு இன்றும் உண்டு, கோயில்களுக்குரிய மூலவிக்கிரகங்கள் பெரும் பாலும் தமிழகத்தில் இருந்தே கொண்டுவரப்படுகின்றன.

கோயில் நடைமுறைகள், வழிபாட்டுமுறைகள், சமய நம்பிக்கைகள், சமய ஒழுக்கலாறுகளும் தமிழகத்தோடு தொடர்பு கொண்டன வாகவே காணப்படுகின்றன.

கலைத்துறை சார்ந்த பிரபல பாடகர்கள், நடிகர்கள் முதலியோரை ஈழத்துச் சுவைஞர்கள் பெரிதும் வரவேற்கிறார்கள்; அவர்களைப் போற்றுகின்றார்கள். ஈழத் தமிழருக்குரிய தமிழ்த் திரைப்படங்களும் தமிழகத்திலிருந்தே வரவழைக்கப்படுகின்றன.

தமிழகத்தோடு அனைத்துத் துறைகளிலும் தொடர்பு கொண் டிருக்கவேண்டும் என்ற மனப்போக்கும் தேவையும் இருப்பது நோக்கத்தக்கதாகும்.

5. யப்பான்

மனோன்மணி சண்முகதாஸ்

யப்பானில் சுமார் 200 தமிழர் இன்று வாழ்கின்றனர் எனினும் அவரைக் குடியேறியவர் எனக் கூற இயலாது; ஏனெனில் யப்பானில் நிரந்தரமாகத் தமிழரோ பிற நாட்டினரோ வாழும் சூழல் இல்லை. இரண்டாம் உலகப்போருக்குப்பின், இழந்த வளத்தைக் கூட்டுறவினால் மீண்டும் பெற்று, தொழில்நுட்பப் பொருளாதார நிலைக்கு யப்பான் மாறிய போது, பிறநாட்டவரும் வந்து வாழும் வாய்ப்பேற்பட்டதில் தமிழரும் அமைகின்றனர். பயிற்சி, கல்வி போன்றவற்றிற்கே பெரும் பான்மை தமிழர் வந்து செல்கின்றனர். நிரந்தரத் தொழில் வாய்ப்புப் பெற்ற தமிழர் ஒரு சிலர் 15 ஆண்டுகளாக இங்கு வாழ்கின்றனர். தமிழ்க் குழந்தைகளின் தமிழறிவு வளர்வதற்கு இங்கு வாய்ப்பில்லை. தமிழ்ப் பழக்கவழக்கங்கள், பண்பாடு, வழிபாடு இயன்றவளவு போற்றப் படுகின்றன.

குறிப்பிட்ட ஒரு மொழியினைப் பேசும் மக்கள் அம்மொழியின் பெயரால் அழைக்கப் பெறுவது உலகவழக்கு. அந்த வகையில் தமிழ்மொழியைப் பேசுகின்ற மக்கள் தமிழர் என்ற பெயருடன் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். உலகநாடுகளுள் பொருள் வளம் படைத்த நாடான யப்பானிய நாட்டிலும் தமிழர் வாழ்ந்து வருகின்றனர். யப்பான் நாடு தீவாக இருப்பதால், அங்கு வாழும் மக்கள் தம் மொழியையும் பண்பாட்டையும் நீண்ட காலமாகப் பேணி வந்துள்ளனர். யப்பானிலே வாழுகின்ற தமிழரை ஏனைய நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது மிகவும் குறைந்தவராகவேயுள்ளனர். விரல்விட்டு எண்ணக் கூடிய தொகையினர் என்றால் மிகையாகாது. ஏறக்குறைய 200 பேர் என்று ஒட்டுமொத்தமாகக் கூறலாம்.

யப்பானில் தமிழர் நிரந்தரமாக வாழக்கூடிய சூழ்நிலைகள் இல்லை. வெகு அண்மைக்காலத்திலேயே தமிழர் இங்கு வந்து வசிக்கத்தொடங்கியுள்ளனர். இரண்டாவது உலகப் போருக்குப் பின் இழந்த நாட்டின் வளத்தை கூட்டுறவினால் யப்பானியர் மீண்டும் சேர்த்துள்ளனர். வேற்றுநாட்டவர் தம் நாட்டிலே குடியேறுவதை யப்பானியர் அவ்வளவாக விரும்பவுமில்லை. அதற்கேற்ற வகையிலே சட்டங்களும் அமைத்திருந்தனர். விவசாயப் பொருளாதார நிலையிலிருந்து தொழில்நுட்பப் பொருளாதார நிலைக்கு யப்பானியநாடு மாறிய போது பிறநாட்டவரும் அங்கு ஓரளவு போய் வாழக்கூடிய சூழல்கள் ஏற்பட்டன. இம்மாற்ற நிலையிலே ஓரிரு தமிழர் தொழில் நுட்பப்பயிற்சிபெற யப்பான் வரமுடிந்தது. குறிப்பாகக் கூட்டுறவு இயக்கப்பயிற்சிக்காகவே அவர்கள் வந்தனர். பயிற்சி முடிந்த பின்னர் சொந்த நாட்டுக்குத் திரும்பிவிட வேண்டும் என்ற யப்பானியரின் திட்டப்படியே அவர்களும் வந்து போயுள்ளனர். அப்பயிற்சிகளும் யப்பானிய மொழியிலேயே நடத்தப்பெற்றமையால் பலர் பங்கு பெற வாய்ப்பின்றியே காணப்பட்டது. ஆங்கிலேயரது ஆட்சியாதிக்க நிலையால் ஆங்கிலம் கற்க வாய்ப்புப்பெற்ற தமிழர் அம் மொழிப்புலமை பெற்று மேலைநாடுகளுக்குச் செல்ல முயன்றனர். சிங்கப்பூர், மலேசியாபோன்ற நாடுகளுக்கும் சென்றனர். எனினும் ஆங்கிலமொழிப் புலமையைக்கொண்டு யப்பானுக்கு வரமுடியவில்லை. அண்மைக்காலத்திலே பலரும் யப்பானுக்கு வரமுயன்று கொண்டிருக்கின்றனர். யப்பானிய அரசும் தனது வெளிநாட்டுக் கொள்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. தற்போது இங்குவாழும் தமிழர்களில், பயிற்சி நிலையிலும், வியாபார நிலையிலும், கல்வி நிலையிலும் பலர் பொருந்தி வாழ்கின்றனர்.

பயிற்சி நிலையில், கைத்தொழில் நுட்பப்பயிற்சி, கூட்டுறவுப் பயிற்சி, தொடர்புச் சாதனப்பயிற்சி என்பனவற்றுக்காகத் தமிழர் யப்பானுக்கு வருகின்றனர். ஆனால் அவ்வாறு வருபவர்கள் அதிக காலம் யப்பானிலே தங்கமுடியாது. அதிகமாகப் போனால் இரண்டு வருடம் மட்டுமே தங்கமுடியும் கல்வி நிலையிலே, பல்கலைக்கழகங்களிலே படிப்பதற்காகத் தமிழ் மாணவர்கள் பலர் அவ்வப்போது வருகை தந்துள்ளனர். பட்டப் படிப்புநிலையைவிட மேற்பட்டப்படிப்புக்காகவே பலர் வந்துள்ளனர். படிப்புக்காக வருபவர்களும் யப்பானிய மொழித்தேர்ச்சி பெற்றாக வேண்டும். தற்போது சில பயிற்சி நெறிகள் ஆங்கிலமொழி மூலம் நடைபெற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அறிவியல், புவியியல், பொருளாதாரம், பொறியியல், வேளாண்மை, மொழிஇலக்கியம், கற்கைநெறி போன்ற பல துறைகளிலே தமிழ் மாணவர்கள் யப்பானிலே மேற்பட்டப் படிப்பினை மேற்கொண்டுள்ளனர். தோக்கியோ, நீகத்தா, சுக்குபா, நாகோயா, ஓசாக்கா, கியோத்தோ, சப்பறோ, கியூசு போன்ற இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில், மேற்பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்திலே எழுதிச் சமர்ப்பிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதால் தமிழர்கள் அங்குவந்து படிக்க முடிகிறது. யப்பானிய கல்வி அமைச்சின் புலமைப்பரிசில் பெற்றே பலரும் வந்து கல்வி கற்கின்றனர். சிலரே தனிப்பட்ட நிறுவனங்களின் புலமைப்பரிசில் பெற்றுக் கற்கின்றனர். தனிப்பட்ட நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க நிறுவனம் யப்பான்நிறுவனமாகும். ஆய்வுநிலையில் ஒப்பீட்டாய்வுக்கென ஓராண்டுப் புலமைப்பரிசில் பெற்று, பல தமிழர் யப்பான் வந்து ஆய்வு செய்துள்ளனர். யப்பானிய மொழியைக் கற்பதற்கும் சில தொழில் நிறுவனங்கள் உதவிசெய்கின்றன. பிரசுர நிறுவனங்கள் இந்தவகையிலே பேருதவி புரிகின்றன.

ஒப்பீட்டாய்வு நிலையிலே சில தமிழர்கள் தமிழ் மொழியை யப்பானிய மொழியுடன் ஒப்பிட்டு ஆய்வுசெய்து வருகின்றனர். கக்சுயின் பல்கலைக்கழக மொழி இலக்கியபீடம் இதில் பெரும் பங்கு வகிக்கின்றது. பேராசிரியர் சுசுமுஓனோ, தமிழ்மொழிக்கும் யப்பானிய மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற கோட்பாட்டை, முன்வைத்து ஆய்வு செய்கிறார். அவரோடு இணைந்து தமிழ்ப்பேராசிரியர்கள் பணி செய்கின்றனர். பேராசிரியர். பொன். கோதண்டராமன், பேராசிரியர். அ. சண்முகதாஸ், பேராசிரியர். அ. சதாசிவம் போன்றவர்கள் சில காலம் யப்பானிலே தங்கியிருந்து ஒப்பாய்வு செய்துள்ளனர். கக்சுயின் பல்கலைக்கழகத்திலே தமிழ் ஆய்வுக்கென தமிழ் ஆய்வாளர் ஒருவரும் உள்ளார். தமிழ் நூலகம் ஒன்றும் உள்ளது. பழந்தமிழ் நூல்கள் பல அங்குச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. யப்பானிலே பழந்தமிழ்நூல்களைப் பார்வையிடக்கூடிய சிறப்பு நூலகமாக அது அமைந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து யப்பானிய தமிழ் ஒப்பிட்டாய்வு நடைபெற்று வருகின்றது. ஆய்வு தொடர்பான கட்டுரை, பேராசிரியர் சுசுமுஓனோவால் திங்கள் தோறும் வெளியிடப்பட்டு வருகின்றது. ''கொக்கு புங்கக்கு கைசக்கு தொகன்சேர்'' என்ற சஞ்சிகையில் கட்டுரை திங்கள் தோறும் வெளிவருகிறது. இருமொழிகளின் ஒலியமைப்பு, பொருள்,

இலக்கண அமைவு என்பன விரிவாக ஆராயப்பட்டு வருகின்றன. அத்துடன், தமிழர்.யப்பானியர் பண்பாட்டு ஒற்றுமைநிலை பற்றிய ஆய்வும் நடைபெறுகிறது. தோக்கியோப் பல்கலைக்கழகத் தென்னிந்திய வரலாற்றியல் பேராசிரியர் நொபொரு கறஷிமாவும் சில தமிழர்கள் உதவியுடன் தமிழ்மொழிபற்றிய கருத்துக்களை யப்பானியரிடையே அறிமுகம் செய்து வருகின்றார். பேராசிரியர் யசுமசா செக்னே தமிழர் நடைமுறைகள் பற்றிய ஆய்வினைச் சிலதமிழர்களின் உதவியுடன் செய்கின்றார். தமிழர்களின் சாதி யமைப்பு, தீட்டுத் துடக்கு போன்றவற்றைப் பற்றி யப்பானிய மொழியிலே கட்டுரைகளும் எழுதியுள்ளார். ஒசாக்காவிலுள்ள தேசியதொல்பொருட் களஞ்சிய சஞ்சிகை இக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தமிழர் நடைமுறைகளையும் மதுரைத் தமிழர் நடைமுறைகளையும் இவர் ஒப்பாய்வு செய்து வருகிறார். இவர், கக்சுயின் பெண்கள் கல்லூரியில் மானிடவியல் பேராசிரியராகப்பணிபுரிகிறார்.

இங்கு வாழும் தமிழர்களது வாழ்க்கை நிலைபற்றிக் குறிப்பிடும் போது சில விசேட அம்சங்களைக் கூறலாம். யப்பானிய மக்களின் மொழிப்பற்றினால் இங்கு வாழும் தமிழர் களும் யப்பானிய மொழியைப் பேசியே அன்றாட வாழ்க்கையை நடத்தவேண்டியுளது. ஆங்கிலமொழியில் உரையாடக்கூடிய யப்பானியர்கள் கூடத் தமது மொழியிலேயே பிறநாட்டவருடன் பேசுவர். எனினும், தமிழ்மொழியினதும் யப்பானிய மொழி யினதும் இலக்கண அமைப்பு ஒற்றுமைப்பட்டிருப்பதால் தமிழர் விரைவில் யப்பானிய மொழியைப் பேசும் வல்லமை பெற்று விடுகின்றனர். பண்பாட்டு நிலையிலும் பல ஒற்றுமையான நடை முறைகள் இருப்பதால் பழகுவதும் எளிதாக உள்ளது. உறவினர், விருந்தினரை வரவேற்றல், ஒருவரைக்காணச் செல்லும்போது கையுறை கொண்டுபோதல், பெரியோரை மதித்தல், குழந்தை களைப் பேணிவளர்த்தல் போன்ற நிலைகளில் தமிழரும் யப்பானி யரும் பெரிதும் ஒற்றுமைப்பட்ட நடைமுறைகளைக் கையாளு கின்றனர். வீட்டினுள் செல்லும் போது காலணிகளைக் கழற்றி விட்டுச் செல்லும் வழக்கம் இன்னமும் யப்பானியரிடையே உள்ளது. உணவுப் பழக்கங்களும் ஒற்றுமைப்பட்டுள்ளன. சோறு முக்கிய உணவாக இருப்பதால் தமிழரும் நம்நாட்டு உணவு வகை களைப் பெறமுடிகிறது. சுத்தமும் கலையுணர்வும் உணவுத் தயாரிப்பிலே இங்கு முக்கிய அம்சமாயுள்ளன. சமையலையும்

கலையெனப் போற்றிப் பயிலும் யப்பானியரது மரபான உணவுத் தயாரிப்புகள் பண்டைத் தமிழர் உணவுத் தயாரிப்புகளோடு பெரிதும் ஒத்துள்ளன. ஊறுகாய்வகை, மீன், இறைச்சி பதனிடல் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. விருந்தோம்பல் பண்பாடும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது தமிழர்களும் யப்பானிய நண்பர் களைத் தமது வீடுகளுக்கு அழைத்து விருந்துகொடுக்கின்றனர். யப்பானியரும் தமிழ் நண்பர்களைத் தமது வீடுகளுக்கு அழைத்து உபசரித்து, அன்புடன் உறவாடுகின்றனர். பல தமிழ் மாணவர்கள் கிராமப்புறங்களிலே வாழும் யப்பானியருடன் இருவாரகாலம் தங்கிவாழும் அநுபவத்தையும் பெறுகின்றனர், கல்வி நிறுவனங்கள் யப்பானிய குடும்பங்களுடன் தங்கிவாழ்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. யப்பானியப் பண்பாட்டின் நிலைக்களனைக் கிராமப்புறங்களிலே தெளிவாகக் காணலாம்.

யப்பானில் வாழும் தமிழர்கள், தீபாவளி, நவராத்திரி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு போன்ற நாட்களை நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாடுகின்றனர். தமிழர் தைப் பொங்கல் நாளும் யப்பானியருடைய மரபான புத்தாண்டு நாளும் ஒரே சமயத்தில் வருவதால் நினைவு கூரலும் இலகுவாயுள்ளது. 'கொசோகற்சு' என்று கொண்டாடப்படும் புத்தாண்டு யப்பானிய கிராமப்புற மக்களிடையே மரபான நிலையிலே இன்னமும் கொண்டாடப்படுகின்றது. விவசாயிகள் புதுவருடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பொங்கற்சோறுசமைத்தல், விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், கலைநிகழ்ச்சிகள் நடத்தல் என்பன முக்கியமாக இடம் பெறும். ஆனால் தமிழர்கள் தமது மரபான விளையாட்டுக்களை நடைமுறைப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இங்கு இல்லை. சில இந்திய நிகழ்ச்சிகளின்போது பரதநாட்டியம், கோலாட்டம், கும்மிபோன்றவற்றை ஏனைய இந்தியர்களுடன் கூட்டாகச் சேர்ந்து ஆட மட்டுமே வாய்ப்பு உண்டு.

உணவு நிலையில் யப்பானிய உணவு விடுதிகளில் தமிழர் கறிவகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுப் பிரபலமாகி வருகின்றன. தமிழர் உணவுகள் தயாரித்து வழங்கும் சிற்றுண்டிச் சாலைகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் யப்பானியர் கூட்டம் நிரம்பி வழியும். தனிப்பட்ட முறையிலும் தமிழ்ப் பெண்கள் யப்பானியப் பெண் களுக்குக் காரமான கறிவகைகளைத் தயாரிக்கும் முறைகளைச்

சொல்லிக் கொடுத்து வருகின்றனர். காரமான உணவுகளின் நன்மை தீமை பற்றி யப்பானியர் ஆராயத் தொடங்கியுள்ளனர். 'கறெ' என்று யப்பானியர் கறியைக் குறிப்பிடுகின்றனர். கறி என்ற பழந்தமிழ்ச் சொல்லுடன் இச் சொல் ஒற்றுமைப்பட்டுள்ளது. தோசை, இட்டிலி, இடியாப்பம், அப்பம், பிட்டு, வடை, முறுக்கு போன்ற தின்பண்டங்களைத் தயாரிக்கும் முறைகளையும் யப்பானியப் பெண்கள் தமிழ்ப் பெண்களிடமிருந்து கற்று வருகின்றனர். நாவுக்குச் சுவை தரும் பண்டங்கள் தமிழர் உணவுகளில் இடம் பெற்றிருப்பதாக யப்பானியப் பெண்கள் கருதுகின்றனர். சீடை, மோதகம், அடை போன்ற தின்பண்டங்கள் தமிழர்—யப்பானியர் பொது தின்பண்டங்களாக அமைந்துள்ளன. விருந்தினர் திரும்பிச் செல்லும்போது இனிமையான உணர்வுடன் செல்லவேண்டும் என்பதற்காகவே பாயசம் முதலிய இனிப்பு வகைகள் இறுதியாகப் பரிமாறப்படுகின்றன என்பது யப்பானியப் பெண்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. தமிழர் அறுசுவை பற்றிய செய்திகள் அவர்களுக்குத் தமிழர் உணவு நிலையின் ஒழுங்குபட்ட நெறியைப் பெரிதும் விளக்குகின்றன. வாழையிலையில் உணவுண்ணல் தமிழர் தனித்துவ நிலையென எண்ணுகின்றனர். கையினால் உணவருந்தல், உண்ணும்போது ஒழுங்காக உண்ணல், கீழேயிருந்து உணவுண்ணல் என்பன தமிழர் பண்பாட்டு நிலையிலே முக்கியமானவை- இரு குச்சியினால் உணவை எடுத்து உண்ணும் பழக்கமுடைய யப்பானியருக்குத் தமிழர் கையினால் உண்பது வியப்பாயுள்ளது. தமிழர் வீடுகளிலும் உணவு விடுதிகளிலும் உண்ணும்போதும் தாமும் கையினாலே உண்ணத் தொடங்கியுள்ளனர். வாழையிலையிலே உணவு பரிமாறும் அலங்காரம் பற்றியும் அறிய ஆசைப்படுகின்றனர். உணவு அலங்காரத்தில் யப்பானியர் மிகவும் தேர்ச்சிபெற்றவர்கள், அதனால், தமிழர் அலங்காரத்திலும் ஆர்வம் காட்டுகின்றனர்.

சமய நிலையில், இந்துக்கள், கிறித்தவர்கள், முஸ்லீம்கள் என மூவகையினராகத் தமிழரைப் பாகுபாடுசெய்யலாம். கிறிஸ்தவர்கள் யப்பானிலுள்ள கிறிஸ்தவர்களின் பிரார்த்தனை மன்றங்களுக்குச் சென்று ஒன்று சேர்ந்து வழிபடுகின்றனர். யப்பானிய மொழியிலே அங்கு நடத்தப்பெறும் சமய விரிவுரைகளிலும் கலந்துகொள்கின்றனர். முஸ்லீம் தமிழர் இஸ்லாமிய நிறுவனத்திற்குச் சென்று வழிபாடு செய்கின்றனர். பிறநாட்டு முஸ்லீம்களும் இணைந்து அங்கு வழிபாடு செய்வதால், அவர்கள் சமயநிலை ஒழுங்குபட

உள்ளது என்று கூறலாம். நோன்புப் பெருநாட்களையும் சமயவிதி முறைப்படி அனுட்டிப்பதற்கும் அவர்களுக்கு வாய்ப்புண்டு. தமிழர் கிறித்துவின் பிறப்பு நாளைத் தனிப்பட்ட நிலையில் எல்லோரும் ஒன்றுகூடித் தமிழிலே பிரார்த்தனை செய்யும் வழக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளனர். சத்தியசாயிபாபா பிரார்த்தனை மன்றம் ஒன்றும் யப்பானில் உண்டு. அங்கே ஆர்வமுள்ள தமிழர்கள் சென்று ஏனைய இந்திய மக்களுடன் சேர்ந்து கூட்டுப்பிரார்த்தனை செய்கின்றனர். பழங்காலத்தில் யப்பானியரால் வழிபடப்பட்ட விநாயகர் கோயில் ஒன்றுண்டு. அங்கு இந்துக்கள் சிலர் போய் வழிபடுகின்றனர். ஏனையோர் யப்பானியர் வணங்கும் சிந்தோ கோயில்களுக்குச் சென்று வழிபடுகின்றனர். சிந்தோ கோயில்களின் அமைப்பும் வழிபாட்டு நடைமுறைகளும் பெரிதும் இந்துக் கோயில்களைப் போன்றமைந்துள்ளன. காணிக்கை கொடுத்தல், மலர், நீர் நிவேதித்தல், நினைத்த காரியம் நிறைவேற துணியில் பணம் முடிந்துவைத்தல், நேர்த்திக் கடன் வைத்தல் போன்ற நடைமுறைகளை யப்பானிய மக்களும் பின்பற்றி வருகின்றனர். அம்மன் வழிபாடு யப்பானிலும் பிரபலமடைந்துள்ளது. சிந்தோ கோயில்களிலே தலவிருட்சங்களும் மக்களால் வழிபடப்படுகின்றன. கோயில் அலங்காரம், திருவிழாக்கள், சூழல் என்பனவும் தமிழருக்குத் தாய்நாட்டு வழிபாட்டுச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. விரைவில் தமக்கென ஒரு கோயிலை அமைக்கத் தமிழர் திட்டமிட்டு வருகின்றனர்.

தமிழ்க் குழந்தைகளின் தமிழறிவு வளர்வதற்கு இங்கு வாய்ப்பில்லை. தமிழர்களின் குழந்தைகள், ஆங்கில மொழி மூலமே கல்வி கற்கின்றனர். பலகுழந்தைகள் தமிழ்மொழியைச் சரியாகப் பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ முடியாதவர்களாய் இருக்கின்றனர். யப்பானிய மொழியைத் திறம்படப் பேசக்கூடிய குழந்தைகள் தமிழைப் பேசமுடியாதவர்களாக இருக்கின்றனர். பெற்றோரும் இவ்விடயத்தில் சற்றுக் கவனக்குறைவாகவே உள்ளனர். தாய்நாடு சென்ற பின்னர் கற்றுக் கொள்ளலாம் என்ற மனோபாவமே எல்லோரிடத்தும் வளர்ந்துள்ளது. வீடுகளிலே தமிழில் உரையாடுகின்ற வழக்கமும் குறைந்து வருகின்றது. எனினும் தமிழ்க் குழந்தைகள் யப்பானிய மொழிப் பேச்சு, பாட்டிசைப்பு போன்ற போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெற்றுப் பெற்றோருக்குப் பெருமை தேடிக்கொடுக்கின்றனர்.

தொழில் நிலையிலே நிரந்தர தொழில் வாய்ப்புப் பெற்ற தமிழர் என்று ஒருசிலரேயுளர். அவர்களும் 15 ஆண்டுக்குட்பட்ட

கால அளவிலேயே யப்பானில் வாழ்ந்துவருகின்றனர். தொலைக் காட்சி நிறுவனம், சர்வதேச தொழில் நிறுவனம், ஐக்கியநாடுகள் பல்கலைக்கழக நிறுவனம் போன்றவற்றில் பணிபுரிவதால் அவர் களால் நீண்டகாலம் யப்பானில் வாழமுடிகிறது. தொலைக் காட்சியில் ஆங்கில உரையாடல் நடத்துகின்ற தமிழர் ஒருவர் யப்பானியரிடையே பெரிதும் பிரபலமாக விளங்குகின்றார். தனிப்பட்ட வியாபார நிறுவனங்களை நடத்துபவர்களில் சிலர் பொருளாதார வளம் பெற்று வாழ்கின்றனர். தொழில்நிலையிலே யப்பானில் நீடித்த வாழ்வு நடத்தச் சிலர் யப்பானியப் பெண்களை மணஞ்செய்து கொண்டுள்ளனர். அந்த மனைவியர் தமிழ்மொழி பேசிப் பழகுகின்றனர். ஆனால் அவர்களுடைய குழந்தைகள் யப்பானிய மொழியையே பேசுகின்றனர். ஏற்றுமதி இறக்குமதி வியாபார நிலையில் தமிழர் ஈடுபட்டிருப்பதால் தாய்நாட்டுப் பொருட்கள் சிலவற்றை இங்கு அறிமுகம் செய்ய வாய்ப்புண்டு.

தமிழ்ப் பெண்களின் நிலைபற்றிக் குறிப்பிடும்போது, சில முக்கிய அம்சங்களைக் கூறலாம். அவர்களது தமிழ்க்கோலம் யப்பானிய மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. தோற்றத்துக்குத் தனிப்பட்ட மதிப்பும் மரியாதையும் செய்கின்றனர். குங்குமப் பொட்டையும், புடைவையையும் கண்டால் ஒதுங்கி வழிவிடு கிறார்கள். யப்பானியப் பெண்களும் இப்போது பொதுநிகழ்ச்சி களில் பொட்டும் புடைவையும் அணிந்துபோகத் தொடங்கி விட்டனர். புடைவையணியும் பயிற்சிவகுப்புகள் தமிழ்ப்பெண் களால் நடத்தப்படுகின்றன. கோலம் போடுதலிலும் யப்பானியப் பெண்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர். மரபான ஆடையான கிமொனொவை விடப் புடைவை கட்டுவது அவர்களுக்கு விருப்பமாக உள்ளது. தொலைக்காட்சியிலும் புடைவை அணிதல் பற்றிய நிகழ்ச்சிகள் அடிக்கடி இடம் பெறுகின்றன. யப்பானிய மொழியைக் கற்பதில் தமிழ்ப் பெண்கள் பெரிதும் ஆர்வமுடை யோராய் உள்ளனர். மலர் அலங்காரம், சமையல் முறை என்ப வற்றையும் யப்பானியப் பெண்களிடமிருந்து கற்றுவருகின்றனர். தமிழ்ப் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் இங்குக் குறைவாக இருப்ப தால் ஓய்வு நேரத்தைக் கழிக்க யப்பானியர் மரபுக் கலைகளைக் கற்க முன்வந்துள்ளனர். கணவனின் தேவைகளைக் கவனித்து, குடும்பத்தைத் திறம்பட நடத்திச் செல்லும் அவர்களின் மன உணர்வுகள் தமிழ்ப் பெண்களின் மனவுணர்வுகளோடு பெரிதும் ஒத்துள்ளன. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் இரு இனப்பெண்களுக்கும் நல்ல கவசங்களாக அமைந்

திருப்பது நடைமுறையிலே காணக்கூடியதாகவுள்ளது. தாய்மை நிலையிலும், மனைவியின் கடமையிலும் பெண்மையின் தனிச் சிறப்பைத் தமிழ்ப் பெண்களும் யப்பானியப் பெண்களும் இன்னமும் பேணிவருகின்றனர்.

தாய் நாட்டு உணர்வைப் பொறுத்தவரையில் யப்பானில் வாழும் தமிழர் தாய்நாடே சிறந்தது என்ற உணர்வு மேலோங்கப் பெற்றவராயுள்ளனர். யப்பானிய நாட்டின் காலநிலையும் வாழ்க்கை முறையும், மொழியும் தமிழருக்குத் தாய்நாட்டுணர்வை ஏற்படுத்துவதாயுள்ளன. எப்போதும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். செய்யும் தொழிலே தெய்வம் என்றிருக்கவேண்டும். உண்டபின் உறங்கல் என்ற பேச்சுக்கிடமில்லை. மழையும், பனியும், குளிரும், வெயிலும் செய்யும் பணிகளைத் தடைப்படுத்துவன அல்ல என்பதே யப்பானியர் வாழ்க்கை நடைமுறையாகவுள்ளது. வேலை வேலை யென்று மாளும் யப்பானியர்களோடு சரிநிகராக வேலை செய்ய தமிழரால் முடியவில்லை. பொழுதுபோக்கு நிலையிலும் தமிழருக்கு வசதிகள் குறைவாகவே உள்ளன. நட்புநிலையிலே ஒன்றுகூடி ஏதாவது செய்யவாம். அதுவும் தோக்கியோவுக்கு வெளியே வாழ்கின்ற தமிழர் ஒன்று சேர்வது அவ்வளவு எளிதல்ல; போக்குவரவு வசதியிருந்தபோதும் பொருளாதாரம் இடம் கொடுப்பதில்லை. யப்பானிய வீடுகள் சிறிய வீடுகளாக இருப்பதால் பலர் ஓரிடத்தில் சேர்வதும் எளிதல்ல; யப்பானிலேயுள்ள பொருளாதாரச் செழுமை தாய்நாட்டிலே இல்லாமையால், சிலர் திரும்பிப் போகவும் சற்றுத் தயங்குகின்றனர். தாய்நாட்டைவிட மேலைநாடுகளுக்குப் போகவே முயற்சி செய்கின்றனர். இளந் தமிழரிடையே இவ்வெண்ணமே வலுவடைந்து வருகின்றது. புலமைப்பரிசில் பெற்று வந்தவர் அந்நிலையை நீடித்து வாழ எண்ணுகின்றனர். திரைகடல் ஓடியும் திரவியந்தேடு என்று பல தமிழர் நாடுநாடாகச் செல்வதும் மரபாகிவிட்டது.

மொழிப்பற்றும் தன்னாட்டுணர்வும் மிக்க யப்பானியரிடையே வாழ்ந்தபோதும் தமிழர் மனோபாவம் மாறுவதாயில்லை. தமிழன் என்றொரு இனம், தனியான குணத்துடன் பாரெல்லாம் பரந்து வாழ்கின்றது. அந்நியநாட்டிலே, தமிழன் என்று சொல்லிவாழும் வரையிலே அவனைத் தமிழுலகம் அறியும். தமிழை அவன் மறந் தால், தமிழன் என்ற அவன் பெயரும் மறந்துவிடக்கூடும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற விரிந்த மனப்பாங்கை மெய்ப்பித்து எங்கும் பரந்துவாழும் தமிழர், சென்ற இடமெல்லாம் தமிழ்மொழி யின் சிறப்பைப் பரப்பின் நன்று அன்றோ.

6. ரீயூனியன்

வி. குமாரசாமி

1848-1885 காலப்பகுதியில் தமிழகக் காரைக்கால், புதுச்சேரிப் பகுதிகளிலிருந்து, ரீயூனியனில் கரும்புத் தோட்டம், சர்க்கரை ஆலை ஆகியவற்றில் வேலை செய்ய ஒப்பந்தக் கூலிகளாகச் சென்ற தமிழரின் வழித் தோன்றல்களே இன்றைய இருலட்ச ரீயூனியன் தமிழர். இங்குச் சாதிகள் இல்லை. சமயக் காழ்ப்புணர்ச்சி இல்லை, வறுமை இல்லை. அனைவரும் பிரஞ்சுக் குடியரசின் மக்கள்; எல்லோரும் சமம். இன்றைய தமிழர் கல்வியிலும் உயரலுவலிலும் மேலோங்கி அமைகின்றனர், அண்மையில் மட்டுமே சில உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் விருப்பப் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. சமயச் சடங்குகள் பல காணப்பட்டபோதும், காதுகுத்தல் அமையவில்லை. கோயில் வழிபாடும் கிராம தேவதை வணக்கமாக அமைவது மிகுதி.

'திரை கடலோடியும் திரவியம் தேடு'

என்பது தமிழ் நாட்டுப் பழமொழி.

முற்காலத்தில் சொந்த வியாபாரத்தின் பொருட்டும் வேறு பல்வகை வேலைகளின் பொருட்டும் தங்கள் தாய்நாட்டை விட்டுத் தமிழர்கள் கடல் கடந்து சென்றனர். அப்படிச் சென்றவர்களில் பலர் அவ்வவ்விடங்களிலேயே தங்கி விட்டனர்.

19வது நூற்றாண்டின் பிற்பகுதியில் அதாவது 1848 முதல் 1885 வரை தமிழ் நாட்டிலிருந்து அதிலும் குறிப்பாகக் காரைக்கால், புதுச்சேரி சுற்று வட்டாரங்களிலிருந்து மிகப் பெருவாரியாகப் புறப்பட்டு, கரும்புத்தோட்டங்களிலும், சர்க்கரை ஆலைகளிலும் வேலை செய்ய ஒப்பந்தக் கூலியாட்களாகப் பதிவு செய்து கொண்டு ரீயூனியன் வந்து சேர்ந்தவர்களின் வழித்தோன்றல்களே இன்றைய ரீயூனியன் வாழ் தமிழர்கள்.

மக்கள் தொகை

இன்று ரீயுனியனின் மொத்த மக்கள் தொகை சுமார் ஐந்தரை இலட்சம். இதில் இரண்டு லட்சம் பேர் தமிழர்கள்.

இத்தீவு ஃபிரான்ஸ் நாட்டின் கடல்கடந்த ஓர் அங்க நாடு இந்தியப் பெருங்கடலில் மோரீசியசு நாட்டிற்குத் தென்மேற்கில் இருநூறு கிலோ மீட்டர் தூரத்தில் இடம் பெற்றுள்ளது. இதன் பரப்பளவு சுமார் 2500 சதுர கி.மீ. இத்தீவு முப்பதுலட்சம் ஆண்டு கட்கு முன் கடலில் வெடித்து உண்டான ஒரு பெரிய எரிமலை கக்கிய குழம்பால் உருவானது. எங்குப் பார்த்தாலும் மலைகளும் ஆறுகளும் பல்வகைத் தாவர இனங்களுமாய் இத்தீவு கண்ணுக்கு இனிய காட்சி நல்குகின்றது.

இது மண்வளமும், மழைவளமும் மிக்கது. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் கற்பித்துப் பாராட்டிய திணை மயக்கம் இங்குக் கண் முன்னே காணக்கிடக்கின்றது. இங்கே கோடையும், குளிருமாகிய இரண்டு பருவங்களே உண்டு. அதிகக் குளிரும், அதிக வெப்பமும் இல்லாத மிதமான தட்பவெப்ப நிலையே என்றும் நிலவுவதாலும் சுற்றிலும் கடல் சூழ்ந்திருப்பதாலும், மலைகளிலிருந்து பல்வகை மூலிகைகளின் மணம் எப்போதும் வீசுவதாலும், ஆங்காங்கே தாதுப்பொருட்கள் கலந்த நீரூற்றுக்கள் சுரந்து பாய்வதாலும் இந்தத் தீவானது மக்களின் நலவாழ்வுக்கு இயற்கைத் தாய் அமைத்துக் கொடுத்த 'சுகாதார நிலையம்' என்று போற்றப் படுகிறது.

இத்தீவு கி.பி. 1520இல் போர்த்துக்கீசிய மாலுமியால் கண்டு பிடிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது, பிறகு ஆங்கிலேயர் கையிலும், பிரெஞ்சுக்காரர் கையிலும் சிற்சில காலம் மாறிமாறி யிருந்து கடைசியாக 1816இலிருந்து பிரெஞ்சுக்காரர் கையில் நிரந்தரமாகத் தங்கிவிட்டது.

1946 வரையில் பிரெஞ்சுக் காலனியாக இருந்தவந்த இத்தீவு 1947ல் ''பிரெஞ்சு நாட்டின் கடல் கடந்த அங்கநாடு'' என்று சட்ட பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்றுமுதல் பிரான்ஸ் நாட்டுக் குடிமக்களுக்கு என்னென்ன குடியுரிமை உண்டோ அத்தனையுரிமைகளையும் இங்குள்ளோர் யாவரும் பெற்றுப் பிரெஞ்சுக்காரர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இங்கு வெள்ளையினக் கிரியோல், தமிழர், ஆப்பிரிக்கநாட்டுக் காப்பிரிகள், மலகாஷ், கொமோர் தீவுகளின் மக்கள், சீனர்கள், வியாபாரம் நிமித்தம் கடைசியாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வந்த

இந்திய குஜராத்தி முஸ்லீம்கள் ஆகிய பல இனத்தவரும் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள்.

இங்குச் சாதிகள் இல்லை. சமயக் காழ்ப்புணர்ச்சிகள் இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெள்ளைக்கார முதலாளிகள் ஆப்பிரிக்காவின் காப்பிரி மக்களையும், மடகாஸ்கரின் பழங்குடி மக்களையும் அடிமைகளாகக் கொண்டு வந்து, இங்குக் கரும்பு, சோளம், மணிலா முதலியவற்றைப் பயிரிட்டனர். சர்க்கரை ஆலைகளிலும் அவர்களை வேலை வாங்கினார்கள். 1848இல் அடிமை யொழிப்புச் சட்டம் நடைமுறைக்கு வரவே, வேறு வழியின்றித் தங்கள் அடிமைகளை விடுதலை செய்துவிட வேண்டியதாயிற்று. எதிர்பாராத இந்த விளைவினால் இத்தீவின் பொருளாதார முதுகெலும்பே ஒடிந்துபோய் விட்டதாக 1850இல் இங்குப் பிரயாணம் செய்த ஆங்கிலேயர் ஃபிரடரிக் என்பவர் தனது ரீயூனியப் பயண நூலில் குறிப்பிடுகிறார்.

கரும்புச் சாகுபடியை வெகுவாகப் பெருக்கிச் சர்க்கரை விற்பனையில் நல்ல லாபம் சம்பாதிக்கலாம் என்று திட்டமிட்டிருந்த வெள்ளைக்கார முதலாளிகளை இந்த அடிமையொழிப்புச் சட்டம் திக்குமுக்காடச் செய்துவிட்டது. அதனால் உடனே இந்தியாவில் அப்போதிருந்த பிரெஞ்சு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன், காரைக்கால், புதுச்சேரி போன்ற பிரெஞ்சுக் காலனிச் சுற்று வட்டாரங்களிலிருந்து ஆட்களைத் தேடித் திரட்டிக் கொண்டுவந்தனர். அப்போது அவர்கள் வந்தது ஒப்பந்தக் கூலிகளாக. ஆனால் 1828க்கு முன்னமேயே சில இந்தியர்கள் கோவா பக்கத்திலிருந்து (மலையாளக் கரையோரம்) அடிமைகளாகவே வந்திருந்தனர் என்று தெரிகிறது. 1828இல் ஆந்திராவிலிருந்தும் 15 பேர் வந்தனர் என்னும் குறிப்புகள் உள்ளன. இவ்வாறாக 1848க்கு முன் இங்கிருந்த இந்தியர்களின் எண்ணிக்கை, ஆக மொத்தம் 4200 தான். இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்து வந்தவர்களாயிருந்தாலும் அவ்வெல்லாரையுமே வெள்ளைத் துரைமார்கள் தமிழர்கள் என்றே பொதுவாகக் குறிப்பிட்டனர். அதற்குக் காரணம் அந்தக் காலத்தில் காரைக்கால், புதுச்சேரி ஆகிய இரு பிரெஞ்சிந்திய வட்டாரங்களிலிருந்து வந்த தமிழ் ஒப்பந்தக் கூலியாட்களே எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையினர். அவர்களே கரும்புத் தோட்டங்களிலும், சர்க்கரை ஆலைகளிலும் வேலை செய்தனர். அவர்களே முதலாளிகளின் வீடுகளில் சமையல்காரர்களாகவும், மெய்க்காவல்காரர்களாகவும், வேலைகளை மேற்பார்க்கும் மேஸ்திரிகளாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இப்படி எங்கும் தமிழர் மயமாக இருந்து, அவர்களுக்கும், அவர்களின் முதலாளிகளாகிய பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் நிமித்தம் பிறந்ததே கிரியோல் என்னும் கொச்சை மொழி. இம்மொழியில் சொற்கள் பிரெஞ்சுச் சொற்களாகவும், கருத்து வெளியீடு தமிழ் முறையாகவும் இருப்பதால் இந்தக் கிரியோல் அன்றைய தமிழ்மக்களின் படைப்பேயாகும்.

இப்படியாக வந்தவர்களில் மிகச்சிலரே தங்கள் ஒப்பந்தம் முடிந்து தாயகம் திரும்பினர். ஏனையோர் இங்கேயே தங்கி விட்டனர். அதற்கு முக்கிய காரணம், இங்கேயே தொடர்ந்து வசிப்பவர்கள் இந்த நாட்டின் குடிமக்களாவார்கள் என்ற அரசாங்கச் சட்டமும், சாதிய வேறுபாட்டுத் தாழ்வுணர்ச்சியின்றி எல்லோரும் சமமாக வாழும் சமரச வாழ்க்கை முறையும், வேலை நிச்சயமும், கூலி நிச்சயமும் ஆகும்.

கல்வி நிலை

இன்றைய தமிழர்கள் கல்வியில் முதன்மையிடம் வகிக்கிறார்கள். மருத்துவர்கள், சட்ட மேதைகள், பேராசிரியர்கள், பொறியியல் வல்லுநர்கள் என்று எல்லா நிலையிலும் இவர்கள் உயர்ந்து விளங்குகிறார்கள். கல்வித்துறை முதல் மற்றெல்லாத் துறைகளிலும், தமிழர்கள் தங்கள் கல்வித் திறமையால் மேன்மை வகிக்கிறார்கள். இந்தப் பிரெஞ்சுமொழியே பயிற்றுமொழி. இதை யடுத்து ஆங்கிலமும், ஏதாவதொரு ஐரோப்பிய மொழியும் கட்டாயமாகப்படிக்கப் படவேண்டிய மொழிகளாகும். அண்மைக்காலமாகத் தமிழ் மக்கள் அதிகமாக உள்ள கொம்யூன் ஆகிய சேந்தன்துறை (Saint Andre')யிலுள்ள மூன்று உயர்நிலைப் பள்ளிகளிலும் அவற்றுடன் இணைந்து செயல்படும் செயின்ட் பனுவா (Saint Benoit)விலுள்ள ஒரு கல்லூரியிலும் விருப்பப் பாடமாகத் தமிழ் கற்பிக்கப்படுகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. பல்கலைக்கழக நிலையிலும் விருப்பப் பாடமாகத் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. ஆண், பெண் இருபாலாருக்கும் பதினெட்டு வயதுவரை கட்டாயக் கல்வி நடைமுறையில் உள்ளது.

பாலர் பயிற்சிக்கூடம் முதல், மேல்நிலைக் கல்லூரிக் கல்வி வரையில் கல்வி இலவசமே. மாணவர்க்கு மதிய உணவும், போக்கு வரத்து வசதியும் இலவசம். ஊக்கத்தொகையும் குடும்ப வருமானத்திற்கேற்ப அளிக்கப்படுகிறது. அனைத்துவித பட்டப் படிப்பும், மேல்நிலை பட்டப் படிப்பும், தொழில்நுட்பக்கல்வியும் பெறுவதற்குரிய கல்வி நிலையங்கள் இங்கேயே உள்ளன

இவற்றிற்கு மேல்பட்ட கலைத்திறக் கல்விக்கும், அறிவியல் மற்றும் பொறியியல் உயர்நுட்பக் கல்விக்கும், மருத்துவப் படிப்பிற்கும், மேல்நிலைச் சட்டக் கலைத்திறக் கல்விக்கும்தான் பிரான்சுக்குச் செல்லவேண்டும். பட்டப் படிப்புவரை ஆண்டுதோறும் வடிகட்டும் தேர்வுமுறை இங்கில்லை. மாணவர் தம் தரத்திற்கேற்ற தொழில் கற்க அவர்க்குக் கல்வி நிலையத்தால் வழிகாட்டப் படுகின்றது.

பிறவியிலேயே உடல் ஊனமுற்றவர்க்கும், மூளைவளர்ச்சி குன்றியவர்க்கும் உரிய பயிற்சியளிக்கும் கூடங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஒரு வகுப்பில் எந்த நிலையிலும் இருபத்து நான்கு மாணவர்களுக்கு மேல் சேர்க்கப்படுவதில்லை. பயிற்று முறையில் ஒலி, ஒளிப் பொறிகளும் முக்கிய இடம் வகிக்கின்றன.

தொழில் நிலை

தமிழர்கள் அனைத்து தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். கட்டிடக் காண்ட்ராக்ட், சாலைக் காண்ட்ராக்ட், பஸ், லாரி போக்குவரத்து ஆகியவற்றிலும், சிமெண்டு உற்பத்தித் தொழிற் சாலை, கருங்கல் ஜல்லி தயாரிப்புத் தொழிற்சாலை முதலிய வற்றிலும் தமிழர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். முஸ்லீம்களும், சீனர்களும் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பது போல தமிழர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். மக்களுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களை இங்கேயே உற்பத்தி செய்வதைக் காட்டிலும், வெளியிலிருந்து தருவிக்கப்படுவது மிகவும் விலை சகாயமாக அமைவதால், இங்குப் பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்படுவதில் போதிய அக்கறையோ, அவசியமோ இதுகாறும் ஏற்படவில்லை. சர்க்கரை ஆலைகள் மட்டும் நவீனமயமாக்கப் பட்டுப் பெரிய அளவில் நடந்து வருகின்றன. வெட்டிவேர், வன்னிலா, ஜெரானியம் போன்ற வாசனைப் பயிர்த்தொழில் வளர்ச்சிக்கும், கைவினைப் பொருள் உற்பத்திக்கும், பேரளவு தேன் உற்பத்திக்கும், மீன்பிடிப்பிற்கும் அரசாங்கம் பெருமளவில் உதவி புரிகிறது.

வாழ்க்கைத் தரம்

1947இல் இத்தீவு பிரான்ஸின் அங்க நாடாக மாறியதிலிருந்து இங்குள்ளோரின் வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது. பிரான்ஸ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் அத்தனை சலுகைச் சட்டங்களும் இங்கும் அப்படியே நடைமுறைக்கு வருவதால் இதன் சுற்றுவட்டாரங்களிலுள்ள நாடுகளின் வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும் ரீயூனியன் மக்களின் வாழ்க்கைத்தரம்



UNION DES RÉPUBLIQUES SOCIALISTES SOVIÉTIQUES
MONGOLIE
CHINE
CORÉE
JAPON
TURQUIE
IRAQ
IRAN
LIBYE
EGYPTE
TCHAD
SOUDAN
ETHIOPIE
SOMALIE
ZAÏRE
TANZANIE
ANGOLA
MADAGASCAR
MOZAMBIQUE
AFRIQUE DU SUD
INDE
SRI LANKA
VIET NAM
PHILIPPINES
MALAYSIA
INDONÉSIE
AUSTRALIE
NOUVELLE ZÉLANDE
OCÉAN
INDIEN
PACIFIQUE
Tropique du Capricorne
Tropique du Cancer
Monde musulman
Pays musulmans du Sud-Est Asiatique
Autres pays du Sud-Est Asiatique
Amérique latine
Afrique noire

தீமிதி

முருகனுக்குக் காவடி

பன்மடங்கு உயர்ந்து காணப்படுகிறது. இங்குக் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளமே நாலாயிரம் பிராங்க். (சுமார் 7500 ரூபாய்). வேலைசெய்யும் அத்தனைபேரும் காரிவைத்திருக்கின்றனர். உலகிலேயே அதிக விகிதத்தில் கார் விற்பனையாகும் இரண்டாவது இடம் ரீயூனியன்தான்.

இங்கு ஏறக்குறைய எல்லோர் வீடுகளிலும் தொலைக்காட்சி யும், தொலைபேசியும் உண்டு. சுருக்கமாகச் சொன்னால் மக்கள் சகல வசதிகளுடனும் வாழ்கின்றனர். வேலையற்றிருக்கும் படித்த இளைஞர்கள் முதல், தளர்ந்துவிட்ட முதியோர்வரை, குடிமக்க ளுக்கு அரசாங்கம் பலவகையிலும் உதவித்தொகை அளிப்பதால் வறுமையென்பதற்கே இங்கு இடமில்லை.

பழக்க வழக்கங்கள்

உடை : இங்குள்ள தமிழர்கள் பொதுவாக ஐரோப்பிய பாணி யிலேயே உடை அணிகின்றனர். தமிழ்ச் சமயக்கோவில் திருவிழாக் களிலும், தமிழ்ச் சமய திருமணச் சடங்குகளிலும், ஆர்வமுள்ள இளைஞர்களில் சிலர் வேட்டி அணிந்தும், பெண்களில் பலர் புடவை அணிந்தும் தமிழ்நாட்டுக் கலாசாரத்தை வெளிப்படுத்து கின்றனர்.

உணவு : விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர்தாம் அதிலும் இளைஞரில் சிலர்தாம் அண்மைச் சில்லாண்டுகளாக உணவில் சைவமாய் இருக்கின்றனர். மற்றையோர் அனைவரும் அசைவ உணவுப் பழக்க முடையவர்களே. பெரும்பாலான தமிழ்நாட்டுப் பலகாரங்கள் இங்கு மறந்து போய் விட்டன. ரொட்டியும், வெண்ணெயும் காலைச் சிற்றுண்டி. பெரும்பாலும் ஐரோப்பிய நாட்டு உணவுப் பழக்க வழக்கங்களே இங்கு அதிகம் இடம் பெறு கின்றன. கோயில் திருவிழாக்களின் போதும், மதச் சடங்குகள், வீட்டுப் பண்டிகைகளின் போதும் ஓரளவு தமிழ்ச் சமையல் முறை கையாளப்படுகிறது.

வீடு : சிறிய வீடாக இருந்தாலும், அதனைச் சுற்றி அழகிய பூந்தோட்டம் அமைத்துப் பராமரிப்பதிலும், வரவேற்பு அறையினைப் பூஞ்சாடிகளால் அலங்கரிப்பதிலும், வீட்டை எப் பொழுதும் தூய்மையாக வைத்திருப்பதிலும் இவர்கள் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றனர்.

விடுமுறை : வார விடுமுறை நாட்களை, குடும்பத்துடன் இயற்கைக் காட்சிகள் மிகுந்த வெளியிடங்களுக்குச் சென்று, உண்டு, களித்து ஓய்வெடுப்பதன் மூலம் கழிக்கின்றனர்,

சமயச் சடங்குகள்

திருமணம் : இப்போதெல்லாம் பெற்றோர் மணம் பேசுவ தென்பதில்லை. பெண்ணும் பிள்ளையும் சந்தித்துப் பழகிய பிறகு, பெற்றோர்க்கு அறிமுகமாகிப் பின்னரே இருவீட்டினரும் இணைந்து திருமணம் முடித்து வைக்கின்றனர். வரதட்சிணை முறை இங்கில்லை. திருமணச் செலவை இரு வீட்டாரும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். இடைக் காலத்தில் திருமணம், சவ அடக்கம் ஆகிய சடங்குகள் கிறித்துவ முறையில் நடந்தது குறைந்து இப்பொழுதெல்லாம் இந்து சமய முறைப்படி நடப்பது பெருகி வளர்ந்து வருகின்றது.

இதர சடங்குகள் : பிறந்த குழந்தைக்கு உரிய காலத்தில் முடியிறக்கித் தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவது வழக்கமாயுள்ளது. ஆனால், காதுகுத்துதல் வழக்கொழிந்துவிட்டது. இறந்தவர்களைக் கல்லறையில் அடக்கம் செய்வதே பின்பற்றப்படுகின்றது.

தெய்வ வழிபாடு

பொதுவாக இங்குக் கிராம தேவதை வழிபாடே அதிகமாகக் காணப்படுகின்றது. டிசம்பர், ஜனவரி, சூலை மாதங்களில் திரௌபதையம்மன் கோயிலில் தீமிதித் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. பெண்கள் தீக்குழியினைச் சுற்றி வலம் வருவதேயன்றி தீ மிதிப்பதில்லை. மாரியம்மனுக்கு மே, சூன் மாதங்களில் கஞ்சி ஊற்றுத் திருவிழா நடை பெறுகின்றது. காளியம்மனுக்கு டிசம்பர், ஜனவரி, சூலை மாதங்களில் ஆட்டுக்கடா, கோழி முதலியன பலி தந்து விழாக் கொண்டாடுவது வழக்கமாக உள்ளது. இந்த விழாக்கள் பத்து நாட்களுக்குக் குறையாமல் கொண்டாடப் படுகின்றன. பொதுக் கோயில்களேயன்றி, கிராமங்களில் ஒவ்வொரு வீட்டின் தோட்டத்திலும் காளி, மாரி, முனி, வீரன், கருப்பு முதலிய தேவதைகளுக்குச் சிறு கோயில்கள் எழுப்பி மாதந் தோறும் வழிபாடு செய்து வருகின்றனர். இது இந்தியாவில் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்ற சுவாமி அறை பூசையை ஒத்திருக்கின்றது.

நகரத்திலுள்ள சிவசுப்ரமணியர், பெருமாள் ஆகிய தெய்வங் களின் கோயில்களில் ஆண்டுதோறும் பத்து நாள் உற்சவம் நடை பெறுகின்றது. அப்போது ஏராளமான மக்கள் நாள்தோறும் கோவிலுக்கு வந்து வழிபாடுகளில் பங்கேற்கின்றனர். முருகன் கோவிலாக இருந்தால் கடைசி நாளன்று காவடி எடுக்கின்றனர். பெருமாள் கோவிலாக இருந்தால் புரட்டாசி மாதம் முழுவதும்

சனிக்கிழமை தோறும் பெரிய அளவில் விழாவெடுத்துக் கோவிந்தனை வழிபடுகின்றனர். கிருஷ்ண ஜெயந்தியையும் இரவு முழுதும் கண் விழித்து அவனது வரலாற்றினைப் பக்தியுடன் செவி மடுத்து மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். சக்தி கரக ஆட்டங்களும் விமரிசையாக இருக்கும். பக்த கோடிகள் தங்கள் வீடுதோறும் இயன்ற வரிசை கொடுத்து வழிபட்டு மகிழ்வார்கள்.

பண்டிகைகள்

தைப் பொங்கல், தமிழ் வருட பிறப்பு ஆகியன கோவிலில் கொண்டாடப்படுகின்றன. இந்நாட்களில் சூரியனுக்குச் சிறப்பான பூசைகள் நடக்கின்றன. பிரதி வருடமும் சூலை 14, நவம்பர் 11, டிசம்பர் 20 ஆகிய நாட்கள் தேசிய விழா நாட்களாக அரசாங்கத்தாலும், பொது மக்களாலும் மிக விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றன.

தமிழகத்துடன் கொள்ள விரும்பும் தொடர்புகள்

தமிழ் மொழியினை இத் தீவில் இன்னும் பரவலாகக் கற்பித்துப் பரப்ப போதிய அளவு தமிழாசிரியர்களையும், தமிழ் நாட்டிற்கே உரிய நாதஸ்வர, பரதக் கலையினைக் கற்றுக் கொடுக்கும் இசை, நடன ஆசிரியப் பெரு மக்களையும் கொண்ட குழுவினை அனுப்பி வைத்து அக்கலைகளை இயன்ற அளவிற்கு இங்கே பயிற்றுவிப்பதற்குத் தமிழ் நாட்டின் பேருதவியினை இங்குள்ள தமிழர் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

தமிழ் நாட்டுக் கலைகள், கோவில்கள், நகர மற்றும் நாட்டுப்புற வாழ்க்கை முறைகள், விழாக்கள், பண்டிகைகள் ஆகியவற்றைப் பற்றிய செய்திப் படங்களை அனுப்பும்படி வேண்டுகின்றனர்.

ரீயூனியனில் உள்ள இளைஞர்கள் தமிழகம் வந்து கலாச்சார, பண்பாட்டுத் துறைகளில் நேரடி அனுபவம் பெறுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தால் நல்லது.

மேற்கூறிய வேண்டுகோள்களுக்குத் தமிழக அரசு செவி சாய்க்குமானால் ரீயூனியன் வாழ் தமிழ் மக்களின் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது; அத்துடன், தமிழகத்துடன் அவர்கள் கொள்ளும் தொடர்புகளினால் அவர்களின் நினைவுகளிலும் எண்ணங்களிலும் தமிழகம் என்றென்றும் ஊறிக் கிடக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

7. அந்தமான்—நிக்கோபார்

சுப. சுப்பிரமணியன்

350 தீவுக் கூட்டங்களுடன், இந்தியப் பகுதியாக அமையும் அந்தமானில் இன்று நாற்பதாயிரம் தமிழர் உள்ளிட்ட இரண்டரை லட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். கி. பி. 1050இல் சோழன் இதனைக் கைப்பற்றியது முதல் தான் இதன் வரலாறு தொடங்குகிறது. சோழர் பரம்பரையினரே இன்றைய சோம்பன் எனும் இத்தீவின் பழங்குடிகள் என்பர். இன்று தொழில், பதவி காரணமாகத் தமிழர் அந்தமான் - நிக்கோபார் செல்கின்றனர். வணிகத்தில் மிகுந்த தமிழர் ஈடு பட்டுள்ளனர். தொடக்க, மேனிலைப் பள்ளிக் கல்வியில் தமிழ் மொழியும் இடம் பெறுகின்றது. ஆறாயிரம் தமிழ்க் குழந்தைகள் 33 பள்ளிகளில் தாய்மொழி கற்கின்றனர். மக்கள் அமைதியான, நெருக்கடியற்ற, பொருளாதார ஏற்றமுடைய வாழ்வினராக அமை கின்றனர். அந்தமான் முரசு 18 ஆண்டுகளாக இயங்கி வரும் இதழாகும். பல கோயில்கள் உள்ளமையால்சமய வழிபாடும், விழாக் களும்தொடர்கின்றன.

வங்கக் கடலின் தென்கோடியில் சிறிதும் பெரிதுமாக 350 தீவுக் கூட்டங்களைக் கொண்டது அந்தமான்—நிக்கோபார் தீவுகள்.

முன்பெல்லாம் இந்திய நாட்டின் தென்முனை எது என்று கேட்டால் கன்னியாகுமரி என்றுதானே சொல்வோம். இன்று கன்னியாகுமரியையும் கடந்து இந்தியாவின் தெற்கு எல்லை பிக்மிலியன் பாயிண்ட் வரை பரவி இருக்கிறது என்பது திருத்தப் பட்ட செய்தியாகும். பிக்மிலியன் பாயின்ட் அந்தமானின் தென் கோடியில் சர்வதேசக் கப்பல் போக்குவரத்துப் பாதையை ஒட்டி யிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும். பிக்மிலியன் பாயிண்ட்—இப்போது ''இந்திரா முனையென' நடுவணரசால் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்பதும் அறியத் தக்கது.

தீவின் தலைநகர் போர்ட்பிளையரிலிருந்து சென்னை 1191 கடல் மைல் தூரத்திலும், கல்கத்தா 1255 கடல் மைல் தூரத்திலும் இருக்கின்றன. தீவிற்கும் தாயகத்திற்கும் இடையிலான போக்கு வரத்து, கப்பல் வழியாகவும் விமானத்தின் மூலமும் நடைபெற்று வருகிறது.

தீவில் தமிழ் மக்கள் எண்ணிக்கை

அந்தமான்—நிக்கோபார் தீவுகளை "குட்டி இந்தியா" என்றே அழைக்கின்றனர். இங்கே இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநில மக்களும் வாழ்கின்றனர். பல மதத்தினர் இங்கே இணைந்து வாழ்வதால் அந்தச் சிறப்பால் செப்பம் பெறுகின்றது அந்தமான்.

தீவின் மொத்த மக்கள் தொகை இரண்டரை இலட்சமாகும். அதில் தமிழ் பேசும் மக்கள் தொகை நாற்பதாயிரமாகும். ஆனாலும் தீவில் தமிழினம் இரண்டாவது பெரிய இனம் என்பது அறியத் தக்கது. தீவில், தமிழ் மக்கள் வடக்கே மாக்லிபூரிலிருந்து தெற்கே இந்திரா முனை (பிக்மிலியன் பாயிண்ட்) வரையிலான, மக்கள் வாழும் எல்லா தீவிலுமே வாழ்கின்றனர்.

குடியேறிய நோக்கம்

அந்தமான்—நிக்கோபார் தீவுகளுக்குத் தெளிவான வரலாறு கிடையாது. கி. பி. 1050-இல் தன் வலிமைமிகு கடற்படையைச் செலுத்தியவாறு இந்தத் தீவுகளைச் சோழ மன்னன் கைப்பற்றிய வரலாற்றைத் தஞ்சைக் கல்வெட்டுச் செப்புகிறது. அன்று தொடங்கித் தமிழர்களது தீவு வரலாறு தொடங்கியது என்றே சொல்ல வேண்டும்.

சோழ மன்னர்கள் சூட்டிய பெயர்களே இன்றும் இந்தத் தீவு களுக்கு நிலைத்திருக்கின்றன.

அதே நேரத்தில் வரலாற்று ஆசிரியர்கள் ஆயவேண்டிய செய்தி பல உண்டு. அதுதான் சோழ மன்னர்கள் கிழக்காசிய நாடுகளில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியபோது தீவுகளை எப்படி கையாண்டனர்? ஏனெனில் தீவின் பழங்குடி மக்களாகிய ஆறு இனங்களில் "சோம்பன்" என்று சொல்லப்படும் பெரிய அந்தமான் பழங்குடி மக்கள் சோழர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என இங்குள்ள அறிஞர் பலர் கூறுகின்றனர். இது உண்மை யானால் தமிழர்களுக்கும் தீவுகளுக்கும் ஆயிரம் ஆண்டுகள் தொடர்பிருந்திருப்பது தெளிவாகுமல்லவா.

இன்று வாணிகம் செய்ய, தொழில் நடத்தவென தமிழர்கள் அந்தமான்—நிக்கோபார் தீவுகளில் குடியேறி வருகிறார்கள்.

1943-இல் ஜப்பானியர்கள் இந்தத் தீவுகளை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர். 1945 வரை அவர் தம் ஆதிக்கமிருந்தது. ஆனாலும் இந்தத் தீவுகள் இந்தியப் போராளியாகிய நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. முதல் சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது. முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் தமிழராகிய டாக்டர் லோகநாதன் அவர்களே.

தொழில் நிலைகள்

தீவில் முன்பு குடியேறியவர்கள் அரசு ஊழியம் தேடிக் கொண்டவர்கள். இப்போதெல்லாம் பெரும்பாலும் தனியார் துறையில் தினக் கூலிகளாகவே பணியாற்றுகின்றனர். ஆனால் நல்ல ஊதியம் கிடைக்கிறது.

தமிழர்கள் பெரிய பங்கு வகிக்கும் தொழில் நிலை வணிகமாகும். இங்கே எல்லா வணிகத்திலும் ஐம்பது விழுக்காட்டு இடத்தைப் பிடித்திருப்பவர்கள் தமிழர்களே. இரண்டு பெரிய தீக்குச்சி தயாரிக்கும் மர ஆலைகளையும் தமிழர்கள் நடத்தி வருகிறார்கள்.

பழக்க வழக்கங்கள்

தீவில் பல இன மக்களும் வாழ்கிறார்கள் என்பதால் உணவு, உடை பண்பாட்டுப் பழக்க வழக்கங்களில் ஒரு கலப்பு நிலையே நிலவுகிறது. குறிப்பாக வங்க மக்கள் கூடுதலாகப் பயன்படுத்தும் இனிப்பு வகைகள் சந்தையில் குறைவில்லை என்றாலும் தமிழ் மக்களின் இட்லி, தோசை, வடை வகைகளுக்கும் மக்கள் மத்தியில் ஆதரவு சிறப்பு வாய்ந்ததாகும். மேலும் வடநாட்டு மக்கள் பெரிதும் பயன்படுத்தும் கோதுமை உணவு வகைகள் அரிசி உணவோடு சம உணவாக உட்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களும் கலப்பு உணவுகளைப் பயன்படுத்தப் பழக்கப்பட்டு விட்டார்கள்.

உடைகளை எடுத்துக் கொண்டாலும், தத்தமது மாநிலக் கலாச்சார உடைகளை அணிவோர் மிகச் சிலரே. பொதுவாக, "பேண்ட்—சட்டை"களையே பெரிதும் அணிகின்றனர். பேண்ட்—சட்டை ஆடைஅணியைத் தீவின் தேசிய உடை என்று கூடச் சொல்லலாம்.

பெண்கள் பொதுவாக அதுவும் தமிழ் நாட்டுப் பெண்களைப் பொறுத்தவரை, தமிழகத்தில் இருப்பது போல சேலை—பாவாடை வகைகளே இங்கு நடை முறையில் இருக்கின்றன. பிற இனப் பெண்கள் உடையிலும் கலப்படம் தான்.

அத்தோடு தமிழகத்துப் பெண்கள் தலையில் 'பூ' சூடுவது நெற்றியில் மேலும் கீழுமாகத் திருநீறும், குங்குமமும் அணிவது இவர்கள் தமிழ்ப் பெண்கள் என்பதை அடையாளம் காட்டுவதாய் அமைந்துள்ளது. தலையில் பூச்சூடும் மோகம் பிற மாநிலப் பெண்களையும் கவர்ந்து வருகிறது. எனவே சென்னையிலிருந்து வரும் விமானங்களில் இறக்குமதியாகும் பொருள்களில் பூக்களும் முகாமை இடம் பெறுகிறது.

ஆனால், நாள்தோறும் வாசல்களில் சாணம் தெளித்துக் கோலமிடும் பழக்கத்தைத் தமிழகத்துப் பெண்கள் கூட தீவில் செய்வதில்லை. இதற்குக் காரணம் தெரியவில்லை. தீவின் கிராமப் பகுதிகளிலும் இதே நிலைதான். கலைத் துறையிலும் தீவுத் தமிழருக்கு எந்த ஈடுபாடும் கிடையாது.

விழாக்கள் பண்டிகைகள்

தீவில் தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் விழா பொங்கலாகும்; பண்டிகை என்று எடுத்துக் கொண்டால் தீபாவளி தான். இதனைத் தவிர்த்து மிக உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடும் விழாவாகப் பங்குனி உத்திர விழா, கார்த்திகை விரதம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை சமய விழாக்களாகக் கொண்டாடப் பட்டாலும் வேறு விழாக்கள் இலக்கிய விழாக்களாகும். இவை யாவற்றிலும் தமிழ்க் கலை, கலாச்சாரச் சாயலே மேலோங்கி இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

விளையாட்டு என்று எடுத்துக்கொண்டால் தமிழர்கள் பெரும்பாலும் விளையாடுவது கபடி விளையாட்டு என்று தான் சொல்ல வேண்டும். ஏனோ படித்த இளைஞர்கள் கூட வேறு விளையாட்டுகளில் ஆர்வம் செலுத்துவதைக் காண முடியவில்லை.

தாய்நாடு பற்றிய நினைவுகள்

எத்தனைதான் வசதியாக வாழ்ந்தாலும் தமிழர் தம் ஆன்மா இங்கே அமைதி பெறுவதில்லை. தங்கள் தாயகமான தமிழகத்தைப் பற்றியே சிந்திக்கிறார்கள். கற்பனை செய்கிறார்கள். சொத்துக்களை வாங்கினாலும் தமிழகத்தில்தான் வாங்கு

கிறார்கள். தமிழகத்தில் உள்ள தங்கள் உறவுப் பெண்களை இங்கே அழைத்து வந்து திருமணம் செய்து கொள்கின்றனர். ஆண்டிற்கு ஒரு முறையாவது தமிழகம் போகவேண்டும் என்று எண்ணுவோர் பட்டியல் மிக மிகக் கூடுதலாகும். இடை இடையே தத்தமது மாவட்டப் பெருமைகளைப் பேசிக் கொள்வதிலும் குறைவில்லை.

தமிழகத்துச் செய்திகளைக் கேட்டறிவதில் இவர்கள் காட்டும் ஆர்வத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. குறிப்பாகத் தமிழகத்தில் நடக்கும் எந்தச் செயலும் இங்கே உள்ள தமிழர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தமிழகத்து இதழ்களை வாங்கிச் சின்னஞ் சிறிய செய்தியையும் படித்தறிந்து விமரிசிக்கிறார்கள்.

இங்கே பத்திரிக்கைகள் 10 நாளைக்கொரு முறை கப்பல் மூலமும் வாரத்தில் மூன்று நாள் விமானத்தின் மூலமும் வருகின்றன.

தீவுத்தமிழர்களுக்கும் தமிழகத்துத் தமிழ் மக்களுக்கும் இடையில் தொடர்புப் பாலம் அமைப்பவை தமிழ்த்திரைப் படங்களே, இங்குள்ள நான்கு திரையரங்குகளில் இரண்டு தமிழருக்குச் சொந்தமானவை ஆனாலும் எல்லாத் திரை அரங்குகளிலும் 20 விழுக்காடு தமிழ்ப் படங்களே திரையிடப்படுகின்றன. இங்கும் ரசிகர் மன்றங்கள் உண்டு.

கல்வி நிலை

தீவின் பள்ளிகள் பெரும்பாலும் அரசாங்கத்தாலே நடத்தப் படுபவைகளே. இங்கே ஒன்பது மொழிகளில் தொடக்கக் கல்வியும், ஆறுமொழிகளில் மேல்நிலைப்பள்ளி வரையிலான கல்வியும் கற்றுத்தரப் படுகின்றன. இவ்வாறு சொல்லித்தரப்படும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று.

அந்தமான்—நிக்கோபார் கல்வித் துறையின் மதிப்பீட்டின்படி ஆறாயிரம் தமிழ்க்குழந்தைகள் மும்மொழித்திட்ட ரீதியில் (தமிழ்—ஆங்கிலம்—இந்தி) தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு (முப்பத்து மூன்று பள்ளிகளில்) கல்வி பயின்று வருகிறார்கள். இங்கே மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளை முடித்த பலர் உயர்க்கல்வி பயிலவும், தொழில் நுட்பக்கல்வி பயிலவும் தமிழகத்தையே எதிர் நோக்கி இருக்கிறார்கள். தீவு மாணவர்களுக்குத் தமிழக அரசு தமிழகத்தின் மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் ஒவ்வொரு இடம் ஒதுக்கி இருக்கிறது.

ஆங்கிலேயர் காலத்துத் தீவின் தலைநகர் ரோஸ் தீவின் ஒரு அழகிய தோற்றம்

இந்தியாவின் கொடுஞ்சிறை யென வருணிக்கப்பட்ட செலுவர் கோட்டைச் சிறை

கோவில் காவடிக்கும் சக்தி வேலுக்கும் பூசை

ஆசியாவிலேயே பெரிய மர ஆலை சாத்தம்

வாழ்க்கைத் தரம்

தீவுத்தமிழரில் பெரும் பங்கினர் அரசுத் துறையிலோ தனியார் துறையிலோ தொழிலாளர்களாகவே பணியாற்றுகின்றனர். அதிகாரிகளாக ஆசிரியர்களாகப் பணியாற்றுவோர் வெகுசிலரே. ஆனாலும் தீவின் பெரிதும் சிறிதுமான ஐம்பது விழுக்காட்டு வணிகத்தைத் தமிழர்களே செய்து வருவதால் வாழ்க்கைத் தரம் அத்தனை நெருக்கடியானதாக இல்லை. பெரும்பாலும் அமைதி யாகவே வாழ்கின்றனர்.

தெய்வ வழிபாடுகளும் கோவில்களும்

கோவில்களுக்குக் குறைவில்லாத நிலம் அந்தமான். எங்கெல் லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கோவில்கள் உண்டு. எனவே வழிபாடுகள் தொடர்ந்து நடப்பதோடு, கோவில் தொடர்பான விழாக்களும் இங்கே அதிகமே.

தலைநகர் போர்ட் பிளையரின் வெற்றிமலை முருகன் கோவிலை இங்குள்ள மக்கள் அந்தமானின் திருப்பதி என்கிறார்கள். இங்கே பல்வேறு இனமக்களும் வந்து வழிபாடு நடத்துகிறார்கள். அதே போல போற்றப்படும் மற்றுமொரு கோவில் அலைகடல் ஐயனார் கோவிலாகும்.

தீவெங்கும் முருகன், வினாயகர், மாரியம்மன் ஆலயங்களைக் கட்டி அவை தொடர்பான விழாக்களை நடத்தித் தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தைக் கட்டிக்காத்து வருகிறார்கள் தீவுத்தமிழர்கள். மேலும் காதணிவிழா, திருமணம் போன்றவையும் இந்தக் கோவில் களில் நடப்பதுண்டு. ஆனாலும் இங்கே பெரும்பாலான விழாக்கள் பொது விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில்தான் நடத்தப் படுகின்றன.

அரசியல்

தீவுத் தமிழர்கள் மிகுந்த அரசியல் உணர்வு உடையவர்கள. தமிழகத்தின் அரசியல் கட்சிக் கொடிகள் இங்கே பறக்கும் பாங்கே அதனை மெய்ப்பிக்கும். தமிழகத்து அரசியல் வாதிகள் யாராவது இங்கே வந்து விட்டால் மேடைப் பேச்சை ரசிக்க குவியத் தொடங்கிவிடுவார்கள். ஆனால் தமிழர்தம் அரசியல் வேகம் ஆக்க ரீதியிலானதல்ல என்பதே உண்மை.

தீவின் 44 ஊராட்சி மன்றங்களில் ஒரு தமிழர் மட்டுமே தலைவராக இருக்கிறார். போர்ட் பிளையர் நகராட்சியில் 11 உறுப்பினர்களில் தமிழர் மூவர். ஒருவர் நியமன உறுப்பினர்.

இருவர் பேராயர் கட்சியின் ஆதரவு பெற்றுப் பதவி பெற்றவர்கள் அதே போல் முப்பது பேர்கொண்ட பரிந்துரை மன்றத்தில் (சட்ட மன்றம் போன்றது) ஒரே ஒரு தமிழர் மட்டுமே உறுப்பினராகவும் பரிந்துரைஞராகவும் இருக்கிறார். இவரும் பேராயர் கட்சியின் உதவியால் இடம் பெற்றவரே.

பொதுவாகத் தமிழகத்துத் தேர்தல் முடிவுகள் கட்சிகளின் போராட்டங்கள் தீவுத் தமிழர்கள்பால் பெரும் ஈடுபாட்டை ஏற்படுத்துகின்றன.

தமிழறிவு—பிறசெய்திகள்

இங்கே நாற்பதாயிரம் தமிழர்கள் வாழ்ந்தாலும், படித்த பெருமக்கள் இங்கே நிறைந்திருந்தாலும் தீவுபற்றி ஒரு முறையான தமிழ் நூல் வெளிவரவில்லை. அதே நேரத்தில் இங்குள்ள பன்னிரெண்டு அச்சகங்களில் பத்து அச்சகங்களில் முக்கிய இடம் பெற்றிருக்கும் மொழி தமிழ் மட்டுமே.

ஆனால் தமிழ் இலக்கியங்களைச் சுவைப்பதில் தீவுத் தமிழர் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். தீவுத் தலைநகரில் அமைந்துள்ள அந்தமான் தமிழர் சங்கம், தமிழ் இலக்கிய மன்றம் போன்ற அமைப்புகள் தமிழர்களின் இலக்கியப் பசியைக் களைவதில் பெரும் பங்காற்றுகின்றன.

அதே போல ரெங்கத், மாயாபந்தர், டிக்லிட்பூர், கேமல்பே, கச்சால், வெம்பாலிர்கஞ் போன்ற இடங்களில் அமைந்துள்ள தமிழ் அமைப்புகள் இனரீதியாக மக்களை ஒருங்கிணைக்கவும், தமிழ் கலாச்சாரம் பண்பாடு இவைகளைப் பகிர்ந்து கொள்ளவும் பணியாற்றுகின்றன.

தமிழ் இலக்கிய விழாக்கள் நடத்துவதில் தமிழ் இலக்கிய மன்றத்தின்பணி குறிப்பிடத் தக்கதாகும். பாரதி—பாரதிதாசன் விழா, தமிழ்ப் புத்தாண்டு—முத்தமிழ் விழா, புலவர் விழா, சிலப்பதிகார விழா எனப்பல விழாக்களை அது நடத்தி வழிகாட்டி யுள்ளது. இந்த விழாக்களில் குன்றக்குடி அடிகளார், பாவலர் பெருஞ்சித்திரனார், க. ப. அறவாணன், அவ்வை நடராசன், பேராசிரியர் தமிழ்க் குடிமகன், பேராசியர் வளனரசு, டாக்டர் ந. சஞ்சீவி போன்றோர் பங்கெடுத்துக் கொண்டு, தீவு மக்களுக்கு இலக்கியச் சமய விருந்தளித்திருக்கிறார்கள்.

தமிழ் இதழ்களின் வளர்ச்சி

தீவில், தமிழ் இதழ்களின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மாநில மொழிகளில்—தமிழில் ஒரே ஒரு இதழ்

"அந்தமான் முரசு" 18 ஆண்டுகளாக இயங்கி வந்தது. இன்றைய நிலை என்ன ? எட்டு இதழ்கள். யாவும் கிழமை இதழ்கள். தலை நகர்போர்ட் பிளையரிலிருந்து வெளிவரத் தொடங்கியுள்ளன. இவற்றுள் சில கட்சி இதழ்கள் என்றாலும் பிற மாநில மொழிகளில் இந்த அளவு இதழ்கள் ஏதும் வெளிவரவில்லை.

இந்தி மொழியில் மூன்று இதழ்கள் (இவற்றில் ஒன்று அரசு வெளியீடு) வங்க மொழியில் ஓர் இதழ்மட்டுமே வெளிவருகின்றன. வேறு மொழியினர் கணிசமான அளவு வாழ்ந்தாலும் யாரும் தமது தாய்மொழியில் இதழ்கள் வெளியிட முன் வருவதில்லை. அதே நேரத்தில் தமிழில் மட்டும் இத்தனை இதழ்கள் எப்படி என மற்றவர்கள் வியப்படைகிறார்கள்.

பாரெல்லாம் பரந்த தமிழரில் ஒரு பகுதியினரான அந்தமான் நிக்கோபார் தமிழர்கள் கடல் நீரால் பிரிக்கப்பட்டுத் தாய்த் தமிழகத்திற்கு ஆயிரம் மைல் கடந்து அந்தமான்—நிக்கோபார் தீவுகளில் வாழ்ந்தாலும், பல மொழிகள், பல கலாச்சாரம், பழக்க வழக்கங்களுக்கிடையே தமது அடிப்படை மூலத்தின் உயிர்ப்புக் களை இழக்காமல்—சாகடிக்காமல் (!) அலைகளுக்கிடையிலும் தலைசிறந்து வாழ்கின்றனர்.

8. சீனா

ந. கடிகாசலம்

சீனாவிலும் யப்பான் போன்றே குடியேறிய தமிழர் இல்லை. இலங்கைத் தமிழர். கல்விக்காக இந்நாட்டைப் பயன் கொள்வர். இந்தியத் தூதரகம் சில தமிழ் அலுவலரையும் உட்கொண்டது. பீகிங் வானொலியில் தமிழ்ப் பகுதிக்காகக் கட்டுரையாளர் ஐந்தாண்டுகள் சீனமண்ணில் வாழ்ந்தார். இந்தியத் தூதரகப் பள்ளி உட்பட தமிழ் கற்கும் வரய்ப்பு சீனாவில் இல்லை. ஆனால் பீகிங் வானொலிக்காக 1960 முதல்'68 வரை எட்டு ஆண்டுகள் மட்டும் தமிழ் வகுப்புகள் நடந்தன; நிறுத்தப்பெற்று இது மீண்டும் 1984இல் தொடங்கி, ஓராண்டுக் கல்வியைச் சீன பீகிங் வானொலி தமிழ்ப்பிரிவில் பணியாற்ற விரும்பும் சீனருக்கு அளிக்கிறது. பீகிங் பல்கலைக்கழகத் தென்னாசிய ஆய்வுக் கூடத்தில் தமிழ் தொடர்பான ஆய்வும் நிகழ்கிறது. சில அரசுத் துறைகளில் தமிழ் மொழிபெயர்ப்பாளர் உளர்.

உலகில்' மக்கள் தொகையில் முதலிடம் பெற்று விளங்கும் சீனாவில், தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வருகிறார்களா என்ற வினாவுக்கு ''இல்லை'' என்றே பதில் கூற வேண்டும். ஆனால், சீனாவில் தமிழுக்கு(ம்) இடம் உண்டு என்பதை மட்டும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

சீனாவில் தமிழர்

சீனாவில் குடியேறி, பொதுவாக நிரந்தரமாக வசித்து வரும் தமிழர் யாரும் (இந்தியர் எவரும்) இல்லை; தற்போது, சீனா வெளி நாடுகளுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. வாணிக அல்லது தொழில் நிறுவனத்தைச் சொந்தமாகவோ கூட்டாகவோ நிறுவும் வகையிற் பணம் படைத்த தமிழர் எவரேனும் சீனாவில் முதலீடு செய்து, தொழிலைத் துவக்கினால் தங்கி வசிக்க வாய்ப்பு உருவாகும்.

சீனாவின் தலைநகரான பீகிங்கில் இந்தியத் தூதரகம் உள்ளது. அதில் பணிபுரிவோரில் ஒரு சில தமிழர்கள் காணப்படுவதுண்டு. அவர்களைத் தவிர, 1983 முதல் 1988 வரை சீனாவில் பணிபுரிந்த ஒரே ஒரு தமிழராக இக்கட்டுரையாசிரியர் விளங்குகிறார்.

பொறியியல், மருத்துவம், சீன மொழி ஆகியவற்றைக் கற்கும் பொருட்டு, இலங்கையைச் சேர்ந்த சுமார் பத்து மாணவர்கள், பண்பாட்டுப் பரிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஆண்டு தோறும் சீனாவுக்கு வருகின்றனர். அவர்களில், ஓரிருவர் தமிழராக இருப்பதுண்டு. சீன மொழிகற்கும் வகையில் ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து 5 அல்லது 7 மாணவர்கள் சீனா வருகின்றனர். அவர்களில், தமிழ் மாணவரே கிடையாது. 1984இல் மட்டும் ஒரு தமிழ் மாணவர் சீனா வந்தார்.

எனவே நிரந்தரமாகத் தங்கி வசிக்கும் தமிழர்கள் சீனாவில் இல்லை என்ற போதிலும், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில், தமிழர்கள் சீனாவில் காணப்படுகின்றனர்.

சீனாவில் தமிழ்க் கல்வி

சீனாவில், பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்பிக்கப்படுகிறதா என்ற வினாவுக்கே இடமில்லை. பீகிங்கில் உள்ள இந்தியத் தூதரகப் பள்ளியில், ஆங்கிலம், இந்தி மட்டுமே கற்பிக்கப் படுகின்றன.

சீனாவில் தமிழுக்கு இடமே இல்லாமல் போய்விடவில்லை. பீகிங் வானொலியின் சர்வதேச சேவையில், தமிழும் இடம் பெற்றுள்ளது. பீகிங் வானொலியில், தமிழ்ப் பிரிவு 1963-இல் துவக்கப்பட்டது. இதற்காக, 1960-இல், பீகிங் ஒலிபரப்புக் கல்லூரியில், நான்கு ஆண்டுக்காலத் தமிழ்க் கல்வி வகுப்பு துவக்கப் பட்டது. எட்டு ஆண்டுகளில் சுமார் நாற்பது பேர், (அனைவரும் சீனரே) தமிழ்மொழியைக் கற்றனர். திரு. நாதன் (மலேசியா). திருமதி. சாரதா சர்மா (இந்தியா) ஆகியோர் தமிழைக் கற்பித் தனர். 1966இல் தோன்றிய "பண்பாட்டுப் புரட்சி"யின் காரண மாக, இக் கல்லூரியில், 1968க்குப் பின்னர், தமிழ்க் கல்விக்கு வாய்ப்பே இல்லை.

1984-இல், இக் கல்லூரியில் மீண்டும் தமிழ்க் கல்வி துவக்கப் பட்டது. மூன்று சீன மாணவர்கள் இதில் சேர்ந்துள்ளனர். இங்கு ஓராண்டு படித்த பின்னர், மைசூர், புதுதில்லி, சென்னை ஆகிய இடங்களில் தமிழைக் கற்பார்கள். பிறகு, அவர்கள் பீகிங் வானொலியின் தமிழ்ப் பிரிவில் பணிபுரிவார்கள்.

சீனாவில், எங்கெங்கு தமிழுக்கு இடம் (உள்ளது) என்று பார்ப்போம்.

1. பீகிங் வானொலி நிலையம்

பீகிங் வானொலி, 38 அந்நிய மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றது; அவற்றில் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

தமிழ்ப் பிரிவு, 1963 ஆகஸ்டில் துவக்கப்பட்டது. நாள் தோறும் ஒரு மணிநேரம் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. பீகிங் ஒலிபரப்புக் கல்லூரியில் தமிழ் பயின்ற பதினொரு பேர் இங்குப் பணிபுரிகின்றனர். அயல் நாட்டு நிபுணர் என்ற நிலையில், 1983 ஜுன் முதல், 1988 ஜுலை வரை, இக்கட்டுரையாசிரியர் தமிழ்ப்பிரிவில் பணிபுரிந்தார்.

2. தென்னாசிய ஆய்வுக் கூடம்

பீகிங் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள தென்னாசிய ஆய்வுக் கூடத்தில், தமிழ் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அகிலனின் சிறுகதைத் தொகுதி ஒன்று, சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு, நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

3. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் (அயல்நாட்டுத்) தொடர்புத் துறையிலும்,
4. சீன மக்கள் குடியரசு அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சகத்திலும் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் உண்டு.

5. அயல்மொழிப் பதிப்பகம்

சீனா பற்றிய நூல்களையும், சீன இலக்கியங்களையும் அந்நிய மொழிகளில் வெளியிடுவது இப்பதிப்பகத்தின் பணியாகும். இங்கு, 1964-இல் தமிழ்ப் பிரிவு துவக்கப்பட்டது. ஆனால் 1975-இல் அது மூடப்பட்டுவிட்டது.

பண்டிகைகள் விழாக்கள்

பீகிங்கில் உள்ள தமிழர்கள் தமிழ் வருடப் பிறப்பு, தமிழர் திருநாள் ஆகியவற்றை, தத்தம் இல்லங்களில் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

பீகிங் வானொலி நிலையம் இருக்கும் வரை பீகிங்கில் தமிழ் ஒலித்துக் கொண்டிருக்கக்கூடும்.

9. ஆஸ்திரேலியா

கா. இந்திரபாலா

76.8 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவும் ஒன்றரை கோடி மக்கள்தொகையும் உள்ள ஆஸ்திரேலியாவில், கடந்த இரு நூறாண்டு களாக, 1788 முதல், ஐரோப்பியரும், அண்மைக் காலமாகப் பல்வேறு உலக நாட்டினரும் குடியேறிவருகின்றனர். இவருள் தமிழர் 30ஆயிரம் மட்டுமே. ஆஸ்திரேலியாவின் ஏழு மாநிலங்களுள் நியு சவுத் வேல்ஸ் விக்டோரியா ஆகியவற்றில் தமிழர் மிகுதி. 1837—38-இல் விவசாயத் தொழிலுக்காகத் தமிழர் வரத்தொடங்கினர். பொருளாதார தேவைக் காரணமாக இந்தியத் தமிழரும், அரசியல் காரணத்தால் இலங்கைத் தமிழரும் குடியேறினர். இன்று மருத்துவம், பொறியியல், கணக்கியல், கணிப்புத்துறை வல்லுநராகத் தமிழர் தொழில் துறைகளில் முன்னிற் கின்றனர். நாட்டில் ஐரோப்பியப் பண்பாடு மேலோங்கி அமைகிறது. எனினும் சில தமிழ் உணவுகள், விழா, அலங்காரப் பொருட்கள் வழிபாடு என்பன உள கர்நாடக இசை, பரதநாட்டியம் விரும்பப்படு கிறது. தமிழ்க்கழகங்கள் செய்தி மலர்கள் வெளியிடுகின்றன.

7,682,300 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட ஆஸ்திரேலியாவில் ஒன்றரைக் கோடிக்குச் சிறிது மேற்பட்ட தொகை மக்களே வாழ்கின்றனர்.[1] கடந்த இருநூறாண்டுக் காலமாக ஐரோப்பிய மக்களும், அண்மைக் காலத்தில் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து பிற மக்களும் இங்கு வந்து குடியேறி யுள்ளனர், இவர்களுள் ஒரு குறிப்பிடத்தக்க சிறுபான்மைச் சமூகத் தினராகத் தமிழரும் வாழ்கின்றனர். இன்று இந்நாட்டில் வாழும்

---

1. 1986இல் நடத்தப்பட்ட மக்கள் தொகைக் கணிப்பின் விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. 1986இல் ஆஸ்திரேலி யாவின் முழு மக்கள் தொகை 15,800,000 அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழரின் எண்ணிக்கை சரியாகக் கணக்கிட முடியாது.[2] நமக்குக் கிடைக்கும் புள்ளி விவரங்களை வைத்துக் கணக்கிட்டால் ஏறக் குறைய 30,000 தமிழ் மக்கள் இந்நாட்டில் இன்று வாழ்கின்றனர் என்று கூறலாம்.[3]

ஆஸ்திரேலியா, ஏழு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஏழு மாநிலங்களிலும் தமிழர் குடியேறியுள்ளனர் எனினும் பெருந்தொகையானோர் நியு சவுத் வேல்ஸ் (New South Wales) விக்டோரியா (Victoria) ஆகிய இரு மாநிலங்களில் மட்டுமே மிகுதியாகக் காணப்படுவர். வடபிரதேசம் (Northern Territory) எனப்படும் பகுதியில் மிகக் குறைவாகத் தமிழர் காணப்படுவர். அனைத்து மாநிலங்களிலும் தலைநகர்ப்புறத்திலேதான் தமிழர் வாழ்கின்றனர். விக்டோரியாவின் தலைநகராகிய மெல்போணி லும் (Melbourne), அதற்கு அடுத்ததாக நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தின் தலைநகராகிய சிட்னியிலும் (Sydney)வாழ்கின்றனர். இவர்களுடைய தொழிலின் தன்மை காரணமாக விவசாயம்,

---

2. ஆஸ்திரேலிய அரசு இன, மதவேறுபாடுகளைப் பாராட்டாத கொள்கையைக் கடைப்பிடிப்பதால் இன அடிப்படையிலான அல்லது மத அடிப்படையிலான புள்ளிவிபரங்களை எடுப்ப தில்லை. இதனால் இன அடிப்படையில் அல்லது மத அடிப் படையில் ஆஸ்திரேலிய மக்களைப் பிரித்துக் கணக்கிட முடியாது.

3. 1981 ஆண்டுக் கணிப்பின் படி, கீழ்க்குறிப்பிடப்பட்ட நாடு களில் பிறந்தவர்களாய் ஆஸ்திரேலியாவில் வாழும் ஐரோப்பி யரும் சீனரும் அல்லாத மக்கள் தொகை, அந்தந்த நாடுகளுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ளது :

இந்தியா இலங்கை பிற தென்னாசியநாடுகள்	— 20,344
மொரிசியஸ்	— 2,500
பிஜி	— 2,107
மலேசியா	— 7,394

இந்த விவரங்களை வைத்துக்கொண்டே தமிழர் தொகை இங்கு மதிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட நாடுகளிலிருந்து வந்த தமிழர் தொகை பின்வருமாறு என்று ஊகிக்க இடமுண்டு :

இந்தியா, இலங்கை	— 5 000
மொரிசியஸ்	— 1,000
பிஜி	— 2,000
மலேசியா	— 2,000

மந்தை வளர்ப்பு ஆகியவை நடைபெறும் நாட்டுப்புறங்களில் தமிழர் குறிப்பிடத்தக்க தொகையினராகக் குடியேறவில்லை.[4]

இந்நாட்டில் தமிழருடைய குடியேற்ற வரலாறு ஒருவகையில் ஏனைய ஆஸ்திரேலியருடைய குடியேற்ற வரலாற்றை ஒத்திருக்கிறது எனலாம். ஆஸ்திரேலியரைப் போன்றே இவர்களும் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து பல நோக்கங்களுடன் இங்கு வந்து குடியேறியுள்ளனர். இவர்களுடைய வரலாற்றைப் புரிந்து கொள்ளப் பின்னணியாக ஆஸ்திரேலிய வரலாற்றைச் சுருக்கமாக வேனும் அறிந்திருப்பது நல்லது. ஆஸ்திரேலியாவின் வரலாற்றுக்கும் தமிழர் வரலாற்றுக்கும் நீண்டகாலத் தொடர்புண்டு என்பதையும் இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

ஆஸ்திரேலியாவில் ஐரோப்பியர் முதன்முறையாகக் குடியேறத் தொடங்கியது 1788இல் ஆகும். அதற்கு முன் இங்கு வாழ்ந்தவர்கள் கறுப்பின மக்கள். அவர்களை இன்று தொல்குடிகள் என்று பொருள்படும் அபொரிஜினி (Aborigine) என்ற பெயரால் அழைப்பர். இத் தொல்குடிகள் இற்றைக்கு 40,000 ஆண்டுகளுக்கு

1981இல் சிங்கப்பூரிலிருந்து வந்தோராக 12,350 பேர் இருந்தனர். இவர்களுள் ஏறக்குறைய 2000 பேர் தமிழர் என்று கொள்ளலாம் ஆகவே, 1981இல் பிற நாடுகளில் பிறந்து இங்கு வந்திருந்த தமிழர் தொகை ஏறக்குறைய 10,000. இந்நாட்டில் பிறந்த இவர்களுடைய பிள்ளைகள் தொகை இன்னொரு 10,000. மொத்தம் 20,000 1981இன் பின்னரே பெருந்தொகையான தமிழர் ஆஸ்திரேலியாவுக்கு வந்துள்ளனர். 1983க்கும் 1986க்கும் இடையில் 5,831 இலங்கையர் இங்குவர அனுமதிக்கப்பட்டனர். இவர்களுள் பெரும்பாலோர் தமிழர், 1981 க்கும் 1983க்கும் இடையில் வந்த இலங்கைத் தமிழர், 1983 யூன் தொடக்கம் இன்று வரை வந்த இந்தியத் தமிழர், மலேசியத் தமிழர், பிஜித் தமிழர், மொரிசியஸ் தமிழர், சிங்கப்பூர்த் தமிழர், தென்னாப்பிரிக்கத் தமிழர், பிற தமிழர் ஆகியோருடன் கணக்கிட்டுப் பார்த்தால் 1981க்குப் பின் மேலும் 10,000 தமிழராவது வந்துள்ளனர் என்று கூறலாம். ஆகவே, தற்போது குறைந்தது 30.000 தமிழராவது ஆஸ்திரேலியாவில் வாழ்கின்றனர் என்பதில் ஐயமில்லை. (மூலாதாரம் : B. Falk and J. Harrie, ed., *Unity in Diversity—Multicultural Education in Australia*, A C E, Carlton Vic.. 1983 பக். 11-25; *Hansard of the Australian Parliament*. House of Representatives, 16 September, 1986, பக். 671 (Canberra).

4. 1981இல் தென்னாசியாவில் பிறந்தோராய்க் காணப்பட்ட மக்கள் ஏறக்குறையப் பின்வருமாறு பரவி வாழ்ந்தனர் :
அ. நியூ சவுத் வேல்ஸ் — தலைநகரில் 14,00
ஏனைய இடங்களில் 2000

முன்பே இந்நாட்டுக்கு வந்து குடியேறத் தொடங்கினர். இது தொல்லியற் சான்றுகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது.

ஆஸ்திரேலியத் தொல்குடிகளுக்கும் தென்னிந்தியா, இலங்கை போன்ற இடங்களின் தொல்குடிகளுக்குமிடையிலே தொடர்புண்டு. அத்தொடர்பு மூலமாகத் தமிழ் மக்களுடனும் தொடர்புண்டு எனலாம். தென்னிந்தியா, இலங்கை ஆகிய இடங்களில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தொல்குடி இனத்தைச் சேர்ந்த மக்கள் தென்கிழக்காசியா வழியாகச் சென்று இறுதியில் பாப்புவா நியுகினி (Papua New Guinea) வழியாக ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்தனர், அந்த இனத்தை ஆதி—ஆஸ்திரேலிய வர்க்கம் (Proto Australoid) என மானிடவியலாளர் வர்ணிப்பர். இந்த இனத்தவர் தென்னிந்தியா, இலங்கை போன்ற இடங்களில் பின்வந்த மக்களுடன் பெரும்பாலும் கலந்துவிட, ஆஸ்திரேலியாவில் வெளியுலகத் தொடர்பு இல்லாது பதினெட்டாம் நூற்றாண்டு வரை தனித்து வாழ்ந்தனர். தமிழ்நாட்டுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட இந்தத் தொடர்பு விட்டுள்ள சான்றுகள் இன்னும் நுணுகி ஆராயப் படவுள்ளன.

தமிழர் எப்பொழுது முதன்முதலாக ஆஸ்திரேலியாவுக்கு வந்தனர் என்ற வினாவுக்குச் சரியான விடையை இலகுவில் கண்டு கொள்ள முடியாது. ஐரோப்பியர் இங்கு வருமுன்னர் தமிழ் நாட்டார் வழிதவறி இங்கு வந்திருக்கலாமோ என்று ஐயுற இடமுண்டு. இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டு வணிகர்கள் இந்தோனீசியத் தீவுகள் வரை வந்து சென்

ஆ, விக்டோரியா — தலைநகரில் 22,000
ஏனைய இடங்களில் 1400
இ, குவீன்ஸ்லாந்து — தலைநகரில் 3000
ஏனைய இடங்களில் 1100
ஈ. தென் ஆஸ்திரேலியா — தலைநகரில் 3000
ஏனைய இடங்களில் 400
உ. மேற்கு ஆஸ்திரேலியா — தலைநகரில் 12,000
ஏனைய இடங்களில் 1200
ஊ. தஸ்மேனியா — தலைநகரில் 500
ஏனைய இடங்களில் 300
எ. வடபிரதேசம் — 300
ஏ ACT (தேசியத் தலைநகர்) — 1000
இவ் விவரங்களை வைத்துக் கொண்டு தமிழர் எவ்வாறு பரவி வாழ்கின்றனர் என்பதையும் ஊகிக்கலாம்.
(மூலாதாரம் : B. Falk and J. Harris, மேற்படி.)

றுள்ளனர். பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ்பேசும் இஸ்லாமிய வணிகர்கள், மலேசியாவில் மலாக்காவிலும், இந்தோனீசியாவில் சுமத்திரா, ஜாவா ஆகிய தீவுகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அந்தக் காலகட்டத்தில் ஒரு சிலர் இந்தோனீசியாவுக்கு அப்பால் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து ஆகிய இடங்களை நோக்கிச் சென்றிருக்கலாம். அப்படித் தமிழ்நாட்டு வணிகக் கப்பல் ஒன்று நியுசிலாந்துக்கு அருகே சென்று விபத்துக்குள்ளாகியிருக்க வேண்டும். ஏனெனில் அந்தக் கப்பலில் பயன்படுத்தப்பட்ட வெண்கல மணி ஒன்று நியுசிலாந்து ஆதிக்குடிகளாகிய மவோரி (Maori) மக்கள் மத்தியில் பத்தொன்பதாம் நூற்றாண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இன்று அது அங்குள்ள அரும்பொருளகம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. அதில் பதினைந்தாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட சாசனம் ஒன்று தமிழிலே பின்வருமாறு அமைந்துள்ளது: "முகையதீன் வக்குசு உடைய கப்பல் உடைய மணி,"[5] இக்கப்பலைப் போன்று பிற கப்பல்களும் அப்பகுதிக்குத் தமிழரால் ஓட்டிச் செல்லப்பட்டனவா, சில ஆஸ்திரேலியாவுக்கும் சென்றிருக்கக் கூடுமா என்ற கேள்விகள் இச்சான்றின் அடிப்படையில் எழுகின்றன. ஆனால் இவற்றுக்குத் தற்போது விடைகாண முடியாது.

1788 ஜனவரி 26இல் ஆங்கிலேயக் கப்பல்களில் வந்த முதலாவது ஐரோப்பியக் குடிகள் ஆஸ்திரேலிய மண்ணில் இறங்கினர். அவர்கள் அனைவரும் வெள்ளையர்கள் என்றே பொதுவாக எண்ணப்படுகின்றது. ஆனால் உண்மையில் அன்று வந்திறங்கியோருள் ஒரு சிலர் வெள்ளையரல்லாத ஆசிய, ஆப்பிரிக்கராக இருந்தனர். அவர்களுள் ஒருவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.[6] இந்த இலங்கையர் தமிழரா அல்லது வேறுஇனத்தவரா என்பதை அறியமுடியவில்லை ஆஸ்திரேலியாவின் முதல் ஐரோப்பியக் குடிகளுடன் இந்தியர்களும் வந்திருந்தனர்.[7] ஆனால் இவர்களுள் தமிழரும் இருந்தனரா என்பதையும் அறிய முடியவில்லை.

---

5. இந்த அரிய சாசனத்தின் உண்மையான முக்கியத்துவம் இன்னும் அறிஞர் உலகில் விளங்கிக்கொள்ளப்படவில்லை.
6. *Collins Australian Encyclopaedia*, ed. John Shaw, Collins, Sydney 1984, பக். 336.
7. C.M.H. Clark, *A History of Australia*, Vol. 1, Melbourne 1962, பக் 94.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மேலும் பல இந்தியர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வரத்தொடங்கினர். அப்பொழுது இங்கு விவசாயவளர்ச்சி ஏற்படத் தொடங்கியதால் பெருமளவில் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். தேவைப்பட்ட தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து வருவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், லண்டன் அதிகாரிகள் அவற்றுக்கு அனுமதி வழங்கவில்லை. அப்படியிருந்தும் தனிப்பட்ட சிலர் முயற்சியால் இந்தியத் தொழிலாளர் பலர் 1837-38ஆம் ஆண்டுகளில் இங்கு வந்திறங்கினர்.[8] இந்தியாவில் பணியாற்றிய ஆங்கிலேயர் சிலரும் ஓய்வு பெற்று இங்குக் குடியேற வந்தபோது தங்கள் வேலையாட்களாகச் சில இந்தியரையும் அழைத்து வந்தனர்.[9] இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் சென்று வந்த கப்பல்களில் தொழில் புரிந்த இந்தியர் சிலரும் தம் கப்பல்களைக் கைவிட்டு ஆஸ்திரேலியாவில் குடியேறினர் என அறிகின்றோம்.[10] இப்படியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் குடியேறிய இந்தியருள் தமிழரும் இருந்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

1901இல் மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டபோது இந்தியாவிற் பிறந்து இந்நாட்டுக்கு வந்து குடியேறியோராய் ஏறக்குறைய 7700 பேர் வாழ்ந்தனர். ஆனால், அந்த ஆண்டிலிருந்து அரசு கடைப்பிடித்த கொள்கை வெள்ளையரை மட்டுமே குடியேற அனுமதித்ததால் அண்மைக்காலம் வரை தமிழரோ பிற ஆசிய மக்களோ இங்குக் குடியேற முடியவில்லை, 1967இன் பின் அக் கொள்கை கைவிடப்பட்டதுமே, பல தமிழர் இங்கு, குடியேறத் தொடங்கினர். அதற்கு முன் ஆஸ்திரேலியாவில் குடியுரிமையுடையோரை மணம் முடித்த சில தமிழர்கள் மட்டுமே குடியேற வாய்ப்புப்பெற்றனர்.[11]

---

8. I.M. Cumpston, *Indians Overseas in British Territories, 1834-1854*, London 1953, பக். 15, 16, 27.
9. *The Austalian Encyclopaedia*, Vol. 5, Grolier Society, 4th edition 1983, பக், 231-232.
10. மேற்படி.
11. எடுத்துக்காட்டாக, 1933இல் மலேசியாவில் இலங்கைத் தமிழருக்கு மகனாகப் பிறந்த கதிரித்தம்பி சின்னையா தவராவி என்பவர் போரின் பின் இலங்கைக்குத் திரும்பி, அங்கிருந்து 1956இல் கல்வி கற்பதற்காக ஆஸ்திரேலியாவுக்கு வந்து, 1958 இல் ஆஸ்திரேலியப் பெண் ஒருவரை மணம் முடித்து, சிட்னியில் குடியேறினார். அவர் மணம் முடித்த பெண் ஹங்கேரி நாட்டிலிருந்து இங்கு அகதியாக வந்து குடியேறிய ஒருவராவர். இது

ஆஸ்திரேலியாவில் குடியேறியுள்ள தமிழர்கள் உலகின் பல்வேறு பாகங்களிலுமிருந்து வந்துள்ளனர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் தமிழ் நாட்டிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்தவர்கள். பலர் மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, பிஜி, மொரிசியஸ், இங்கிலாந்து ஆகிய இடங்களில் குடியேறிய தமிழர்களின் வழித் தோன்றல்கள். இவர்களை விட, இலங்கை இந்தியா ஆகிய நாடுகளிலிருந்தும் தொழில் புரிவதற்காக ஆப்பிரிக்க நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் சென்ற பல தமிழர் களும் அந்தந்த நாடுகளிலிருந்து தாய்நாடு திரும்பாது இங்குக் குடியேற வந்திருக்கின்றனர். அந்தமான் தீவிலிருந்து கூடச் சில தமிழர் வந்திருக்கின்றனர்.

இக் காலத்தில் ஒரு நாட்டை விட்டு மக்கள் இன்னொரு நாட்டுக்குக் குடி பெயர்ந்து செல்வதற்கு இரு முக்கிய நோக்கங்கள் உள. ஒன்று பொருளாதார நோக்கம், மற்றது அரசியல் நோக்கம். நாடுகளுக்கிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நிறைந்து காணப்படும் இக்கால கட்டத்தில் ஒருவரைத் தன் நாட்டிலேயே வாழ்நாள் முழுவதும் தொழில் புரிய வைத்த கட்டுப்பாடுகள் தளர்ந்து விட்டன. இந் நிலையில் வளர்ச்சி குன்றிய நாடுகளி லிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத் தொழில் நாடிச் செல்வதும், உயர்ந்த ஊதியத்துடன் சிறந்த பதவிகளையும் அவற்றுடனான வசதிகளையும் தகைமையுடையோர் நாடிச் செல்வதும் இன்றுப் பொதுவாக நடைபெறும் செயல்களாகி விட்டன. இத்தகைய பின்னணியிலே தான் ஆஸ்திரேலியாவுக்குப் பொருளாதார நோக்குடன் செல்வோரை ஆராய வேண்டும்.

இரண்டாவது உலகப் போரின் பின்னர், அதாவது 1945க்குப் பின்,ஆஸ்திரேலியா பொருளாதார துறையிலே துரிதமான வளர்ச்சி ஏற்படத் தொடங்கியது. இதனால், இவ் வளர்ச்சியில் பங்கு கொள்ள ஐரோப்பாவிலிருந்து பெருமளவில் இங்கு வந்தனர். உலகப் போரினால் அகதிகளாக்கப்பட்ட ஐரோப்பியரும் பெரும் அளவில் வந்தனர். ஆனாலும் 1967 வரை ஆசிய மக்களும்

நடப்பதற்கு 50 ஆண்டுகளுக்கு முன் ஒரு பிரசித்தி பெற்ற இலங்கைத் தமிழர் ஆஸ்திரேலியப் பெண் ஒருவரை மணம் முடித்து இலங்கைக்கு அவரை அழைத்துச் சென்றார். அப் பெரியார் சர் பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். அவர் மணம் முடித்த பெண் லீலாவதி எனப் பெயர் பெற்று, சைவத் தைத் தழுவி, தமிழ் உடை உடுத்து, தமிழ் பேசி, இராமநாதன் கல்லூரி என்னும் பெண் கல்வி நிறுவனத்துக்குத் தலைவியாக விளங்கினார்.

ஜெயரத்தினம் எலியேசர், பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம் ஆகியோராவர். இவர்களைப் போன்று பின்னர் இலங்கையைச் சேர்ந்த மருத்துவத்துறையினரும் பொறியியலாளரும் இங்கு வந்து குடியேறினர்.[12] இலங்கையில் 1970இன் பின் தமிழ் மக்கள் அரச கொள்கைகளினால் கூடுதலாகப் பாதிப்படைய மேலும் கூடுதலானோர் ஆஸ்திரேலியாவுக்கு வரத் தொடங்கினர்.[13]

இலங்கைத் தமிழரைக் காட்டிலும் மலேசியத் தமிழர் தம் நாட்டு அரசு கொள்கைகளினால் தொழில் பெறுவதைப் பொறுத்த மட்டில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர் எனலாம். 1957இல் மலாயா விடுதலை பெற்றது. சில ஆண்டுகளின் பின் மலேசியக் கூட்டரசு அமைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மலாய் மக்களுக்குச் சிறப்பிடமும் சிறப்புச் சலுகைகளும் வழங்கும் கொள்கை கடைப்பிடிக்கப்படத் தொடங்கியதும் அங்கு வாழ்ந்த சீனர்களும் தமிழர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வழமையாகத் தங்கள் கல்வித் தகைமைகளால் அரச நிர்வாகப் பதவிகள் பெற்று வந்த தமிழர் தொடர்ந்தும் முன்போல அத்தகைய பதவிகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கல்வித் தகைமை பெற்ற தமிழர் பலர் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பை

12. 1970ஆம் ஆண்டு திருமதி சிறிமா பண்டாரநாயக இலங்கைப் பிரதமராகப் பதவி பெற்ற பின்னரே கூடுதலான வைத்தியர்களும் பொறியியலாளரும் வெளிநாடுகளுக்குச் சென்றனர். எடுத்துக்காட்டாக, கொழும்பில் பிரபல அறுவைச் சிகிச்சையாளராக (Surgeon) விளங்கிய டாக்டர் வேலுப்பிள்ளை இராசநாயகம் அவர்கள். 1971இல் நியுசிலாந்துக்குச் சென்று, அங்கிருந்து 1982இல் ஆஸ்திரேலியாவுக்குவந்து குடியேறினார். இவரைப் போன்று டாக்டர் கேதீஸ்வரன் துரைசிங்கம் அவர்கள் 1974இல் இலங்கையை விட்டு ஆஸ்திரேலியா வந்து குடியேறினார். இலங்கையில் பொறியியலாளராகக் கடமையாற்றிய எஸ்.ஈ.ஆர். செல்வானந்தம் அவர்கள் 1970இல் இலங்கையைவிட்டு இங்குவந்துக் குடியேறினார்.

13. 1980களில் தமிழர் பிரச்சனை மேலும் மோசமடைய, இலங்கையில் தொழில் பெற்றிருந்த இளைஞர் பலர் இந் நாட்டுக்கு வந்து குடியேறினர். எடுத்துக்காட்டாக, கொழும்பில் கணிப்புத் துறையில் தொழில்புரிந்த சம்பந்தநாதர் திருலோகநாதன், ஜெயக்கொடி திருக்குமார், கடற்றொழில் அமைச்சில் பணியாற்றிய ஜெயக்கொடி சிவன்பாதகுமார், கொழும்பில் கணக்காளர்களாக இருந்த இராஜேஸ்வரா, முத்துக்குமாரு. கிருஷ்ணகுமார், திரு. கந்தசாமி சம்பந்தர், பொறியியலாளர் திரு. எஸ். நடேசன், வங்கி முகாமையாளர் டி.கே. மேதர் ஆகியோர் 1984இல் சிட்னி, பேர்த், பிரிஸ்பேன் ஆகிய நகரங்களுக்கு வந்து, குடியேறினர்.

நாடிச் செல்லத் தொடங்கினர். எனவே உயர் கல்விக்காக ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் வழக்கம் மலேசியத் தமிழரிடையே இருந்த காரணத்தால் பலர் ஆஸ்திரேலியாவுக்கே குடியேற விரும்பினர். இலங்கைத் தமிழரைப் போன்று இவர்களும் தங்கள் பிள்ளைகளுக்குத் தங்கள் நாட்டில் நல்ல எதிர்காலம் இல்லையென நம்பியமை ஆஸ்திரேலியாவை நாடுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. இத்தகைய பின்னணியிலேதான் மலேசியத் தமிழர் இந்நாட்டில் குடியேறத் தொடங்கினர்.

இந்நிலையிலிருந்து வேறுபட்டது பிஜித்தமிழர் நிலை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து பிஜித் தீவுகளில் தோட்டத் தொழிலாளராகப் பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் வேலைக் கமர்த்தப்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து பிஜி விடுதலை பெற்றபோது அங்கு வாழ்ந்த சுதேசிகளைவிட இந்தியர்கள் முதலாகக் காணப்பட்டனர். இந்த நிலை சுதேசிகளுக்கும் இந்தியர்களுக்குமிடையில் பிரச்சனைகளை ஏற்படுத்தியது. இந்தியர்களுள் தமிழர்கள் சிறுபான்மையினராக இருந்தமை தமிழர் நிலையை மேலும் பாதித்தது அத்துடன், மலேசியாவிற் போலல்லாது, பிஜியில் வாழ்ந்த தமிழர் சிறந்த கல்வித் தகைமை களைப் பெற்றவர்களாகவோ உயர் பதவிகளை வகிப்பவர் களாகவோ இருக்கவில்லை. இத்தகைய காரணிகளினால், முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்கள் குறைவாக இருந்த பிஜியை விட்டுப் பல வகையான வாய்ப்புக்களை அளித்த அயல் நாடாகிய ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதைப் பிஜித் தமிழர் விரும்பினர். கடந்த சில ஆண்டுகளாக வாய்ப்புப் பெற்ற பிஜித் தமிழர் இங்கு வந்து குடியேறியுள்ளனர்.

தென்னாப்பிரிக்காவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழரும் பிற இந்தியர்களும் தொழிலாளர்களாகவும் வர்த்தகர் களாகவும் சென்று குடியேறினர். அந்நாட்டில் கறுப்பினமக்களுக்கு எதிரான கொள்கை ஒன்று மிகவும் கடுமையான முறையிலே கடைப்பிடிக்கப்பட்டபோது, இந்தியர்களும் ஒரு தனிப் பிரிவாக வகுக்கப்பட்டு, உரிமைகள் பல இல்லாத குடிமக்களாக அங்கு வாழவேண்டியதாயிற்று. இந்நிலையிலிருந்து தப்பித்துக் கொள் வதற்காகச் சில தென்னாப்பிரிக்கத் தமிழர் ஆஸ்திரேலியாவுக்கு வந்து குடியேறியுள்ளனர். இவர்களைப் பொறுத்தவரை, பொருளாதாரக் காரணங்களைக் காட்டிலும் அரசியல் காரணங் களே குடிபெயர்வுக்கு வழிவகுத்தன எனலாம்.

மொரீசியஸ் விடுதலை பெற்ற பின் அங்கு வாழும் பல்வேறு இனங்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைகள் பலரை ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர வழிவகுத்தன. கடந்த இருபதாண்டுக் காலத்துக்குள் பத்தாயிரத்துக்கும் கூடுதலான மொரீசியஸ் மக்கள் இந்நாட்டுக்கு வந்து குடியேறியுள்ளார்கள். இவர்களுள் பெரும்பாலோர் ஐரோப்பியர்களின் வழித் தோன்றல்கள். எஞ்சியோருள் தமிழர்களுடைய எண்ணிக்கை பெரிது என்று கூறுவதற்கில்லை இவர்களைப் பொறுத்தமட்டிலும் அரசியலுடன் பொருளாதாரக் காரணங்களும் குடிபெயர்வுக்கு வழிவகுத்துள்ளன.

சிங்கப்பூரிலிருந்து வந்த தமிழர்களின் குடி பெயர்வுக்கான காரணங்கள் சிறிது வேறுபட்டவை. துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் சிங்கப்பூரில் தமிழர்களுக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்படாதிருப்பதோடு, தொழில் வாய்ப்புகளும் இருக்கின்றன. எனினும் அந்நாடு மிகச் சிறிதாகவும், அதன் எதிர்காலம் நிச்சயமற்றதாகவும் அமைந்துள்ளதால், எதிர்காலத் தலைமுறையின் நன்மை கருதியும் தமது முன்னேற்றம் கருதியும் சிங்கப்பூர்த் தமிழர் சிலர் ஆஸ்திரேலியாவுக்கு வந்துள்ளனர். மலேசியத் தமிழரைப் போன்று சிங்கப்பூர்த் தமிழரும் இந்நாட்டுக்குக் கல்வி கற்க வந்து செல்லும் வழக்கம் இத்தகைய குடியேற்றத்தை இலகுபடுத்தியிருக்கலாம்.

அண்மைக் காலத்தில் கல்வி கற்பதற்காகவும், வேலைவாய்ப்புக்களை நாடியும், தாய்நாட்டு அரசியல் நெருக்கடி நிலையிலிருந்து தப்புவதற்காகவும் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்குப் பல தமிழர் செல்வது வழக்கமாகிவிட்டது. அப்படிச் சென்ற தமிழர் பலர் அங்குப் பல ஆண்டுகள் தங்கியிருந்த பின் நிரந்தரமாகக் குடியேற முடியாது போக, அங்கிருந்து கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குக் குடியேறும் உரிமை பெற்றுச் செல்வதும் வழக்கமாகி வருகிறது.[14] கடந்த சில ஆண்டுகளாக அவ்வாறு பல தமிழர் ஆஸ்திரேலியாவுக்கு வந்து குடியேறி

14. எடுத்துக்காட்டாக, 1983இல் லண்டனில் இருந்து வந்து குடியேறிய கணக்காளர் கணேசமூர்த்தி தெய்வேந்திரராஜா 1983இல் லண்டனில் இருந்து வந்து குடியேறிய கணிப்புத் துறையைச் சேர்ந்த திரு. ராஜாமுத்தையா தர்மராஜா, 1985இல் லண்டனில் இருந்து வந்து குடியேறிய பொறியியலாளர் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை, 1986இல் லண்டனில் இருந்து வந்து குடியேறிய கணக்காளர் ஏ. எட்வர்ட் குணசிங்கம் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

யுள்ளனர். இவர்கள் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் அரசியல் காரணங்களுக்காகவும் தம் தாய்நாட்டுக்குச் செல்ல விரும்பாதவர்கள் என்பது அறியத் தக்கது.

இவர்களைப் போன்று பல தமிழர் இலங்கை, தமிழ்நாடு ஆகிய இடங்களிலிருந்து வேலைவாய்ப்புக்களை நாடி ஆப்பிரிக்க நாடுகளுக்கும் அரபு நாடுகளுக்கும் பெருமளவில் அண்மைக் காலத்தில் சென்றுள்ளனர். இவர்களுக்கு அந்த நாடுகளில் நிரந்தரமாகக் குடியேறும் உரிமையும் இல்லை. விருப்பும் இல்லை. இதனால் சில ஆண்டுகள் தொழில் புரிந்த பின் எதிர்கால வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்ள பலர் ஆஸ்திரேலியாவுக்கு வந்து குடியேறியுள்ளனர். இவர்களைப் பொறுத்தும் பொருளாதார காரணங்களும் அரசியற் காரணங்களும் செயற்பட்டுள்ளன.[15]

தனிப்பட்ட அரசியல் காரணத்துக்காக இந்நாட்டுக்கு வந்து குடியேறிய தமிழர் என்று கூறக் கூடிய ஒரு பிரிவினர் 1983 ஜூலைத் திங்களுக்குப் பின்னர் இலங்கையிலிருந்து வந்த தமிழர்களாவர். அப்போது இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தின்போது தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும், அவர்களது வீடுகள் சொத்துக்கள் ஆகியவை சேதப்படுத்தப்பட்டும் தமிழருக்குப் பெரும் இன்னல் ஏற்பட்டதன் விளைவாகப் பாதிக்கப் பட்ட தமிழர் பலர் இங்குக் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.[16]

---

15. எடுத்துக்காட்டாக, மேற்கு ஆசியாவின் பாரெயின் (Bahrain) என்னும் இடத்தில் மூன்று ஆண்டுகள் தொழில் புரிந்தபின் 1983இல் இங்கு வந்து குடியேறிய பொறியியலாளர் கணபதிப் பிள்ளை இராமச்சந்திரன், ஆப்பிரிக்காவின் சாம்பியா நாட்டில் தொழில்புரிந்து, 1984இல் இங்கு வந்து குடியேறிய கணக்காளர்கள் கார்த்திகேசு இரத்தினகுமார், லக்ஷ்மணன் சிவராமன், சாம்பியாவிலும் சிங்கப்பூரிலும் கணக்காளராகத் தொழில் புரிந்தபின் 1984இல் இங்கு வந்து குடியேறிய அண்ணாசாமி ஐயர் பரமேஸ்வரன், சிங்கப்பூரில் பொறியிய லாளராகத் தொழில்புரிந்தபின் 1985இல் இங்குவந்து குடி யேறிய கே. கைலைநாதன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

16. 1983/84 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து வந்து குடியேறி யோர் தொகை 2,054, இதில், ஆஸ்திரேலியாவில் வசிப்போ ருடைய நெருங்கிய உறவினர் 1,369 பேர். பாதிக்கப்பட்ட பிற உறவினர் 483 பேர். மொத்தத்தில் 1983க்கும் 1986க்கும் இடையில் 5,831 இலங்கையர் வந்து குடியேறினர். இவர்களுட் பெரும்பாலோர் தமிழரே. *Hansard of the Australian Parliment* House of Representatives, Canberra, 16 September 1986, பக். 671.

இதனைத் தொடர்ந்து சில தமிழ் இளைஞர்களும் அகதிகளாக இங்கு வந்து தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவ்வாறாகப் பல்வேறு நாடுகளிலிருந்து பல்வகைப்பட்ட காரணங்களுக்காகத் தமிழர் ஆஸ்திரேலியாவுக்கு வந்து குடியேறியுள்ளனர். இதுவரை குறிப்பிடப்பட்ட நோக்கங்களை விட, வேறு தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் சிலர் இங்கு வந்து குடியேறியுள்ளனர். அப்படி வந்தோருள் குறிப்பிடத்தக்கோர் குடும்ப ஒற்றுமைக்காக வந்தவர்கள். பிள்ளைகள் அனைவரும் இங்குக் குடியேறியதால் பெற்றோரும் அவர்களுடன் வாழ்வதற்காக இலங்கை, தமிழ்நாடு, மலேசியா போன்ற இடங்களிலிருந்து தமக்கிருந்த சொந்த வசதிகளையும் அர்ப்பணித்து வந்திருக்கிறார்கள். அதேபோல, குடும்பத்தில் ஒருவரோ பலரோ இங்கு வந்தபின் ஏனைய சகோதரர்களையும் இங்கு வருவித்துக் கொள்ளும் வழக்கமும் தொடர்ச்சியாகத் தமிழர் வந்து குடியேறுவதற்கு உதவும் ஒரு காரணமாகும். ஒரு சிலர் கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடியேறியிருந்தும், அந்நாடுகளின் குளிரை விரும்பாத காரணத்தால் அவற்றை விட வெப்பமான காலநிலையுள்ள ஆஸ்திரேலியாவுக்கு வந்து குடியேறுவதையும் காணலாம். வர்த்தகம் புரிவதற்காக இங்குக் குடியேறுவதற்கு வசதி இருந்தும் (business migration) மிகச் சிலரே அவ் வசதியைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

அடுத்து, இங்கு வாழும் தமிழருடைய கல்விநிலை, தொழில் நிலை, வாழ்க்கை முறை ஆகியவற்றை நோக்கலாம். இந்நாட்டில் குடியேறிய தமிழர்கள் பெரும்பாலோர் நல்ல கல்வித் தகைமைகளுடனும் ஆங்கில அறிவுடனும் வந்தவர்களே. முன்னர் கூறியது போல, மருத்துவத்துறை, பொறியியல், கணக்காளர்துறை, கணிப்புத்துறை போன்ற தொழில் துறைகளிலே தகைமை பெற்றவர்களே இங்குத் தொடக்கத்தில் வந்து பதவிகளைப் பெற்றுக் குடியேறியவர்கள். இவர்களுடைய உறவினராக அண்மைக் காலத்தில் வந்தோர் சிலரைத் தவிர எல்லோருமே நல்ல கல்வி பெற்றவர்கள் என்று கூறலாம். பலர் இலங்கை, மலேசியா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள் அல்லது தொழில்சார் பட்டங்கள் பெற்றவர்கள். சிலர் இந்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலே பட்டம் பெற்றவர்கள்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து குடியேறிய மக்கள் சிலரைப் போலல்லாது, தமிழர் பொதுவாகத் தம் பிள்ளைகள் சிறந்த கல்வியறிவைப் பெறவேண்டும் என்ற ஆர்வமுடையோராய்க் காணப்படுகின்றனர். இதனால், சிறந்த பள்ளிக் கூடங்கள் இருக்கும் இடங்களில் குடியேறும் விருப்பம் இவர்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இரண்டாவது தலைமுறையினராக இங்கு வாழும் இளம் தமிழ்த் தலைமுறையினர் கல்வியில் பெருங் கவனம் செலுத்தி வருவதைக் காணலாம்.

ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களுடைய தொழில்நிலை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும். தொழில் தகைமைகள் இல்லாதோரை இலகுவில் இந்நாட்டுக்கு அனு மதிக்காத காரணத்தால், குடியேறிய தமிழர்கள் நல்ல தகைமை களுடன் வந்து நல்ல தொழில்களைப் பெற்றுள்ளார்கள் என்று பொதுப்படக் கூறலாம். குறிப்பிடத்தக்க தொகையினர் மருத்துவத் தொழில் புரிவோராயும் கணக்காளராயும் காணப்படுகின்றனர். அண்மைக் காலத்தில் கணிப்புத் (Computer) துறையில் பலர் பணியமர்த்தப்பட்டனர். தமிழ் நாட்டிலிருந்து மிக அண்மைக் காலத்தில் வந்தோர் இத்தகையவர்களே. பொறியியலாளராகவும் பலர் தொழில் புரிகிறார்கள். பெண்கள் தான் பெரும்பாலும் எழுது வினைஞர்களாகத் தொழில் புரிபவர்கள். 1985, 1986ஆம் ஆண்டுகளில் இலங்கையிலிருந்து இனக் கலவரத்தில் பாதிக்கப் பட்டோராய் வந்த சிலரும், அகதிநிலை நாடி வந்த சிலரும், பிஜியில் இருந்து வந்த சிலரும் தொழிற்சாலைகளிலும் உணவுக் கூடங்களிலும் வேலை பெற்றுள்ளனர். பல்கலைக்கழகங்களிலும் தமிழர் விரிவுரையாளராகப் பதவிபெற்றிருப்பதைக் காணலாம். வர்த்தகத் துறையில் மிகவும் குறைவாகவே தமிழர் காணப் படுகின்றனர்.[17] கலைத்துறையில் வாய்ப்பு பெற்றோரும் அரிது எனலாம்.[18]

---

17. மெல்போர்ன், சிட்னி போன்ற தலைநகர்களில் ஒருசில பலசரக் குக் கடைகளையும் உணவுச் சாலைகளையும் தமிழர் நடத்து கின்றனர். ஆனால் பெருவர்த்தகர்களாகச் சிறப்புப் பெற்றோர் அரிதாகவே காணப்படுகின்றனர். அப்படிப்பட்ட ஒருவர் மலேசியாவிலிருந்து வந்து குடியேறிய தவா இராசையா ஆவர்.

18. கலைத்துறையில் சிறப்புப் பெற்ற ஒரு தமிழர் பிரபல பாடக ராகிய கமல் என்பவராவர். இவரும் மலேசியாவிலிருந்து வந்த தமிழர். இவருடைய இயற்பெயர் கந்தையா கமலேஸ்வரன். இவர் இலங்கையிலிருந்து மலேசியாவுக்குச் சென்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்.

ஆஸ்திரேலியாவில் தமிழர்கள் நல்ல தொழில் நிலையில் இருப்பதால் அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் பொதுவாக உயர்ந்ததாகவே காணப்படுகின்றது. அத்துடன் இந்நாடு ஒரு வளர்ச்சியடைந்த நாடாக இருப்பது இந்நிலைக்கு அடிப்படைக் காரணமாகும். நிச்சயமாகத் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா ஆகிய இடங்களில் வாழும் தமிழருடைய பொது வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததாகவே இங்கு வாழும் தமிழருடைய வாழ்க்கைத்தரம் அமைந்துள்ளது. இவர்களுடைய வாழ்க்கைத்தரம் ஆஸ்திரேலிய நடுத்தர வகுப்பினருடைய வாழ்க்கைத்தரம் என்று கூற முடிந்தாலும், பண்பாட்டு வேறுபாடுகளினால் சில முக்கிய ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. போதிய வருவாய் இருந்தபோதிலும், பெரும்பாலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலிருந்து இங்கு வந்து குடியேறிய முதல் தலைமுறையினராக இருப்பதனால், தம் நாட்டு எளிமையான வாழ்க்கை முறைகளை முற்றாகக் கைவிடாது வாழும்போது ஏனைய ஆஸ்திரேலியர்களுடைய வாழ்க்கைத் தரத்தை விடச் சில வகைகளில் இவர்களுடைய வாழ்க்கைத்தரம் குறைந்து காணப்படலாம். பொதுவாக ஆஸ்திரேலியர்கள் தம் வருமானத்தின் பெரும் பங்கினை உடை, உணவு, விடுமுறைக்கால உல்லாசப் பயணம் ஆகியவற்றிலே செலவிடுவார்கள். ஆனால் தமிழர்கள் பொதுவாக இந்தத் துறைகளில், சிறப்பாக உடை, உல்லாசப் பயணம் ஆகியவற்றில் அதிக பணத்தைச் செலவிடாது தமது பிள்ளைகளின் கல்விக்காகவும் எதிர்காலத்துக்காகவும் சேமிக்கும் வழக்கம் உண்டு அத்துடன் இவர்களும் பலருக்குத் தாய்நாட்டில் நெருங்கிய உறவினருக்கு உதவவேண்டிய தேவையும் உண்டு. இது பொதுவாக முதல் தலைமுறையினரைப் பொறுத்து காணப்படும் நிலையாகும். ஆனாலும் வீடு, வாகனங்கள் ஆகியவற்றைச் சொந்தமாக வைத்திருத்தல், வீட்டுத் தளபாட வசதிகள் ஆகியவற்றைப் பொறுத்து ஏனைய ஆஸ்திரேலியர்களைப் போன்று இவர்களுடைய தரம் உயர்ந்ததாகவே காணப்படுகின்றது.

மக்களுடைய பழக்க வழக்கங்கள் அவர்களுடைய பண்பாட்டுடன் இணைந்தவையே. எந்த மக்களும் ஒரு சமூகத்திற்குள் பிறந்து அதன் பண்பாட்டைப் பெறுகின்றனர். பின்னர் அதில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றனர். பண்பாடானது மாற்றமடையாதிருக்கும் பொருளன்று. அது மாறிக்கொண்டே இருக்கும். ஒரு சமூகம் எத்தகைய சூழ்நிலையிலுள்ளதோ அதற்கேற்ப பண்பாடு மாறும்.[19] ஆகவே, இந்நாட்டில் குடியேறிய தமிழர் தத்தம்

19. L. Schenider and C. Bonjean. eds,. *The Idea of Culture in the Social Sciences,* Cambridge University Press, 1973.

தாய்நாட்டுச் சூழலிலிருந்து வேறுபடும் ஒரு சூழலில் வாழ்வதால் அவர்களுடைய பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவை மாறி யுள்ளன, மாறிக்கொண்டே செல்கின்றன. அவர்கள் விரும்பினா லென்ன விரும்பாவிட்டாலென்ன இது நடைபெறும்.

ஆஸ்திரேலியாவின் மேலோங்கிய பண்பாடு (dominant culture) ஐரோப்பிய பண்பாடாகும். இந்த பண்பாட்டைச் சேர்ந்தோரிடையே சிதறிக் குடியேறியுள்ள தமிழர் பண்பாட்டை மாற்றமில்லாது தாம் கொண்டுவந்த நிலையிலேயே வைத்திருப்பர் என்று எதிர்பார்க்க முடியாது. நாள்தோறும் ஆஸ்திரேலியப் பண்பாட்டின் நடுவே வாழ்வது மட்டுமல்லாது, அப்பண்பாட்டின் கூறுகளைத் தொலைக்காட்சி மூலம் வீட்டுக்குள்ளேயே தமிழர் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இந் நிலையில் தம்மை அறியாமலே தமிழர் பழக்க வழக்கங்கள் மாறுகின்றன.

உடை என்பது உலகம் முழுவதுமே ஆண்களைப் பொறுத்து ஐரோப்பியமயமாகிவிட்டது எனலாம். ஆஸ்திரேலியாவில் தமிழ் ஆண் மக்கள் தம் பாரம்பரிய உடையைப் பேணி வருகின்றனர் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் முதல் தலைமுறைப் பெண்களைப் பொறுத்து ஓரளவுக்குத் தமிழ் உடை பேணப் படுகின்றது என்று சொல்லலாம். பலர் வீட்டில் மட்டுமன்றித் தொழிலுக்கு செல்லும்போதும் சேலை உடுத்துச் செல்வர். எனினும், பல காரணங்களுக்காக எத்தனையோ இளம் பெண்கள் தமிழ் முறைப்படியான சேலை உடுப்பதைக் கைவிட்டுள்ளனர். இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த பெண் பிள்ளைகளும் இளம் பெண்களும் உடையிலும் தலையலங்காரத்திலும் ஆஸ்திரேலியப் பண்பாட்டையே பின்பற்றுகிறார்கள்.

தமிழர் வீடுகளில் ஐரோப்பியப் பண்பாட்டுக் கூறுகளும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளும் கலந்திருப்பதைக் காணலாம். வீட்டின் உள்ளமைப்பு முழுக்க முழுக்க ஆஸ்திரேலியப் பாணி யிலேயே அமைந்திருக்கும். ஆனால் தம் பண்பாட்டையும் தாம் யார் என்ற அடையாளத்தையும் மறக்கக்கூடாது என்பதற்காக அலங்காரத்தில் சிலபண்புகள் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் சேர்க்கப்பட்டிருக்கும். பொதுவாக, இந்து தெய்வங்களின் சிலைகள் படங்கள் ஆகியவையும் பெரும் குத்து விளக்குப் போன்ற அலங்காரப் பொருள்களும் அங்குமிங்குமாக வைக்கப்பட்டிருக்கும். தமிழ்ப் பாடல்கள், கர்நாடக இசை ஆகிய வற்றின் ஒலிப்பதிவு நாடாக்கள் வீட்டில் இருக்கும். பல வீடுகளில்

தமிழ்ப் படங்களை வீடியோவில் பார்ப்பதற்கான வசதிகளும் இருக்கும்.

உணவைப் பொறுத்தே பெருமளவுக்குத் தமிழ்ப் பண்பாடு பேணப்படுகின்றது எனலாம். பொதுவாகக் காலை உணவு ஆஸ்திரேலிய முறைப்படி அமைவது வழக்கம். ஆனால் இரவு உணவு சோறு கறி உணவாகவோ அல்லது வேறு தமிழ்நாட்டு உணவாகவோ இருக்கும். அவரவர் தாய்நாட்டு முறைப்படி இரவு உணவு அமைவது வழக்கமாகும். தமிழ் முறைப்படி சமையல் செய்வதற்கு எல்லா வகையான பொருள்களும் இறக்குமதி செய்யப் பட்டு வருவதால் இது இலகுவாக இருக்கின்றது. இட்லி, தோசை, உப்புமா, வடை போன்றவை செய்யப்படுகின்றன. அத்துடன், கையால் உணவருந்தும் முறையும் தொடர்ந்து காணப்படுகின்றது. இப்பழக்கங்கள் இரண்டாவது தலைமுறையினரைப் பொறுத்து மாறும் என எதிர்பார்க்கலாம்.

சிறப்பு வைபவங்களும், முடியுமானவரை தமிழ்ப் பண்பாட்டுக் கமைய நடத்தப்படுகின்றன. திருமண வைபவம் கோயிலில் அல்லது பொது மண்டபம் ஒன்றில் தாலி கட்டி நடத்தப்படுவது வழக்கமாகும். மரணக் கிரியைகளைப் பொறுத்துத் தவிர்க்க முடியாத வகையில் மாற்றங்கள் புகுத்தப்பட்டு வருகின்றன.[20] ஏனைய குடும்ப வைபவங்கள் ஆஸ்திரேலியப் பண்பாட்டினால் பாதிக்கப்பட்டுப் படிப்படியாக மாறி வருகின்றன.

தமிழர்களிடையே தொடர்ந்து தெய்வ வழிபாடு முக்கியத் துவம் பெற்று வருகின்றது. கடந்த இருபது ஆண்டுக் காலத்திலே

---

20. மரணக் கிரியைகள் தமிழர்களுடைய பாரம்பரிய சமுதாய அமைப்புடன் பின்னிப்பிணைந்தவை. அத்தகைய கிரியைகளை அச்சமுதாயப் பின்னணியிலிருந்து பிரித்து வேறொரு பின்னணி யில் அப்படியே மாற்றிவிட முடியாது. ஆயினும் இது தொடர் பாக மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. எடுத்துக்காட்டாக, 1986 திசம்பர் 31இல் சிட்னியில் இலங்கையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் நவரத்தினம் அவர்களுடைய மரணக் கிரியைகள் நடந்தபோது, அடையாள முறையிலேயே சில முக்கிய கிரியை கள் நடத்தப்பட்டன. தகப்பனுக்கு மகன் கொள்ளிவைப்பது தமிழர் மரபில் முக்கியமான கிரியை. இச்சந்தர்ப்பத்தில் நவரத் தினத்தின் மகன் கொள்ளிக்குப் பதிலாக, சடலத்துக்கு அருகே வைக்கப்பட்டிருந்த குத்துவிளக்கை மோட்டார் வண்டியில் எடுத்துக்கொண்டு மயானத்துக்குச் சென்றார். அதேபோல, அவருடைய முடியின் ஒரு சிறு பாகத்தையே அடையாளமுறை யில் வெட்டினர்.

தான் இவர்கள் குறிப்பிடத்தக்க தொகையினராக இங்குக் குடியேறியதால் கூட்டு வழிபாட்டுக்குதவும் கோயில்கள் அமைக்கப் படுவது தாமதமாயிற்று. 1985இலே தான் ஆஸ்திரேலியாவில் முதலாவது இந்துக் கோயில் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இது ஹெலென்ஸ்பர்க் (Helensburgh) என்னும் இடத்தில் அமைந்துள்ள திருவேங்கடேஸ்வரர் ஆலயமாகும். சிட்னி நகரிலிருந்து 46 கிலோ மீட்டர் தெற்கே அமைந்துள்ள இக் கோயிலைத் தமிழரும் பிற இந்தியர்களும் கட்டிப் பரிபாலித்து வருகின்றனர். இங்கு நாள்தோறும் பூசை நடந்து வருவதுடன், சிறப்பு விழாக்களும் நடை பெறுகின்றன. சனி ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுதலான தமிழ் மக்கள் இங்கு வழிபாட்டுக்குச் செல்வர்.

தமிழருடைய வழிபாட்டுக்குரிய சிறப்புத் தெய்வமாக முருகன் கருதப்பட்டு வருவதனால், இத் தெய்வத்துக்கும் ஒரு கோயில் அமைக்கவேண்டும் என்ற இயக்கம் சிட்னியில் வலுப்பெற்று வருகின்றது. இவ்வியக்கத்தினர் தற்பொழுது சிட்னியிலுள்ள ஸ்ரத்பீல்ட் (strathfield) என்ற புற நகரில் தற்காலிகமாக முருகன் சிலை வைத்து வழி பட்டு வருகின்றனர். வெள்ளிக்கிழமைகளில் இங்கு வழிபாடு நடைபெறுகின்றது.

தெற்கே மெல்போனிலும் பெருமளவில் தமிழர்கள் வாழ்ந்தாலும், இன்னும் அங்கு அவர்கள் ஒரு கோயில் கட்டவில்லை. தற்பொழுது மண்டபம் ஒன்றில் கூட்டு வழிபாடு மட்டுமே நடத்தப்படுகின்றது. கோயில் கட்டுவதற்கான தீவிர முயற்சிகள் தற்பொழுது எடுக்கப்படுகின்றன.

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் பக்தர்கள் அனைத்து ஆஸ்திரேலிய நகரங்களிலும் இருக்கிறார்கள். அவர்கள் வியாழக் கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூடி வழிபாடு நடத்துவதிலும் சிறுவர்களுக்குப் 'பாலவிகாஸ்' என்ற பள்ளி நடத்துவதிலும் சிறப்பு விழாக்கள் நடத்துவதிலும் ஈடுபடுவர்.

ஆஸ்திரேலியாவிலே இந்து மதத்துடன் தொடர்புடைய புது இயக்கங்களாகிய ஹரே கிருஷ்ணா இயக்கமும் ஆனந்த மார்க்க இயக்கமும் செல்வாக்குப் பெற்றுள்ளன. ஹரே கிருஷ்ணா இயக்கத்தினர் அடிலயிட் (Adelaide), பிரிஸ்பேன் (Brisbane), கேயன்ஸ் (Cairns), கேன்பெரா (Canberran), ஹோபாட் (Hobart), மெல்போன், சிட்னி, பேர்த் (Perth), சர்பேஸ் பரடைஸ் (Surfer's Paradise), கோலோ (Colo), மேவிலம்பா (Murwi

llumbah), ரிவெரினா (Riverina) ஆகிய இடங்களில் கோயில்களும் ஆசிரமங்களும் அமைத்துள்ளனர். ஆனால் இந்த இயக்கத்தில் ஒரு சில தமிழர்களே பங்கு கொள்கின்றனர்.

தமிழர்கள் நவராத்திரி, சரஸ்வதி பூசை, தீபாவளி, பொங்கல், புத்தாண்டு போன்ற விழாக்களை இந்நாட்டிலும் கொண்டாடு கிறார்கள். இவற்றைக் கூட்டாகக் கொண்டாடுவதற்குப் பொது இடங்கள் தமிழருக்கென்று இல்லாமை ஒரு குறைபாடாகும். சிட்னியில் வாழும் தமிழர் இவ்விழாக்களை வெங்கடேஸ்வரர் கோயிலில் கொண்டாடுவர். இந் நாட்டுச் சூழலில் வாழ்வதால் அங்குப் புதிய விழாவாக ஏனைய ஆஸ்திரேலியரும் கொண்டாடும் கிறித்தவப் புத்தாண்டும் கொண்டாடப்படுகின்றது. 1986 திசம்பர் 31 இரவு அக் கோயிலில் தமிழ் மக்கள் கூடி, இசைக் கச்சேரி நடத்தி, நள்ளிரவு புத்தாண்டு பிறந்ததும் பூசை, அர்ச்சனை ஆகியவற்றைச் செய்கின்றனர். வீடுகளிலும் தீபாவளி, சரஸ்வதி பூசை ஆகிய பண்டிகைகள் நடத்தப்படுவது வழக்க மாகும். எனினும் தமிழ்நாட்டிற் போலல்லாது மிகவும் அடக்க மாகவே இவை கொண்டாடப்படுகின்றன.

பொது வாழ்க்கை ஈடுபாடுகளை எடுத்துக் கொண்டால் தமிழர் இன்னும் இத்துறையிலே குறிப்பிடத்தக்க வகையில் ஈடுபடத் தொடங்கவில்லை எனலாம். ஒரு சிலர் இந்நாட்டு அரசியல் கட்சிகளில் சேர்ந்து நாடாளுமன்ற உறுப்பினருக்கு உதவி புரிந்தாலும், தேர்தல்களில் தீவிரமாக ஈடுபடும் அளவுக்கு அரசியலில் தமிழர் பங்கு கொள்ளவில்லை.[21]

ஆஸ்திரேலியத் தேசிய அரசியலில் பங்கு கொள்ளா விட்டாலும், தத்தம் நாடு சார்ந்த அரசியலில் தமிழர்களுக்கு ஈடுபாடு உண்டு. இந்த வகையில் இலங்கையிலிருந்து வந்த தமிழர் தீவிரமாக இலங்கை அரசியல் விவகாரங்களில் ஈடுபாடு கொண்டுள்ளனர். இலங்கையில் தமிழர் நடத்தும் ஈழப் போராட்டத்தில் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு. ஒவ்வொரு

---

21. இதற்கு அங்குமிங்குமாகச் சில விதிவிலக்குகள் உள. எடுத்துக் காட்டாக, ஆப்பிரிக்காவில் தொழில்புரிந்து பின்னர் இங்கு வந்து குடியேறிய பொன்னுசுவாமி நாடார் என்பவர் பல முறை சிட்னியின் நாடாளுமன்றத் தொகுதிகளிலும் நகராட்சித் தொகுதிகளிலும் வேட்பாளராகப் போட்டியிட்டி ருக்கிறார். இவர் Uninflated Movement Party எனத் தானே ஒரு கட்சியை அமைத்து 1986இல் ரொக்டேல் (Rockdale) இடைத்தேர்தலில் போட்டியிட்டு 67 வாக்குகளைப் பெற்றார்.

மாநிலத் தலைநகரிலும் தேசியத் தலைநகரிலும் ஈழத் தமிழர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.[22] இவை, ஈழப் போராட்ட இயக்கங்களுக்குச் சார்பாகக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தி, ஆஸ்திரேலிய அரசுக்கு விண்ணப்பங்கள் செய்து, செய்தித் தாள்களுக்கும் பிற தொடர்பு சாதனங்களுக்கும் எழுதிப் பலவகை யாலும் அரசியலில் ஈடுபட்டு வருகின்றன.

ஆஸ்திரேலியா தொழில், விவசாயம் ஆகிய துறைகளில் முன்னேற்றமடைந்த நாடு. இதனால் இங்குக் குடியேறுகின்ற பல்வேறு இனத்தவர்களும் இத்துறைகளில் ஈடுபாடு கொள்ள வாய்ப்புக்கள் பல உள. ஆனாலும் தமிழர் இன்னும் இத்துறை களில் பெரும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கவில்லை. எத்துறையில் இங்குத் தமிழர் பெயர் பெற்று விளங்குகிறார்கள்என வினவினால் தற்பொழுது கல்வித் துறையைத் தான் குறிப்பிடவேண்டும். இத் துறையில்தான், சிறப்பாகப் பல்கலைக்கழகங்களில், ஒரு சில தமிழராவது முன்னணிக்கு வந்துள்ளனர். முன்னர் குறிப்பிட்டது போல, பேராசிரியர் சின்னப்பா அரச ரத்தினம், பேராசிரியர் எலியேசர் ஆகியோர் தத்தம் துறைகளில் சிறப்புப் பெற்ற பேராசிரியர்களாவர். 1978இல் வெளிவந்த Notable Australians (குறிப்பிடத்தக்க ஆஸ்திரேலியர்) என்ற நூலில் பேராசிரியர் அரசரத்தினம் ஒரு குறிப்பிடத்தக்க ஆஸ்திரேலியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.[23] பேராசிரியர் எலியேசர் லத்ரோப்

---

22. இவையாவன : டார்வின் தமிழ்க் கழகம் (டார்வின்), மேற்கு ஆஸ்திரேலியத் தமிழ்க் கழகம் (பெர்த்), தென்ஆஸ்திரேலிய இலங்கை அகதிகள் கழகம் (அடிலயிட்), மெல்போன் இலங்கைத் தமிழ்ச் சங்கம் (மெல்போன்), கன்பெராத் தமிழ்க் கழகம் (கன்பெரா), ஈழத் தமிழர் கழகம் (சிட்னி), நியுக்காசில் தமிழ்க் கழகம் (நியுக்காசில்), குவீன்ஸ்லாந்துத் தமிழ்க் கழகம் (பிரிஸ்பென), வட குவீன்ஸ்லாந்துத் தமிழ்க் கழகம் (வடமக்கி) இவை பாப்புவா - நியுகினி, நியுசிலாந்து பிஜி ஆகிய நாடு களிலுள்ள தமிழ்க் கழகங்களுடன் இணைந்து தென் துருவத் தமிழ்க் கழகங்களின் கூட்டமைப்பு (Australasian Federation of Tamil Associations) என்ற அமைப்பினை உருவாக்கி யுள்ளன.

23. யாழ்ப்பாணத்து நவாலியைச் சொந்த ஊராகக் கொண்ட பேராசிரியர் அரசரத்தினம் 1930 மார்ச் 20இல் பிறந்தவர். யாழ்ப்பாணக் கல்லூரி, இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகிய வற்றில் கல்விகற்று, 1951 முதல் 1961வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் விரிவுரையாற்றிய பின், 1961 முதல் 1968 வரை மலாயாப் பல்கலைக்கழகத்து இந்தியவியல் துறையில் விரிவுரையாற்றி, 1968 முதல் 1972

பல்கலைக்கழகத்தில் கௌரவம் பெற்ற ஓர் அறிஞராக மட்டுமன்றி மெல்போன் தமிழர்கள் மத்தியிலே பொது நல சேவையாளராகவும் நற்பெயர் பெற்றுள்ளார். தமிழர் தொடர்பான விவகாரங்களில் இவர் மிகவும் ஈடுபாடுடையவர்.[24] இவர்களைவிடப் பல இளம் அறிஞர்கள் பொதுவாக எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் சிறப்புப் பெற்று வருகிறார்கள்.[25] எனினும், இவர்களைக் காட்டிலும் பொதுமக்கள் பார்வையில் சிறப்புப் பெற்றிருப்பவர்கள் நாடெங்கிலும் பரந்து தொழில் புரியும் மருத்துவத்துறையினர்

வரை அதே பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராகக் கடமையாற்றி, 1973 முதல் ஆஸ்திரேலியாவில் நியுஇங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். லண்டன் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ஹவாய் பல்கலைக்கழகம், ரெக்ஸாஸ் பல்கலைக்கழகம், கல்கத்தா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இவர் ஆராய்ச்சிப் புலமைப் பதவிகளை வகித்துள்ளார்.

24. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேராசிரியர் எலியேசர் 1918 ஜூன் 12இல் பிறந்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர், 1949முதல் 1959 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகவும், 1959முதல் 1968 வரை மலாயாப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகவும் பணியாற்றினார். பின் 1968 முதல் 1983 வரை ஆஸ்திரேலியாவில் லத்ரோப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராக விளங்கி ஓய்வு பெற்றார்.

25. 1986இல் ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களில் பதவி பெற்றிருந்தோர் :
என். விஸ்வநாதன் (ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழகம்),
வி.எஸ். ஸ்ரீநிவாசன் (ஆஸ்திரேலிய தேசியப்பல்கலைக்கழகம்),
கே. கோபாலசுவாமி (தென் ஆஸ்திரேலிய பிலிண்டர்ஸ் பல்கலைக்கழகம்),
பி. ஸ்ரீநிவாசன் (மொனாஷ் பல்கலைக்கழகம்),
டி. ஸ்ரீதர் (மொனாஷ் பல்கலைக்கழகம்),
வி. கிருஷ்ணபிள்ளை (மொனாஷ் பல்கலைக்கழகம்),
ஏ ஆர். பத்மநாபன் (மொனாஷ் பல்கலைக்கழகம்),
ஏ.எச். சதாநந்தன் (மொனாஷ் பல்கலைக்கழகம்),
எஸ். வள்ளியப்பன் (நியு சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம்),
வி.வி. நாயனார் (நியு சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம்),
எஸ். இராமகிருஷ்ணன் (சிட்னிப் பல்கலைக்கழகம்),
தி. ஸ்ரீராமநாதன் (சிட்னிப் பல்கலைக்கழகம்),
எம். சொர்ணராஜா (தஸ்மேனியப் பல்கலைக்கழகம்)
கே. சிவசிதம்பரம் (மேற்கு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகம்),
எம். சிவக்குமார் (வுல்லொங்கொங் பல்கலைக்கழகம்),
எஸ். ராஜகோபாலன் (வுல்லொங்கொங் பல்கலைக்கழகம்).

எனலாம். இவர்கள் இந்நாட்டுக்கு வந்து சித்தியும் செல்வமும் பெற்றிருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

விளையாட்டுத் துறையில் இந்நாட்டுத் தமிழர் இன்னும் குறிப்பிடத்தக்க ஈடுபாடு கொள்ளவில்லை. பெரும்பாலும் கிரிக்கெட், டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்களைத் தமிழ் இளைஞர்கள் விரும்பி விளையாடுவார்கள். இந்த இளைஞர்கள் விளையாட்டுக் கழகங்களை அமைத்துள்ளனர். இக்கழகங்களுக்கிடையே கிரிக்கெட் போட்டி நடைபெறுவதுண்டு. ஆனால் மாநில நிலையிலோ தேசிய நிலையிலோ சிறப்புப் பெறும் அளவுக்கு இக் கழகங்கள் வளர்ச்சி பெறவில்லை.

கலைத்துறையை எடுத்துக் கொண்டால் நாடளாவிய புகழ் பெற்ற கலைஞர்கள் பலர் தமிழரிடையே இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அப்படிப் புகழ்பெற்ற ஒரேயொருவர் 'பாப்' இசைப் பாடகர் கமல் ஆவர். இவர் மலாயாவிற் பிறந்து இங்கு வந்து குடியேறி, இசைத் தட்டுக்கள் பலவற்றை வெளியிட்டும் மேடைகளிலும் தொலைக்காட்சியிலும் பாடியும் நாடளாவிய சிறப்புப் பெற்றுள்ளார். இசைத் துறையில் இவருக்குப் பரிசுகளும் கிடைத்துள்ளன.

ஆஸ்திரேலியக் கலைகளில் இன்னும் பெரும் ஈடுபாடு இல்லாத போதிலும், தமிழர் தம் பாரம்பரியக் கலைகளாகிய கர்நாடக இசையிலும் பரத நாட்டியத்திலும் ஈடுபாடு கொண்டுள்ளனர். தமிழர்களுடைய பண்பாட்டுக் கழகங்கள் இக்கலைகள் தொடர்பான பொது நிகழ்ச்சிகளைக் காலத்துக்குக் காலம் நடத்தி வருகின்றன. தமிழ்நாட்டிலிருந்தும் கலைஞர்களை வரவழைத்து இந்நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.[26]

கர்நாடக இசையையும் பரதநாட்டியத்தையும் கற்ற தமிழர் இந்நாட்டில் வாழ்வதால், இளம் தலைமுறையினர் இக் கலைகளைக் கற்றுக் கொள்வதற்கும் ஆர்வமுள்ளோர் இக் கலைகளை இரசிப்பதற்கும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. வார இறுதியிலும் விடுமுறை நாட்களிலும் பரதநாட்டிய வகுப்புகள் சில இடங்களிலே நடத்தப் படுகின்றன. சிட்னியில் பரதநாட்டியத்தைக் கற்பதற்குக் பல வாய்ப்புகள் இருப்பதைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

26. சிட்னித் தமிழ்ச் சங்கம் சிட்டிபாபு போன்ற கலைஞர்களை வருவித்து நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றது. 1986 இல் தமிழ் நாட்டு அரச நர்த்தகி சுவர்ணமுகி அவர்கள் ஆஸ்திரேலிய நகர்களில் நிகழ்ச்சிகளை நடத்தினார்.

திருமதி அம்பிகா கருணாநிதி, திருமதி சுசீலா கிரேயிக் (Craig), திருமதி அம்பிகா புச் (Buch), திருமதி ஆனந்தவல்லி சிவநாதன், திருமதி தமயந்தி பால்ராஜ் ஆகியோர் சிட்னியில் நடனக் கலையை வளர்ப்பதற்குத் தொண்டாற்றி வருகின்றனர். திருமதி அம்பிகா கருணாநிதி சிட்னியிலிருந்து பின்னர் மெல்போன் சென்று தன் தொண்டினைத் தொடர்கின்றார். இவர்கள் முயற்சியால் சில பரதநாட்டிய அரங்கேற்றங்கள் கூட நடைபெற்றுள்ளன.[27] ஆனந்தவல்லி சிவநாதன் போன்றவர்கள் சிறப்பு நடன நிகழ்ச்சி களையும் நடத்தி வருகின்றனர்.[28]

கர்நாடக இசையை ஆதரிப்பவர்கள் பலர் ஆஸ்திரேலியத் தமிழரிடையே இருக்கிறார்கள். கர்நாடக இசையை நன்கு கற்றுத் தேர்ந்தோரும் இங்கு இருப்பதனால் இந்த இசை நன்கு வளரு கின்றது.[29] சிட்னியில் மாதந்தோறும் ஒரு நாள் கர்நாடக இசைக் கச்சேரி நடைபெற்று வருகின்றது. மெல்போனிலும் அவ்வாறே இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன, தமிழ் 'பாப்' இசைக் கலைஞர்களும் பலர் இங்கு இருக்கிறார்கள். இவர்களும் இடை யிடையே நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.

---

27. 1986 செப்டம்பர் 20இல் சிட்னியின் சீமூர் தியேட்டர் சென்டரின் எவரெஸ்ட் தியேட்டரில் (Everest Theatre of the Seymour Theatre Centre)) இளம் மாணவியாகிய தேவிகா பாலசுப்பிரமணியத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. இதனை நடத்திவைக்க யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பரதநாட்டியத் துறையில் விரிவுரையாற்றும் செல்வி சாந்தா பொன்னுத்துரை அவர்கள் வந்திருந்தார்கள். அரங் கேற்றம் முடிந்தபின் மூன்றுமாத காலம் இவர் சிட்னியில் தங்கியிருந்து பல சிறுமியர்க்கு நடனப்பயிற்சியளித்து இலங்கை திரும்பினார்.

28. 1986 சூலை 12இல் மேற்படி எவரெஸ்ட் தியேட்டரில் ஆனந்த வல்லி சிவநாதன் அவர்கள் மூன்று மணித்தியாலம் பரதநாட்டிய நிகழ்ச்சி ஒன்றை நடத்திப் பத்திரிகைகளில் பாராட்டுப் பெற்றார்—*Sidney Morning Herald*, 15-7-1986; *Sun-Herald*, 20-7-86 (பக். 106).

29. அண்மையில் ஆஸ்திரேலியாவுக்கு வந்து குடியேறிய தலை சிறந்த கர்நாடக இசைக்கலைஞர்களுள் ஒருவர் மிருதங்க வித்துவானாகிய மதியாபரணம் ரவிச்சந்திரா அவர்களாவர். 1956 மார்ச் 5இல் யாழ்ப்பாணத்தில் பிறந்து, சங்கீத பூஷணம் ஏ.எஸ். இராமநாதன் அவர்களிடம் மிருதங்கம் கற்றுத் தனது பதினோராவது வயதில் அரங்கேற்றம் நடத்தி, இலங்கை, இங்கிலாந்து, ஒல்லாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் பிரபல இசைக்கலைஞர்களுடன் மிருதங்கம் வாசித்துப் புகழ்பெற்ற இவர் 1983இல் இந்நாட்டுக்கு வந்து குடியேறினார்,

ஆக்க இலக்கியத் துறையில் தமிழிலோ ஆங்கிலத்திலோ இன்னும் ஆஸ்திரேலியத் தமிழர் தம் பங்களிப்பைச் செய்யவில்லை. இங்கு அமைக்கப்பட்டுள்ள தமிழ்க்கழகங்கள் காலத்துக்குக் காலம் சஞ்சிகைகளை அல்லது செய்தி இதழ்களை வெளியிட்டாலும், ஆக்க பூர்வமான சிறுகதைகள், செய்யுள்கள் ஆகியவை வெளி வருகின்றன என்று கூறுவதற்கில்லை.[30]

இந்நாட்டில் வாழும் முதல் தலைமுறைத் தமிழருடைய தமிழறிவு நன்றாகவே உள்ளது. இலங்கையிலிருந்து வந்த இளைஞர்கள் தமிழ்மொழியிலேயே கல்வி கற்றவர்கள். தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் தமிழை வீட்டில் அதிகம் பேசுபவர்கள். பிஜித் தமிழர் பலரும் அவ்வாறே பேசினாலும் அவர்களுடைய தமிழறிவு குறைவாகும். சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா, மொரீசியஸ் போன்ற இடங்களிலிருந்து வந்த தமிழர்களுடைய தமிழ் அறிவு பொதுவாக மிகவும் குறைவு எனலாம்.

ஆஸ்திரேலியச் சூழ்நிலையில் வாழும் இரண்டாம் தலை முறைத் தமிழ் மக்களிடையே தமிழறிவு குன்றி வருகின்றது. இவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள் அல்லது சிறுவர்கள். வீட்டில் பெற்றோர் தமிழிலே பேசினாலும், இவர்கள் ஆங்கிலத்தையே தாய்மொழி போலப் பேசப் பழகியுள்ளனர். இதனால் மூன்றாவது தலைமுறை தோன்றும் காலத்தில் அவர்களிடத்தில் தமிழ் அறிவே அற்றுப்போக இடமுண்டு. தம் பிள்ளைகள் தமிழை அறிந்திருக்க

மெல்போனில் பொறியியலாளராகக் கடமையாற்றியபோதும் மாதந்தோறும் சிட்னியில் இசைநிகழ்ச்சிகளில் பங்குபெறுவார். சிட்னியில் சிறந்த பாடகர்களாக விளங்குவோருள் பவானி கோவிந்தன், டாக்டர் இராமநாதன், உமா ஐயர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். 1987 ஜனவரியில் இலங்கையிலிருந்து ஒரு பிரபல வீணைவாத்தியக் கலைஞர் யோகநாயகி தணிகாசலம் அவர்களும் சிட்னியில் குடியேறியுள்ளார். வட பிரதேசத்துத் தலைநகராகிய டார்வினில் கர்நாடக இசைக் கழகம் ஒன்று 1984இல் பதிவுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

30. சிட்னியிலுள்ள சிட்னித் தமிழ்ச் சங்கம் சந்திப்பு என்ற இதழை வெளியிடுகின்றது. சிட்னி தமிழ் மன்றம சங்கமம் என்னும் இதழை வெளியிடுகின்றது. குவீன்ஸ்லாந்துத் தமிழ்ப் ண்பாட்டுக் கழகமும் சங்கமம் என்னும் இதழை வெளியிடு ின்றது. பெர்த் நகரிலுள்ள மேற்கு ஆஸ்திரேலியத் தமிழ்க் ழகம் ஒரு செய்தி இதழை வெளியிடுகின்றது. தென்துருவத் மிழ்க் கழகங்களின் கூட்டமைப்பு தென்துருவ தமிழ் முரசு ன்ற இதழை வெளியிடுகின்றது.

வேண்டும் என்ற ஆர்வம் முதல் தலைமுறையினரிடையே பொது வாகக் காணப்படுகிறது. தமிழ் இங்குப் பயன்படாது என்றும், ஆங்கிலத்தில் திறமை பெறுவதே தம் பிள்ளைகளுக்கு அவசியம் என்றும் எண்ணுவோரும் உளர். தற்பொழுது ஆஸ்திரேலிய அரசு கடைப்பிடிக்கும் கொள்கை சிறுபான்மைச் சமூகங்களுடைய மொழிகள், பண்பாடுகள் ஆகியவற்றைப் பேணுவதற்கு உதவு கின்றது. இதன் காரணமாக, தமிழைக் கற்பிப்பதற்கு வார இறுதி வகுப்புக்களை நடத்த அரசுநிதியுதவியும் வசதிகளும் வழங்குகிறது. இவற்றைப் பயன்படுத்தி ஆர்வமுள்ள பெற்றோர்கள் மாதத்தில் இருமுறையாவது ஞாயிற்றுக்கிழமைத் தமிழ் பள்ளிகளை நடத்து கின்றனர். ஆஸ்திரேலியப் பள்ளிக்கூடங்களிலோ பல்கலைக் கழகங்களிலோ தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதில்லை.

ஆஸ்திரேலியா அனைத்துக் குடிகளுக்கும் சமவாய்ப்புக்களைக் கொடுக்கும் ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடு. இதனால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அனைத்துத் துறைகளிலும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது. இக்கொள்கை நிச்சயமாகத் தமிழ்ப் பெண்களுடைய நிலையை உயர்த்துவதற்கு உதவியுள்ளது. சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து வந்த படித்த பெண்கள் பெருமளவுக்குச் சம உரிமை அனுபவிப்பவர் களாகவே இங்கு வந்துள்ளனர். இந்நாட்டில் தமிழ்ப் பெண்கள் தொழில்புரிய வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இதனால் கணவனும் மனைவியும் வீட்டுப் பணிகளையும் பொறுப்புகளையும் ஏறத்தாழச் சமமாகப் பகிர்ந்து கொள்ளும் வழக்கம் பெருகி வருகிறது எனலாம். இருந்தும், பழைய மரபுகளைப் பேணும் குடும்பங்களிலிருந்து வந்தவர்களைப் பொறுத்து இந்நிலையில் வேறுபாடு உண்டு. அக் குடும்பங்களில் பெண்கள் தொடர்ந்தும் கூடுதலான வீட்டுப்பணியை ஏற்றுள்ளனர். ஆனால் இங்கு வளரும் இரண்டாவது தலைமுறைப் பெண்கள் அவ்வாறில்லாது சம உரிமையை அனுபவிப்பார்கள் என்று கூறலாம். அவர்களுடைய கல்வி, சூழல் ஆகியவை இதற்குக் காரணங்களாய் அமையும்.

தற்பொழுது இந்நாட்டில் வாழும் தமிழர் பெரும்பாலும் முதல் தலைமுறைக் குடிகளாக இருப்பதால் அவர்களுக்கும் தாய் நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. நீண்டகால விடுமுறைக்குப் பலர் தாய் நாடுகளுக்குச் சென்றுவருவதோடு, திருமண உறவுகளையும் தாய்நாடுகளுடனேயே வைத்திருப்பர். அத்துடன் தமிழ்நாட்டைத் தாயகமாகப் பெற்றிராதவர்கள் கூட ஒரு முறையாவது தமிழ்நாட்டுக்குச் சென்று வருவர். சிறப்பாக,

இலங்கையிலிருந்து வந்த தமிழரும் மலேசியத் தமிழரும் தமிழ் நாட்டுக் கோயில்களுக்குச் செல்வது ஒரு வழக்கமாக அமைந்து விட்டது. தமிழ்நாட்டுடன் கூடுதலாகச் சமயத்தொடர்பு வைப்பது தான் இவர்கள் விருப்பம். பலர் பண்பாட்டுத் தொடர்புகளையும் விரும்பி ஆதரிக்கிறார்கள். ஆனால் இரண்டாவது தலைமுறை யினர் அத்தகைய தொடர்புகளைக் குறைத்துக் கொள்வர் என்றே கூறவேண்டும்.

ஆஸ்திரேலியாவில் தமிழர்கள் பிறசமூகத்தினரால் எதிர்ப் பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதனால் இங்கு இலகு வாகத் தமிழ்மக்கள் புதிய சூழலுக்கேற்பத் தங்கள் வாழ்க்கை முறை களையும் மாற்றியமைத்துப் பிரச்சனைகள் இல்லாது குடியேறி யுள்ளனர். இவர்கள் கல்வி மூலமே முன்னேற்றத்தை நாடுவதால், தங்கள் பிள்ளைகளின் கவனத்தை ஆங்கில அறிவைப் பெறுவதி லும் உயர்ந்த கல்வியைப் பெறுவதிலும் திருப்பியுள்ளனர். தங்கள் பிள்ளைகள் பாரம்பரியப் பண்பாட்டைப் பேணவேண்டும் என்ற நோக்கமும் தமிழறிவை நன்கு பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கமும் இவர்கள் மனதில் அதிக முக்கியத்துவத்தைப் பெற வில்லை. இதனால், எதிர்காலத்தில் இந்நாட்டில் தமிழர் ஒரு தனிச் சமூகத்தினராக இருக்க முடிந்தாலும், தமிழ்பேசித் தமிழ்ப் பண் பாட்டை வளர்க்கும் ஒரு சமூகத்தினராக இருப்பர் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. இது தமிழருக்கு மட்டுமன்றி இங்குக் குடியேறிய எல்லாப் பிற சமூகங்களுக்கும் பொதுவான எதிர்கால நிலையாகும். மொழியாலும் பண்பாட்டாலும் பிற ஆஸ்திரேலியரிடமிருந்து வேறுபடாத ஒரு நிலை தோன்றியதும் இனக்கலப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம். தற்பொழுது மிகக் குறைவாகவே இனக் கலப்பு ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் பல இனங்கள் இன்று வந்து குடியேறிக் கொண்டிருக்கின்றன. முதலாவது தலைமுறைகள் வேறுபட்ட பண்பாடுகளுடன் காணப்பட்டாலும், அடுத்து வரும் தலை முறைகள் அவ்வாறு இருக்கமாட்டா. இவை ஒன்றிணையா விட்டாலும், ஒற்றுமைப்பட்டு ஒரு புதிய ஆஸ்திரேலியச் சமூகம் தோன்றும் என்பதை எதிர்பார்க்கலாம். அதன் தோற்றத்துக்குத் தமிழர்களும் தங்கள் பங்களிப்பைச் செய்வர் என்பதில் ஐயமில்லை.

10. South Africa

C. Kuppusami

The first batch of labourers to work in the sugar fields of South Africa arrived from Madras on 17th Nov. 1860 at Durban. There after continuous arrivals took place from Madras and Calcutta. Among the Indian labourers 60% came from Madras mostly Tamils. Labour traders went as passangers, and the descendents of these settlers are the contemporary South African Tamils. Private Tamil schools and the weekly 'Viveka Banu' kept Tamil alive. Now English is becoming the home language. Many new bodies have been established for the purpose of reviving Tamil and rebuilding its culture.

BACK GROUND

About the] year 1855 White sattlers in the British Colony of Natal* discovered that the coast lands of Natal possessed tremendous potential for sugar farming provided reliable labour could be found. They had learnt that in the nearby Indian Ocean Island of Mauritius Indian labour helped to develop a thriving sugar industry. Natal wanted to do the same. The Whites petitioned their Lieutenant Governor

---

* Today Natal is one of the four Provinces that make up the Republic of South Africa. Natal has the largest concentration of Indians in the country. six lacs out of a total of eight.

to permit the legal importation of labour from India and to set up machinery for making representations to the Indian Government to sanction the supply of such desired labour. India reluctantly agreed to provide a regular but limited supply under certain conditions.

On 17 November 1860, the first batch of labourers arrived from Madras in the S S Truro and disembarked at Durban. Thereafter regular arrivals from Madras and Calcutta took place. Referred to as 'indentured Indian labourers' they were allocated to various sugar farmers. Some were sent to the interior of the Colony to work in the coal mines whilst others were taken up by businessmen and merchants in Durban.

Speaking a variety of languages (predominantly Tamil) and professing, in the main, the Hindu faith the immigrants hopefully set foot on a strange land with their labour potential as their only wealth and their cultural heritage as their baggage. They had not bargained for the suffering they were soon to be subjected to. However, as a result of their coming, sugar farming in the Colony became a very profitable industry as it still is. Among the Indians who came as labourers just over sixty per cent were from the Madras Presidency. Though their home languages were Tamil, Telugu, Malayalam or Canarese they were all able to communicate with one another in Tamil.

In the wake of indentured Indians followed traders who came with their silks, spices, rice and condiments. They had a better education than the labourers. They were known as 'passenger' Indians because they paid their own passages. They hailed mainly from Mauritius and what was then known as the Bombay Presidency. Later a large number of 'passenger' Indians settled in the Transvaal. Thus, within a period of forty years, the immigrant Indian community represented a broad spectrum of the people of India.

On the expiry of their terms of indenture the Indians took to several forms of occupation. They either became gardeners and fisherman or turned to self-employment activities such as pottery, basket weaving and home construction. Later their children who received a modicum of English education became waiters, clerks or teachers in the few government-assisted schools.

Tamil Identity

At all times the Indian was conscious of his cultural identity. Among the indentured labourers some were literate in varying degrees in Tamil or other Indian language. There were also some who could speak and read in more than one Indian language. Some of the passenger Indians who were Tamils were well educated in English and in the mother tongue. Thus from a few scholars to a number of less educated men there was the nucleus of teachers of Tamil to propagate Language and Culture. In the sugar Estates tuition in Tamil was given to children in the late afternoons. Elsewhere private Tamil schools were established on the initiative of some dedicated individual, where the teacher charged a small fee for his services. In Durban the main seaport town, educated Tamils kept the language (both spoken and written) very much alive. One Virudachalam Pillay, a passenger Indian from Madras had a small business in Durban, ran a private Tamil school, later opened a printing press and published a Tamil Weekly known as the "Viveka Banu" which was avidly read by everybody. Two of his outstanding students, S. M. Pillay and G. R. Naidoo performed dedicated service to the Tamil community for many years.

The large number of private Tamil schools both in Natal and in the Transvaal is diminishing because Tamil is now being taught as a subject in government schools. Many students take advantage of the courses provided by the Tamil Department of the University of Durban-Westville, for the B.A. Degree.

A meticulously and lovingly developed infra-structure to nurture, maintain and propagate Indian languages and culture was adversely affected by the operation of the Group Areas Act of 1950 which disrupted settled population groups forcing them to move from their cherished homes to areas that were being newly developed. More and more English medium schools were established and English was fast becoming the home language bringing concern to many a vernacular educated or interested individual.

Although the word Tamil conjures up the use of and the cultural activities connected with the language, it must be mentioned that except in isolated instances the use of the language in its spoken form is negligible. It is in the social and cultural fields that customs and traditions are being observed. Festivals, weddings and funerals are the main social occasions. Tamil is being used for the singing of devotional songs. Transliteration plays a part to enable those who cannot read Tamil. Women's groups with their young and old members and with a sprinkling of males come together to sing the Thevaram and other devotional songs at Tamil funerals. They also conduct prayer services on Sundays.

Many new bodies have been established for the purpose of reviving Tamil and rebuilding its culture. To mention a few; there is the Natal Tamil Vedic Society; South African Tamil Federation; Tamil Advancement Society and so on. Religious organisations such as the Saiva Siddhantha Sangam, Arutpa Kazhagam are doing good work in this direction. Then we have a large number of Hindu temples to keep alive religious practices. One of four Hindu temple recognised and certified by the State as National Monuments is the Mariamman Temple in Pretoria. Its Raja Gopuram is indeed a magnificant piece of architecture.

To produce greater awareness of Tamil language and culture the Clairwood Tamil Institute conducts a private Tamil school, organises Tamil cultural functions and has recently been giving public recognition to individual especially elders who rendered dedicated service to Tamils by the award of a Pon-Aadai.